பக்கங்கள்: பதினெட்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 10 புதன்கிழமை (26.08.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 273

# ஈழத்தமிழருக்கு அதிகாரப் பகிர்வுத் தீர்வு; உறுதிப்பாட்டை இந்தியா எதிர்பார்ப்பு

## வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா கருத்து



புதுடில்லி, ஓகஸ்ட் 26

இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்து அளிக்கும் அரசியல் தீர்வு ஒன்றை அந்த நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்குரிய உறுதிப்பாட்டை அந்நாட்டு அரசு விரைவில் வெளியிட வேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கிறது.

இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா.

வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களில் பணியாற்றும் அதிகாரிகளுக்கான மாநாடு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இங்கு நடை பெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் கிருஷ்ணா, இலங்கை அரசு தமிழர் பிரச்சினைக்கான அதிகாரப் பகிர்வுத்தீர்வை வழங்கும் தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தவேண்டும் என்று கூறினார்.

அமைச்சர் கிருஷ்ணா மாநாட்டில் இலங்கை விவகாரம் குறித்து மேலும் தெரிவித்தாவது:-

இலங்கைத் தமிழருக்கு உரிய அதிகாரப் பகிர்வுகள் விரைவில் வழங்கப்படுவதற்கான உறுதிப்பாட்டை இலங்கையிடமிருந்து இந்தியா எதிர்பார்க்கிறது.

இந்த உறுதிப்பாடு இலங்கைக்கான மிகச் சிறந்த அரசியல் தீர்வாக அமையும்.

புலிகள் அமைப்பு தற்போது முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த உறுதிப்பாடு மிக அவசியமாகக் கருதப்படுகிறது.

அதேவேளை, போரால் இடம்பெயர்ந்து முகாம்களிலுள்ள தமிழ் மக்களுக்கு விரைவில் புனர்வாழ்வு அளிக்கப்படும் என இந்தியா எதிர்பார்க்கிறது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். தளபதியாக மேஜர்ஜெனரல் மார்க் பதவியேற்கிறார்

யாழ்ப்பாணம், ஓக.26

யாழ்.மாவட்டத்தில் புதிய படைத் தளபதியாக மேஜர் ஜெனரல் எல்.பி.ஆர். மார்க் பதவியேற்க உள்ளார்.

யாழ்.மாவட்ட படைகளின் தளபதியாக பணியாற்றிய மேஜர் ஜெனரல் ஜி.பி.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மாகாண சபைத் தேர்தல் வேட்பு மனுத்தாக்கல் மும்முரம்

கொழும்பு, ஓக. 26

எதிர்வரும் தென் மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தயார் செய்யும் நடவடிக்கைகளின் இறுதிக்கட்ட வேலைகளில் அரசியல் கட்சிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

தென்மாகாண சபை கடந்த ஓகஸ்ட் 03ஆம் திகதி கலைக்கப்பட்டது. தேர்தல்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்குளியில் தீவிர தேடுதல்; யாழ். இளைஞர்கள் இருவர் கைது!

கொழும்பு, ஓக. 26

கொழும்பு, மட்டக்குளி முகத்துவாரம் பிரதேசத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற மற்றுமொரு தேடுதல் நடவடிக்கையில் இரண்டு தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற தேடுதலில் ஈடுபட்ட இராணுவத்தினர் தமிழர்கள் பலரை விசாரணைக்கு உட்படுத்தினர்.

இதன்போது கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களும் முகத்துவாரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

முகத்துவாரம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையில் தற்கொலைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தும் அங்கி ஒன்றும் சிறியரக ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதுடன் இளைஞர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டிருந்தது தெரிந்ததே. (அ-சி)

## மாத்தறையிலிருந்து பருத்தித்துறைக்கு சாரணர்கள் மூவர் சமாதான யாத்திரை

### தெவேந்திர முனையிலிருந்து நேற்றுக்காலை ஆரம்பமானது

கொழும்பு, ஓக.26

மாத்தறையில் இருந்து பருத்தித்துறைக்கு சமாதான பாத யாத்திரையை மூன்று சாரணர்கள் நேற்றுக் காலை ஆரம்பித்துள்ளனர். மாத்தறை தெவேந்திரமுனையில் இருந்து இப்பாத யாத்திரை ஆரம்பமானது.

பி.எல். ஹசன் சணங்க, காந்த குணவர்த்தனா, பிரசாத் மஞ்சுல ஆகிய மூன்று சாரணர்களே இந்தப் பாதயாத்திரையை நடத்துகின்றனர்.

வவுனியாவை வந்தடைந்து அங்கிருந்து ஏ-9 ஊடாக பாத யாத்திரையாக யாழ்ப்பாணம் வந்து பருத்தித்துறை முனையில் யாத்திரையை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழப் பிரச்சினையில் ஒபாமாவின் கவனத்தை ஈர்க்க தமிழ் இளைஞர்கள் மூவர் 70 நாள் நடைப்பயணம்

### சிக்காக்கோவிலிருந்து வாஷிங்ரனுக்கு

வாஷிங்ரன், ஓக.26

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பராக் ஒபாமா அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமெரிக்காவின் சிக்காகோ நகரத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் மூவர் நீண்ட நடைப்பயணப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

''சிக்காகோ நகரத்திலிருந்து வாஷிங்ரன் நகரம் வரை நீண்ட நடைப் பயணம் ஒன்றை மேற்கொள்வதன் மூலம் இலங்கையின் சிவில் யுத்தத்தில் அப்பாவித் தமி ழர்கள் 85 ஆயிரம் பேர் அநியாயமாகக் கொல்லப்பட்டிருப்பதை பராக் ஒபாமா அரசின் மேலான கவனத்துக்கு கொண்டு வர நாங்கள் முயற்சிக்கின்றோம்'' என்று அவர் கள் கூறினர். இந்த நடைப் பயணத்துக்கு ''மௌனத்தைக் கலைப்போம்'' என்று பெயர் இடப்பட்டுள்ளது.

சிக்காகோ நகரத்திலிருந்து வாஷிங்ரன் நகரம் வரை கால்நடையாக செல்வதற்கு சுமார் 70 நாள்கள் எடுக்கும் என்று நம்பப்ப டுகிறது.

இந்த 70 நாள் கால்நடைப் பயணத்தின் பயனாக ஒபாமா அரசின் மூலம் ஈழத் தமிழர்களுக்கு விமோசனமும், நிவாரணமும் கிடைக்கும் என்றும் தாங்கள் நம்பு கின்றனர் என்று கல்லூரி மாணவர்கள் மூவ ரும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (அ-சி)

## வெள்ளை வான்களில் முகாம்களுக்கு வந்து கடத்தல்!

கொழும்பு, ஓக. 26

வவுனியாவில் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் உள்ளவர்கள், 'டொல்பின்' ரக வெள்ளை வான்களில் வருபவர்களால் நாளாந்தம் கடத்தப்படுகின்றனர் என முகாமில் உள்ளவர்களை மேற்கோள் காட்டி பி.பி.ஸியின் சிங்கள சேவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பி.பி.ஸியின் சிங்கள செய்திச் சேவை மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

வவுனியாவில் முகாம்களில் உள்ள மக்கள் வான்களில் வருபவர்களால் நாளாந்தம்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தடையை நீக்கக் கோரும் மனு அமெரிக்க நீதிமன்றத்தால் நிராகரிப்பு

விடுதலைப் புலிகளை பயங்கரவாதப் பட்டியலிலிருந்து நீக்கக் கோரும் மனுவினை அமெரிக்க நீதிமன்றம் நிராகரித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ஜோர்ஜ் டபி ள்யூ புஷ் 2001 ஆம் ஆண்டில் சில குழுக்களை பயங்கரவாதக் குழுக்களெனப் பிரகடனம் செய்யவும் அவற்றின் சொத்துக்களை முடக்கிவைக்கவும், அவற்றுக்கான உதவிகளையும் சேவைகளையும் தடை செய்யவும் அமெரிக்க அரசிற்கு அதிகாரமளித்து பிறப்பித்த நிறைவேற்று கட்டளை ஒன்றுக்கு எதிராக அமைப்பு ஒன்று பயங்கரவாதப் பட்டியலிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை நீக்கிவிடுமாறு தாக்கல் செய்த மனுவை அமெரிக்க லொஸ் ஏஞ்ஜல்ஸ் மாநில நீதிமன்றம் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

## தமிழகத்தில் கைதான யாழ்.இளைஞர்களை ஒப்படைக்கக் கோருகிறது இலங்கைப் பொலிஸ்

சென்னை, ஓக. 26

இராமேஸ்வரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட யாழ். இளைஞர்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு இலங்கைப் பொலிஸார் கோரியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இராமேஸ்வரம் கரையோரப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ள யாழ். இளைஞர்களை இலங்கைப் பொலிஸாரிடம் பாரமளிக்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

அனுசன், சரத்பாபு, திருக்குமரன் ஆகிய இவர்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டிருந்தவர்கள் எனவும் இவர்களுக்கு எதிராக நீதிமன்றால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது.

பொலிஸாரின் வேண்டுதலைக் கருத்தில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அமரர் அமிர்தலிங்கத்தினால் பொது நூலகத்தில் திரை நீக்கப்பட்ட நினைவுக்கல்லை மீளப் பொருத்துவதற்கு புதியசபை முன்வர வேண்டும்

## யாழ்.மாநகர சபையின் புதிய நிர்வாகத்திடம் முன்னாள் ஆணையாளர் சிவஞானம் வேண்டுகோள்

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் அ.அமிர் தலிங்கத்தினால் யாழ்.பொது நூலகம் 1984ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் திகதி மீளவும் திறந்து வைக்கப்பட்டது. அந்த வைபவத்தின் ஞாபகச்சின்னமாக ஒரு நினைவுக் கல்லும் பொருத்தப் பட்டு அமரர் அமிர்தலிங்கத்தினால் திரை நீக்கம் செய்யப்பட்டது. எனினும் தற்போது அந்த நினைவுக்கல் அந்த இடத்தில் காணப்படவில்லை. எனவே அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரு காலத்துத் தமிழினத் தலைவனுடைய வரலாற்று நிகழ்வு தொடர்பானது என்பதால், தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள மாநகர சபை நிர்வாகம் அதனை மீளப் பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அமிர்த லிங்கத்தின் பிறந்த தினமான இன்றைய (ஓகஸ்ட் 26) நாளில் இந்த வேண்டுகோளை விடுக்கின்றேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம்.

இது தொடர்பாக அவர் யாழ்.மாநகர ஆணைய்யாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

01.06.1981ஆம் திகதி நள்ளிரவில் சட்டத்தின் பாதுகாவலர்களாலேயே எரியூட்டப்பட்டு அழிக்கப்பட்ட யாழ்ப்பாணம் பொதுநூலகத்தை மீள்வித்து இயங்க வைப்பதில் அப்போதிருந்த சபையும், நிர்வாகமும் எடுத்த பல்வேறு நடவடிக்கைகள் காரணமாகபொதுநூலக வரைபடத்தின் படி மேற்குப்புறப் பகுதியை புதிதாக அமைக்கவென மாநகர முதல்வரால் 07.02.1982 ஆம் திகதி அத்திபாரம் இடப்பட்டது. - இதற்கான நினைவுக்கல் அப்படியே பொருத்தப்பட்ட இடத்திலேயே உள்ளது.

01.06.1983 ஆம் திகதி முதல் தெரிவு செய்யப்பட்ட சபையின் பொறுப்புக்களையும் நிறைவேற்றிய எம்மால் இக் கட்டிட வேலைகள் தொடரப்பட்டு 04.06.1984 ஆம் திகதி முன்னாள் காங்கேசன்துறை நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமான அமரர் அ.அமிர்தலிங்கத்தினால் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது. அந்த வைபவத்தின் ஞாபகச் சின்மாக ஒரு நினைவுக்கல்லும் கட்டடத்தில் பொருத்தப்பட்டு அமரர் அமிர்தலிங்கம் அவர்களாலேயே திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.

எனினும் அத்திபாரம் நாட்டிய நினைவுக்கல் அப்படியே இருக்கையில் 04.06.1984 இல் நடைபெற்ற திறப்புவிழா நி[illegible]வுக் கல் அது பொருத்தப்பட்டிருந்த இடத்தில் காணப்படவில்லை. இது எமக்குக் குறிப்பாகவும், யாழ்ப்பாண மக்களுக்கு பொதுவாகவும் மிகவும் வேதனையளிக்கும் விடயமாகவே கருதலாம்.

அமரர் அமிர்தலிங்கத்தைக் கொண்டு யாழ்ப்பாணம் பொது நூலகத்தை திறப்பிக்க அப்போதைய மாநகர ஆணையாளராக இருந்த நான் எடுத்த முடிவு எமக்குத் தனிப்பட்ட முறையில் பல பாதிப்புக்களை ஏற்படுத்தியிருந்தன.

அமரர் அமிர்தலிங்கத்தினால் இந்த நூலகத்தைத் திறந்து வைப்பதை அரசாங்கம் அறவே விரும்பவில்லை என்பதற்கு மேலாக அதை மிகவும் ஆணித்தரமாக எதிர்த்தமை தெளிவாகும். அரசு என்னிடம் கேட்ட ஒருகேள்வி ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகக்கூட இல்லாதவரை எவ்வாறு அழைக்கலாம் என்பதாகும். இவற்றிற்கு மத்தியிலும் அமரர் அமிர்தலிங்கத்தை நாம் இந்த வைபவத்திற்கு தெரிவு செய்வதில் பல காரணங்கள் இருந்தன. முதலில் யாழ்ப்பாண பொது நூலகத்தைத் திறந்து வைக்கும் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க வேண் டியதில்லை. அவர் யாழ்ப்பாண மக்களின் அங்கீகாரம் பெற்றவராக இருந்தாலே போதும். தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் என்ற வகையில் அவருக்கு அந்த அங்கீகாரம் உண்டு. இது அரசுக்குச் சொல்லப்பட்டது.

தமிழ் இனத்தின் தன்மான தமிழ் தேசிய உணர்வு களையும் அபிலா ஷைகளையும் தெளிவாகவும், தைரியமாகவும் உள்நாட்டிலும் வெளிநாடு களிலும் எடுத்துக் கூறும் தன்னிகரில்லாத் தலைவனாக அமரர் அமிர்தலிங்கம் விளங்கினார். ஜெயவர்த்தனபுரத்தில் புதிய நாடாளுமன்றம் திறந்து வைக்கப் பட்டபோது எதிர்க் கட்சித்தலைவர் என்ற ரீதியில் அவர் ஆற்றிய உரை அவரது வரலாற்றுச் சிறப்பு மிக்க உரைகளில் உன்னதமான ஒன்று.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பது அமரர் அமிர்தலிங்கத்திற்கு முன்பும் இல்லை பின்பும் கிடைக் கப் போவதே இல்லையென்பது எமது யதார்த்தமான கருத்தாக இருந்தது. எனவே அவ்வாறான வரலாற்று ரீதியாக பதவி வகித்த அமரர் அமிர்தலிங்கத்தின் பெயர் யாழ்ப்பாணத்தில் ஏதாவது ஒரு இடத்தி லாவது பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டு மென நான் கருதினேன்.

1977 முதல் 1979 நடுப்பகுதி வரை நான் ஆணையாளராகவும் விசேட ஆணையாளராகவும் இருந்த காலத்தில் பூர்த்தியாக்கப்பட்ட நவீன சந்தை இரண்டாம் கட்ட கட்டடத்தை தெரிவு செய்யப்பட்ட சபை பதவியிலிருந்த போது 1979 இல் அமரர் அமிர்தலிங்கத்தைக் கொண்டு திறந்து வைப்பிக்க முயன்றேன். ஆனால் அது கைகூடவில்லை.

ஆகவேதான் ஐந்து வருடம் கழித்து மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தபோது முன்னாள் காங்கேசன்துறை நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சி முதல்வருமாகிய அ.அமிர்தலிங்கம் மூலம் யாழ்ப்பாண பொதுநூலகம் திறந்து வைக்கப்பட்டது. அவ்வாறே நினைவுக் கல்லிலும் எழுதப்பட்டது.

04.06.1984 இல் திறந்து வைக்கப்பட்ட பொதுநூலகம் மீண்டும் 10.05.1985 இல் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளானதால் பாவனை கைவிடப்பட்டது. இந்த இரண்டு நிகழ்வுகளும் வரலாற்றுப் பதிவுகளிலிருந்து மறைக்கப்பட்டுள்ளமை தெளிவு. கருத்து வேறுபாடுகள் எதுவாயினும் வரலாற்று நிகழ்வுகள் வரலாற்றுப் பதிவுகளே; அவை மறைக்கப்படக் கூடாதவை. அதற்குப் பின்னர் இலங்கை அரசு, நாம் நினைவுச் சின் னமாகப் பேண எண்ணிய தென்பகுதி கீழ்த் தளத்தையும் சேர்த்து திருத்திய மைத்தபோது 04.06.1984 ஆம் திகதிய நூலக திறப்பு நிகழ்வின் நினைவுக் கல்லை பொருத் தாது விட்டது ஒரு தற்செயல் நிகழ்வா அல்லது திட்டமிட்ட செயலா என்பது தெரியவில்லை.

நான் மீண்டும் ஆணையாளராகக் கடமையாற்றிய 2005/2006 காலப் பகுதியில் இந்த நினைவுக் கல்லை நானே பொருத்துவித்திருக்கலாம். ஆனால் அதில் எனது பெயரும் இடம்பெற்றிருப்பதால் ஒரு தெரிவு செய்யப்பட்ட சபை மூலம் இதை செய்விப்பதால் அமரர் அமிர்தலிங்கத்தின் தமிழ்த்தேசிய உணர்வுகளின்பால் மக்கள் வைத்திருக்கும் கௌரவத்தையும் மதிப்பையும் மீள உறுதிப்படுத்தலாம் என்பதாலுமே நான் அவ்வாறு செய்யவில்லை.

இப்பொழுது அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்களின் பிறந்தநாளான ஓகஸ்ட் இருபத்தாறாம் திகதி அவரது நினைவாக இந்த வேண்டுகோளை தங்கள் மூலமாக புதிதாக தெரிவு செய்யப்பட்ட மாநகர சபையிடம் முன் வைத்திருக்கின்றேன்.

இது ஒரு காலத்து தமிழனத் தலைவனுடைய வரலாற்று நிகழ்வு தொடர்பானது என்பதால் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று ஏகமனதாக குறிப்பிட்ட நினைவுக் கல்லை வெற்றிடமாக உள்ள அதே இடத்தில் பொருத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோருகின்றேன் - என்றுள்ளது.

## ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமன விண்ணப்பம் கோரல் 2010
## சுகாதார சேவைகள் பிராந்தியப்பணிப்பாளர் பிரிவு - யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் பிரிவில் உள்ள வைத்தியசாலைகளில் உள்ள பின்வரும் வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் / மீள் நியமன அடிப்படையில் 2010 ஆம் ஆண்டுக்காலத்தில் கடமையாற்றுவதற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வைத்திய உத்தியோகத்தர்.
2. பதிவு வைத்திய உத்தியோகத்தர் / உதவி வைத்திய உத்தியோகத்தர்.
3. மருந்தாளர்.
4. தாதிய உத்தியோகத்தர்.
5. குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்.
6. பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்.

விண்ணப்பிக்க விரும்புவோர் பின்வரும் ஆவணங்களுடன் 15.10.2009 ஆம் திகதிக்கு முன்னர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதியுடன் 4 நிழற்பட பிரதிகளுடன் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. ஓய்வூதியக் கொடைப்பத்திரம்.
2. சமாதான நீதிவானின் நற்சான்றிதழ்.
3. யாழ்.மாவட்டத்தின் எப்பகுதியிலும் கடமையாற்றுவதற்கான சம்மதக்கடிதம்.
4. தற்போதைய உடல், உள நிலை பற்றிய மருத்துவ உத்தியோகத்தரின் சான்றிதழ்.
5. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்.
6. 9/2007 சுற்றுநிருபத்திற்கமைய சம்பளம் பெறுவதற்கான விருப்புக் கடிதம்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,
பிராந்திய பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

## சமாதான விழிப்புணர்வு நிகழ்வு இன்றும் நாளையும்

வண்ணை, ஓக. 26

சமாதானத்திற்கும், நல்லிணக்கத்துக்குமான பணியகம் மேற்கொண்டு வரும் சர்வதேச சமாதான வாரத்தை முன்னிட்டு சிறுவர்கள் மத்தியில் விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும் நிகழ்வுகள் இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை அல்லைப்பிட்டி புனித பிலிப்பு நேரியார் ஆலய வளாகத்தில் 'நல்லிணக்கத்தை நோக்கி...' பற்றிய செயற்பாடுகள் நடைபெறஉள்ளன.

நாளை வியாழக்கிழமை கைதடி, நவபுரம் சனசமூக நிலையம் மற்றும் கைதடி மத்தி வளர்மதி சன சமூக நிலையம் ஆகியவற்றில் சிறுவர்களுக்கான ஓவியப் போட்டி நடத்தப்படும்.

# கலாநிதி சிவராஜா மீதான தாக்குதல்; பொலிஸாரின் தீவிர விசாரணை தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஓக.26

யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவத் துறையின் வருகை விரிவுரையாளர் வைத்தியகலாநிதி என். சிவராஜா அவரது அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் கத்தியால் குத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸார் நேற்று பலரை விசாரணை செய்தனர்.

சம்பவம் நடைபெற்ற வேளை அங்கிருந்த ஊழியர்கள் மற்றும் மாணவர்களையும் சம்பவத்தில் தொடர்பு பட்டவர் எனக் கருதப்படும் மாணவனையும் பொலிஸார் நேற்று விசாரணை செய்துள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழு இந்த விசாரனைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை -

இந்தச் சம்பவம் பல்கலைக்கழக வட்டாரங்களில் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருந்தது. எனினும் வழமை போல் பரீட்சைகள், விரிவுரைகள் இடம்பெற்றன என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சந்திரலதா கனேந்திரன் அவர்களின்
அன்புத் தாய்

### திருமதி வேல்சந்திரன் கமலநாயகி

24.08.2009 திங்கட்கிழமை காலமானார். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மல்லாகம் மகா வித்தியாலயம். நலன்புரிக் கழகம்.


## யப்பான் ரேடர்ஸ் நிறுவனத்தால் நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட அதிஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு - COOL BOY SW500 மோ. சைக்கிள்
செல்லையா சிவனேஸ்வரன் - 3538
கந்தரோடை, சுன்னாகம்.
2 ஆம் பரிசு - LCD மொனிற்றருடன் P4 கணனி
கனகரத்தினம் சிவசொருபன் - 3328
கைதடி வடக்கு, யாழ்ப்பாணம்.
3 ஆம் பரிசு - SONY DVD PLAYER
கந்தையா கண்ணன் - 2617
பளிப்புலம், பண்டத்தரிப்பு
ஆறுதல் பரிசுகள் - பத்து மின்விசிறிகள்
1. G.நீதன் 2667
மடம் வீதி, யாழ்ப்பாணம்
2. Sabena 2495
7, New Road, கொய்யாதோட்டம்
3. யோகராசா சிந்துஜா 2615
மூர்த்தியாம்கூடல், சுன்னாகம்.
4. S. சுகன்யா 3665
மட்டசெறி, கரணவாய் தெற்கு, கரவெட்டி
5. S. கார்த்திகன் 2669
அராலி வீதி, ஓட்டுமடம்
6. S. ரஜீகா 2447
72/9, கடுக்காயடி லேன், நல்லூர்
7. பரமலிங்கம் இளங்கோவன் 3815
சங்கானை வடக்கு, சங்கானை
8. அ. விக்கினேஸ்வரன் கஜீபன் 3315
வெட்டுக்கோட்டை, சங்கரத்தைச் சந்தி
9. S.கணேஸ் 2907
அல்வாய் தெற்கு, அல்வாய்
10. சிவசுப்பிரமணியம் கவிதா 0861
இமையாணன், உடுப்பிட்டி

இன்று (26.08.2009) பி.ப 2 மணிக்கு பரிசில்களை எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

யப்பான் ரேடர்ஸ், 108B, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ. பே. இல - 0770868079


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# காலம் தாழ்த்தாமல் உயர்நீதிமன்றம் நீதி செய்யுமா?

'நீதி தாமதிக்கப்படுமானால் நீதி மறுக்கப்பட்டதாகி விடும்'(Justice delayed, Justice denied)என்ற ஒரு நீதி வாக்கியம் உண்டு. விவரமாக விளக்கித்தான் இது புரிய வேண்டும் என்பதல்ல. அதுவும்,.நீதித்துறையோடு சம்பந்தப்பட்டோருக்கு இதனை விளக்கிப் புரிய வைக்கவேண்டும் என்ற தேவையும் இல்லை.

இயற்கை நீதியின் அடிப்படைக் கோட்பாடுகளுள் ஒன்று, நீதியைத் தாமதிக்காமல், உரிய காலத்தில் விரைந்து செய்ய வேண்டும் என்பதாகும்.

இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் பொதுவாக நிலுவையில் இருக்கும் சில வழக்குகளை ஒட்டி இந்த அடிப்படைக் கோட்பாட்டைப் பொருத்திப் பார்த்துக் கருத்துகளை மக்கள் முன்வைக்க விரும்புகின்றோம்.

நீதிமன்றத்தின் முன் - குறிப்பாக உயர் நீதிமன்ற ஆயத்தின் முன் - விசாரணையில் நிலுவையாக இருக்கும் ஒரு வழக்கின் உள் விடயங்களில் தலையிடுவதன் மூலம் உயர்நீதிமன்றத்தை அவமதிக்கும் கருத்து நிலைப்பாடு ஏதும் எமக்குக் கிடையாது.

எனினும் பொத்தம் பொதுவாக இலங்கை நீதித்துறையிடமிருந்து சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்கள் உரிமையுடன் எதிர்பார்க்கும் நீதியை இந்தப் பத்தி ஊடாகப் பிரதிபலிப்பது எமது பொறுப்பு என்ற வகையிலேயே இவ்விடயங்களை முன்வைக்க விரும்புகின்றோம். அதன் நோக்கம் - அல்லது இலக்கு - நீதிமன்றங்களில் உள்விடயங்களில் முறையற்ற விதத்தில் தலையீடு செய்வதோ அல்லது நீதிமன்ற விசாரணைகளை விமர்சனம் செய்வதோ அல்ல. இலங்கை நீதித்துறை தொடர்பாகத் தமிழர்களின் ஆதங்கத்தை வெளிப்படுத்துவது மட்டுமே இப்பத்தியின் கருத்தாகும்.

இலங்கைத் தீவில் தங்களின் உரிமைகள் அநீதியான முறையில் பறிக்கப்பட்டுள்ளன என சிறுபான்மையினரான தமிழர்கள் கருதி நிற்பதே இத்தீவில் இனப்பிரச்சினை மோசமான வன்முறை வடிவெடுத்து, பேரழிவைத் தந்து நிற்பதற்குப் பிரதான காரணமாகும்.

அப்படிக் குறிப்பிடப்படுகின்றவையான அத்தகைய அநீதி இழைப்புக்கு எதிராக இலங்கைச் சட்டதிட்டங்களின் அடிப்படையில் நிவாரணம் கோரி தாமும் இலங்கைப் பிரஜைகள் என்ற முறையில் தமிழர்கள், இலங்கை நீதிமன்றங்களிடம் விண்ணப்பிப்பார்களாயின், சட்டங்களுக்கு அமைவான நியாயமான தீர்ப்பை வழங்கி அவர்களுக்கு நியாயம் செய்ய வேண்டிய கடமையும், பொறுப்பும் இலங்கை நீதிமன்றங்களுக்கு உண்டு.

அடிப்படை உரிமைகள் தொடர்பான விடயத்தில் இலங்கை நீதிமன்றங்கள் மூலம் நிவாரணம் கோருவது தொடர்பான பிரதான சரத்து அரசமைப்பின் 126 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது அடிப்படை உரிமை மீறப்படுகின்றமை தொடர்பில், அத்தகைய உரிமை மீறப்பட்ட நிலையில், தமக்கு நீதிமன்றத்தை நாடும் வாய்ப்புக் கிடைக்கும் நாளிலிருந்து முப்பது நாள்களுக்குள் உயர்நீதிமன்றத்திடம் முறையிட்டு ஒருவர் அடிப்படை உரிமை மீறலுக்கான நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என அரசமைப்பின் 126(2) ஆவது பிரிவு கூறுகின்றது.

பொதுவாக இந்த அடிப்படை உரிமை மீறல் விண்ணப்பங்கள் தொடர்பில் அத்தகைய மனுக்கள் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு ஒருமாத காலத்துக்குள் சமர்ப்பிக்கப்படுகின்றனவா என்பதைக் காலக்கெடு விதித்து - பூதக் கண்ணாடி போட்டு - உன்னிப்பாகக் கவனிக்கும் உயர்நீதிமன்றம், அத்தகைய மனுக்கள் தொடர்பில் தனது கடமை தொடர்பாக அரசமைப்பு விதித்துள்ள காலக் கட்டுப்பாட்டை நிறைவு செய்யத் தவறிவிடுகின்றது.

இத்தகைய அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டால், அந்தத் தினத்தில் இருந்து இரண்டு மாத காலத்துக்குள் - அதாவது எட்டு வாரத்துக்குள் - அதை உயர் நீதிமன்றம் விசாரித்து, முடிவுறுத்த வேண்டும் என்று அரசமைப்பின் 126(5) பிரிவு மிக வெளிப்படையாகவும் தெளிவாகவும் எடுத்துரைக்கின்றது.

ஆனால், அதுதான் இங்கு நடப்பதேயில்லை. அரசமைப்பு அப்படித் தெளிவாகக் குறிப்பிட்டுள்ள போதிலும் உயர்நீதிமன்றம் இத்தகைய அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் விடயத்தைப் பெரும்பாலும் இரண்டு மாதங்களில் முடிவுறுத்துவதில்லை. அவை மாதக்கணக்கில் இழுப டுகின்றன.

இவ்விடயத்தில் உயர்நீதிமன்றத்தின் வேலைப்பளுவும், நிறைவு செய்யக்கூடிய சாத்தியமான பணியின் அளவும் கவனத்தில் கொள்ளத் தக்கவையே.

ஆகவே, அரசமைப்பில் கூறப்பட்டிருப்பதற்காக அசாத்தியமான விடயங்களை உயர்நீதிமன்றம் சாதித்து முடிக்க வேண்டும் என எதிர்பார்ப்பது அபத்தமானது என்பதையும் ஏற்றுக்கொள்கின்றோம்.

தாக்கலாகும் அடிப்படை உரிமைமீறல் மனுக்களின் எண்ணிக்கை எல்லை மீறி வருகையில் - அரசமைப்பில் கூறப்பட்டமைக்காக - அத்தகைய பெரும் எண்ணிக்கையான வழக்குகளை எல்லாம் இரண்டு மாதங்களுக்குள் உயர்நீதிமன்றம் விசாரித்து, முடித்து, முடிவுறுத்த வேண்டும் என எதிர்பார்ப்பது மண்ணைக் கயிறாகத் திரிக்கும் எத்தனமின்றி வேறில்லை. அதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

ஆனாலும் எல்லா அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பிலும் இந்த ஒரே காரணத்தைக் காட்டிக் காலம் இழுபட அனுமதிப்பது ஏற்புடையது அல்ல என்பதையும் உயர்நீதிமன் றத்துக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மூன்று லட்சம் அப்பாவி சிவிலியன்கள் வன்னியில் அகதி முகாம்களுக்குள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை தொடர்பான பல அடிப்படை உரிமைமீறல் மனுக்கள் உயர் நீதிமன்றின் முன் இப்படி நிலுவையில் உள்ளன. இந்த மனுக்களின் மனுதாரர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அப்பாவிப் பொதுமக்களாகவோ அல்லது எதிரணி அரசியல்வாதிகளாகவோ இருக்கலாம். ஆனால் அவர்கள் அனைவரும் மூன்று லட்சம் அப்பாவி மக்களையும், அவர்கள் சார்ந்த சிறுபான்மை இனத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கின்றார்கள். அவர்கள் விடயத்தில் அரசமைப்பின் 126 ஆவது பிரிவின் 5 ஆவது உப பிரிவின் கீழான காலவரையறையை உயர்நீதிமன்றம் மிக 'ஸீரியஸாக' கவனத்தில் எடுக்க வேண்டிய கடப்பாடுடையது என்று சுட்டிக்காட்டுவது தார்மீக ரீதியாக - சட்டரீதியாக - இயற்கை நீதி ரீதியாக - சர்வதேச நடைமுறை ரீதியாக - நியாயமானதாகும்.

உயர்நீதிமன்றம் இதைக்கவனத்தில் எடுத்து, இந்த மக்களுக்கு காலதாமதம் செய்யாமல், நீதி வழங்க முன்வருமா?

# கொழும்பில் தங்கியுள்ள வெளி மாவட்ட மக்களின் விவரங்களடங்கிய ஆவணம் தயாரிக்க நடவடிக்கை

## உள்நாட்டு அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

கொழும்பு,ஓக.26

கொழும்பில் தங்கியுள்ள வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களின் விவரங்களடங்கிய பதிவு ஆவணமொன்றை தயாரிக்கவும் அதன் மூலம் அவர்களுக்கு உதவுவதுமான திட்டமொன்றை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடைமுறைப்படுத்தவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

இதன்மூலம் அவ்வாறு தங்கியிருப்போருக்கு தேவையான சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் குறிப்பிட்டார்.

அவ்வாறு தங்கியிருப்போரில் 16 வயதிற்கு மேற்பட்டோர் தமது தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படுவதுடன் அது தொடர்பில் அவர்களுக்குத் தபாலட்டை மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் தெரிவித்தார்.

பல்வேறு தேவைகளுக்காக ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வெளி மாவட்டங்களிலிருந்து கொழும்புக்கு வந்து பல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தங்கியுள்ளன. இவர்கள் தொடர்பான விவரங்கள் முறைப்படி பதிவுசெய்யப்படவில்லை.

ஏற்கனவே கொழும்பில் குடியிருப்போர் சம்பந்தமான விவரங்கள் திரட்டப்பட்டுள்ள போதிலும் மாதாந்தம் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் கொழும்புக்கு வந்து தங்குவதுடன் அவ்வாறே கொழும்பிலிருந்தும் வெளிப் பிரதேசங்களுக்கும் செல்கின்றன.

இவர்களில் அடையாள அட்டைகளைப் பெறுவோர், ஓய்வூதியம் பெறுவோர் உட்பட அரசாங்கத்தின் சேவைகளை எதிர்பார்ப்போருக்கு உதவுவதற்கும் இந்நடவடிக்கை மூலம் வழி வகுக்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார். (50)

# வட மாகாணத்தின் கல்வி அபிவிருத்திக்கு 21கோடி 98 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

## ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி தகவல்

கொழும்பு, ஓக.26

'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் வட மாகாணக் கல்வி அபிவிருத்திக்கென 21 கோடி 98 லட்சத்து 61 ஆயிரதது 198 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

'வடக்கின் வசந்தம்' 180 நாள் அபிவிருத்தித் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆளுநர் அலுவலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

வடக்குப் பிரதேசத்தில் கல்வி வசதிகளை மேம்படுத்துவதற்காக சிறப்பான விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இதனால் வடக்கின் கல்வித் துறையில் புதிய சகாப்தம் ஒன்று உதயமாவதை இது சுட்டுவதாக உள்ளது.

கல்வித் திட்டத்தின் முழுமையான மேம்பாட்டுக்குமென மொத்தம் 21கோடி 98 லட்சத்து 61 ஆயிரத்து 198 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது உள் கட்டுமான வளர்ச்சி மற்றும் இது தொடர்பான வசதிகளுக்கும் பயன்படுவதாக இருக்கும்.

இந்தத் திட்டத்தின் கீழ் 19 பாடசாலைகள் புனரமைக்கப்படவிருக்கின்றன. இதற்கு 9 கோடி 85 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவாகுமென கணிக்கப்பட்டுள்ளது. இது இப்பகுதி மக்களின் ஒரு நீண்டகாலத் தேவையாகும்.

வட பகுதியிலுள்ள ஒரே ஒரு பல்கலைக்கழகமான யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வசதிகளும் மேம்படுத்தப்படவிருக்கின்றன. 43 மில்லியன் ரூபா செலவில் மாணவர்களுக்கான வளங்கள் மேம்படுத்தப்படவிருக்கின்றன. சுகாதார பராமரிப்பு நிலையத்துக்கென 13 மில்லியன் ரூபா செலவிடப்படவிருக்கின்றது. 12 மில்லியன் ரூபா விளையாட்டுத்துறை கட்டுமானங்களுக்கு செலவிடப்படவிருக்கிறது. 10 லட்சம் ரூபா செலவில் கைலாசபதி கேட்போர் கூடம் புதுப்பிக்கப்படும். 8 மில்லியன் ரூபா பெறுமதியான அம்புலன்ஸ் வசதியும் பல்கலைக்கழகத்துக்குச் செய்து கொடுக்கப்படும் - என்றுள்ளது. (ப)

# இந்த முதியவரின் உறவினர் யார்?

இணுவில்,ஓக.26

நல்லூர் கந்தசுவாமி தீர்த்தத் திருவிழாவுக்கு வந்திருந்த வயோதிபர் ஒருவர் மயக்கமுற்ற நிலையில் கோயில் வீதியில் கிடந்தபோது அங்கு நின்ற அடியவர்கள் சிலர் ஓட்டோவுக்குப் பணம் கொடுத்து அவரை வைத்தியசாலையில் சேர்த் துள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட வர் புலோலியைச் சேர்ந்த இராசஇராசேஸ்வரன் (வயது 70) என்பவராவார்.

இவரை வைத்தியசாலையில் அனுமதித்த இணுவிலைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் மீண்டும் சென்று வைத்தியசாலையில் அந்த முதியவரைப் பார்வையிட்டுள்ளார்.

இதுவரை முதியவரின் உறவினர்கள் யாரும் அவரைத் தேடி வரவில்லை எனவும் அவரைக் கைதடி முதியோர் இல்லத்தில் சேர்ப்பதற்கு தான் முயற்சி செய்வதாகவும் அந்த ஆசிரியர் கூறினார்.

உரிய உறவினர்களை யாழ். போதனா வைத்தியசாலையுடன் தொடர்புகொண்டு இந்த முதியவரை அழைத்துச் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-45)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 11 | 27.08.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | ஸப்தமி |
| | மு.ப. 09.02வரை |
| நட்சத்திரம்: | விசாகம் |
| | மு.ப. 08.32 வரை |
| சுபநேரம்: | 07.35 - 09.05 |
| ராகுகாலம்: | 01.35 - 03.05 |

# கொழும்பில் செப்ரெம்பர் 3ஆம் திகதி முதல் இந்துசமய, தமிழ் இலக்கிய ஆய்வரங்கு

கொழும்பு,ஓக.26

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இந்துசமய, தமிழிலக்கிய ஆய்வரங்குத் தொடரின் ஓர் அம்சமாக எதிர்வரும் 3ஆம் திகதி தொடக்கம் 6ஆம் திகதிவரை ''விஜய நகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்'' என்னும் தலைப்பிலான ஆய்வரங்கு கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆய்வரங்கின் தொடக்க நிகழ்வு எதிர்வரும் 3ஆம் திகதி வியா ழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக மத அலுவல்கள் அமைச்சர் பண்டு பண்டாரநாயக்க, சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் சிறப்பு விருந்தினராக மத அலுவல்கள் ஒழுக்க மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் எச்.எம்.ஹேரத்தும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆரம்ப நிகழ்வில் கடந்த வருடம் நடைபெற்ற ஆய்வரங்குக் கட்டுரைகளின் தொகுப்பு நூலாகிய ''சோழப் பேரரசும், சமயப் பெரு நெறிகளும்'' என்னும் நூல், இவ்வருட ஆய்வரங் கின் சிறப்பு மலர் ஆகியவற்றின் வெளி யீடுகள் இடம்பெறவுள்ளன. நூலின் வெளியீட்டுரையைப் பேராசிரியர் சு.வெங்கட்ராமன் நிகழ்த்துவார்.

ஆய்வரங்கின் பார்வையாளர்களாக தமிழிலக்கியம், இந்துசமயம், வரலாறு ஆகிய துறைகளில் ஆர்வம் மிக்க பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், வெளிவாரி பட்டதாரி மாணவர்கள், ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் மேற்படி பாடங்களைக் கற்கும் மாணவர் கள், இலக்கிய ஆர்வம்மிக் கோர் ஆகியோர் கலந்துகொள்ளமுடி யும் என இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தெரிவித்துள்ளார். (50)

# ஹற்றன் நஷனல் வங்கியின் புதிய கிளை இன்று திறப்புவிழா

யாழ்ப்பாணம்,ஓக.26

பருத்தித்துறையில் அமைக்கப்பட்டுள்ள ஹற்றன் நஷனல் வங்கியின் 180ஆவது கிளை இன்று புதன்கிழமை முற்பகல் 11.22 மணிக்கு சுபவேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

வங்கியின் பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் ரி.அருணன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வின் ஆரம்பத்தில் தும்பளை சிவன் ஆலயத்தில் விசேட பூசைகள் இடம்பெற்று அங்கிருந்து விருந்தினர்கள் ஊர்வலமாக வங்கிக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

வங்கியின் புதிய கிளையை ஹற்றன் நஷனல் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான இ.தியாகராஜா நாடாவெட்டித் திறந்து வைக்கவுள்ளார். (சிறப்புமலர் 5ஆம் பக்கத்தில்) (201)

# கையளிக்கப்பட்ட வயல் நிலங்களில் நெற்செய்கை ஆரம்ப நிகழ்வு நாளை

## பஸில் ராஜபக்ஷ கலந்துகொள்கிறார்

யாழ்ப்பாணம்,ஓக.26

விவசாய நடவடிக்கைகளுக்காக அண்மையில் விவசாயிகளிடம் கையளிக்கப்பட்ட விவசாய நிலங்களில் மீள்நெற்செய்கை ஆரம்ப நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மறவன்புலோ வயல் பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கின் மீள் குடிய்மர்வு மற்றும் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, சமூகசேவைகள் மற் றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் உழவு வேலை சம்பிர தாயபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்படுவதுடன் விவசாய உள்ளீடுகள் விநியோகமும் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து மறவன்புலோ, தனங் கிளப்பு பிரதேசங்களில் பயிர்ச் செய்கைக்குப் பதிவுசெய்துள்ள விவசாயிகளுக்கு மானிய உர விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் சாவகச்சேரி மற்றும் நாவற்குழிச் சந்தியிலிருந்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்படி பிரதேச விவசாயிகள் அனைவரையும் நிகழ்வில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்துள்ளார். (50-201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரணிவடக்கு விவசாயிகளுக்கு உரமானியப் படிவம் விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 26

வரணிவடக்கு விவசாய சம்மேளனத்தில் மானிய உரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படுகிறது. உரமானியத்துக்குரியவர்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்பு விண்ணப்பப்படிவத்தினைச் செயலாளர் க.தியாகராசாவிடம் பெற்றுக் கொள்ளலாமென வரணி வடக்கு விவசாய சம்மேளனம் அறிவித்துள்ளது. (1)


**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

அனேகரின் வேண்டுகோளிற்கிணங்க ஒரு மாதகால குறைந்த கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

* Certificate in Quickbook
* Certificate in CorelDraw x4
* Certificate in Tally
* Certificate in PhotoShop
* Certificate in Pagemaker
* Certificate in AutoCAD
* Certificate in VisualBasic 6.0

Duration:-1Month

வகுப்புக்கள் ஆரம்பம் 28/08/2009

கணக்கியல்துறை ஆர்வலர்களிற்காக!
முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்!
கம்பனிக்கணக்குகளுடன், VAT இனையும் உள்ளடக்கி

**Diploma in Computerized Accounting**

உங்கள் நிறுவன கணக்குகளை நீங்களே கணனிமயப்படுத்தும்படியான 100% செய்முறைப்பயிற்சியுடன்..

சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களான

**Quick Book + ACCPAC + MYOB**

ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்

Tally புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது

Batch I : 27/08/2009
Batch II : 28/08/2009
Batch III : 01/09/2009
Batch IV : 02/09/2009
10.00-11.00 AM

**COMPUTER EXPRESS**
Head Office : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0212228250


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்**
(கல்வியாண்டு 2008/2009)

**முதலாம் வருட மாணவர்களுக்கான கற்கைநெறி ஆரம்பம்**

மேற்படி மாணவர்களுக்கான கற்கைநெறிகள் எதிர்வரும் 07.09.2009 திங்கட்கிழமையிலிருந்து வழிகாட்டல் கருத்தரங்குத் தொடருடன் ஆரம்பமாகும்.

முகாமைத்துவ கற்கைநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்ட சகல மாணவர்களும் அன்றைய தினம் காலை 9 மணிக்கு வணிகத்துறை விரிவுரை மண்டபத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

25.08.2009 (சி/560462) பதிவாளர்.

## வலிமேற்கு முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு அழைப்பு

சுழிபுரம், ஓக. 26

வலிமேற்கு முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களின் முழு விவரக் கோவைகளுடன் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சித்தன்கேணியிலுள்ள முன்பள்ளி ஆசிரியர் சங்க அலுவலகத்திற்கு சமுகம் கொடுக்குமாறு முன்பள்ளி ஆசிரியர்சங்கத் தலைவி செல்வி வா.பூரணி வேண்டியுள்ளார்.

விவரம் யாவும் கல்வித் திணைக்கள தேவைக்கு உடன் சேர்க்குமாறு வேண்டப்பட்டுள்ளதாலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-28)

## நல்லை உற்சவம் அமைதியாக நடைபெற உதவியவர்களுக்கு ஆணையாளர் நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.26

கடந்த மாதம் 27 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 26 நாள்கள் நடைபெற்ற நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவம் அமைதியாகவும், சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் நடந்தேறுவதற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்கிய ஆலய நிர்வாகத்தினர், பொலிஸ் பிரிவினர், பாதுகாப்புப் பிரிவினர், தொண்டர்கள், மாநகரசபை உத்தியோகத்தர்கள், தொழிலாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக மாநகர ஆணையாளர் மு. செ. சரவணபவ தெரிவித்துள்ளார். (1)

## யாழ்.செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நுண்நிதிவிடல் கருத்துக்களம்

யாழ்ப்பாணம், ஓக.26

யாழ்ப்பாணம் முகாமையாளர் கருத்துக் களத்தில் ஹற்றன் நஷனல் வங்கி பங்காளியாக இணைந்து நுண்நிதிவிடல் கருத்தாடலை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிகழ்வு இன்று புதன்கிழமை பி.ப. 4 மணிமுதல் 6 மணிவரை யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்திடல் களத்தில் நுண்நிதிவிடல் என்னும் தலைப்பில் ஹற்றன் நஷனல் வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் சில்லறை வங்கிச் சேவைகளுக்கான பிரதிப் பொதுமுகாமையாளர் சந்துல அபேவிக்கிரம கருத்துரை வழங்குவார்.

இந்தக் கருத்தாடல் நிகழ்வில் தொழில்துறை நிபுணர்கள், கல்விமான்கள், நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் என 150க்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர். (50)


**காசாளர் தேவை**

யாழ்நகரில் இயங்கும் குளிர்பான ஸ்தாபனம் ஒன்றிற்கு மிகவும் அனுபவம் வாய்ந்த காசாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்க்கலாம்.

உடன் தொடர்பு கொள்ளவும்
T.P770760856


# மரண அறிவித்தல்கள்

## செல்வரத்தினம் சுதானந்தன்



யாழ்ப்பாணம், புளியங்கூடல், ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், 182/17, 5 ஆம் ஒழுங்கை, கோவில் குளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் சுதானந்தன் 24.08.2009 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி செல்வரத்தினத்தின் அன்பு மகனும், ஹேமலதாவின் அன்புக் கணவரும், திரு. திருமதி சிவலிங்கத்தின் மருமகனும், இரட்ணரூபன், முருகானந்தன், மனோகரன், ஐங்கரன், பாஸ்கரன், பாரதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரஞ்சினி, அஞ்சலா, பவானி, லலிதா, ஞானஈஸ்வரி, இராஜகுமார், கேதீஸ்வரி, நளினி, ஹேமமாலினி, ஹேமச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுரேஸ்குமார், ஜெயகுமாரன் ஆகியோரின் சகலனும், இராகவன், ரஜீவன், ராகவி, சோபிகா, சுலக்ஸன், திவேரா, டினோஜா, மயூரிகா, திபானி, நிரூஜன், விதுஷா, வினுஷன், பானுஜன், சதுர்சிகன், கவிப்பிரியா, வருணன், கிரென்ஷா ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், டிஷாந்தன், கௌசிகா, தர்சிகா, டினோஜன் ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2009) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணிக்கு கோவில் குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோவில் குளம் இந்துக் கல்லூரி முன்பாக
கோவில்குளம், வவுனியா. (88217) குடும்பத்தினர்.

## சின்னத்துரை விஜயரத்தினம்



அராலி கிழக்கு, வாலையம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை விஜயரத்தினம் 23.08.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் மூத்தமகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - வாலைமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் சபாரத்தினம், தவராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயகுமார் (பிரான்ஸ்), விஜயகுமாரி, ராஜ்குமார் (ஜேர்மனி), விஜயலட்சுமி (பிரான்ஸ்), அன்னகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும். கணநாதமுத்துலிங்கஜயா, தர்மகுணதேவி (பிரான்ஸ்), கலைவதனன் (பிரான்ஸ்), றோகினி (ஜேர்மனி), நடேசினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

வாலையம்மன் கோயிலடி,
அராலி கிழக்கு. (88216)
தகவல்: குடும்பத்தினர்.

# 41 ஆவது நாள் நினைவலைகள் (26.08.2009 )

மலர்வு
12 - 11 - 1992



உதிர்வு
17 - 07 - 2009

**செல்வி கந்தசாமி தர்ஷிகா ( குழந்தை )**

பாசமகளே! எங்கள் நேச மகளே!
குலம் மகிழ எழுந்த எங்கள் தெய்வத் திருமகளே!
குழந்தை திருவுருவாய் இறைவன் எமக்களித்த -
- உயர்விருதே!
பல்கலையில் பட்டங்கள் பெறவேண்டித் துடியாய்
- துடித்தவளே!
தமிழ் மகளாய் வாழ்வமைக்கும் உயர்வான -
- இலட்சியமும் கொண்டவளே!

எங்கள் இனிய அழகு நிலாவே
குழந்தை என்னும் எங்கள் செல்ல மகளே!
நீ எம்மைவிட்டுப் பிரிந்து 41
தினங்களானாலென்ன
என்றுமே உன் இனிய நினைவுகளை -
சுமந்தே வாழ்ந்திடுவோம்.
என்றும் உன் துயர நினைவுகளுடன்
குடும்பத்தினர்.


**ஓடியல் கூழ் விற்பனை**

தரமான முறையில் தயாரிக்கப்பட்ட ஒடியல் கூழ் மீண்டும் விற்பனைக்கு. சனி, ஞாயிறு, திங்கள், புதன் மு.ப. 10 மணியிலிருந்து மாலைவரை. **வேல்சிக்ஷெர்**
57, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**புறொயிலர் தேவை**

புறொயிலர் கோழிகள் உடன் தேவை.
கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்படும்.
தொடர்பு: **மல்ரி பாம் சென்ரர்,**
61, இராமநாதன் வீதி, கலட்டி,
யாழ்ப்பாணம். 0773001763

**சிறுநீரகம் தேவை**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 20 வயதுடைய பெண் நோயாளி தற்போது கொழும்பு அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவருக்கு உடனடி சிறுநீரக மாற்று சிகிச்சை அளிக்கப்பட வேண்டியுள்ளது. (B NEGATIVE or O POSITIVE)

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் : 071 4214856, 011 2721087

**இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் விற்பனைக்குண்டு**

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கார், வான், றக், ட்ரக்டர் போன்ற வாகனங்கள் கொழும்பி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிசூடும் தலைவாசல் பருத்தித்துறையில்
# 180 ஆவது கிளையை முடிசூட்டும் ஹற்றன் நஷனல் வங்கி
## திறப்பு விழாச் சிறப்பு மலர்- 26.08.2009



### அகமகிழ்ந்து வரவேற்கின்றேன்



ஹற்றன் நஷனல் வங்கி, பருத்தித்துறை நகரில் புதிய கிளை ஒன்றை கம்பீரமான புதிய கட்டடத்தில் இன்று ஆரம்பிப்பதை யிட்டு மிக மகிழ்வடைகிறேன்.

பருத்தித்துறை பிரதேசம் புவியியல் ரீதியாக ஒருபுறம் நீண்ட கடற்பரப்பினையும் மறுபுறம் விவசாய வளத்தையும் வர்த்தக மூலங்களையும் கொண்டுள்ளது. இந்த வகையில் காலத்தின் தேவைகளுக்கும் சமூக மாற்றங்களுக்கும் ஏற்ப வாடிக் கையாளர் தேவையை உணர்ந்து இக்கிளை சிறப்பான சேவையாற்ற வாழ்த்துகிறேன்.

இ. வரதீஸ்வரன், பிரதேச செயலாளர், பருத்தித்துறை.

### நல்வரவாகுக



ஹற்றன் நஷனல் வங்கியின் 180ஆவது கிளையின் திறப்புவிழா பருத்தித்துறையில் இன்று வெகு சிறப்பாக நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

உலகினில் மக்கள் தம்தம் தொடர்பைத் துரிதமாக செயல்படுத்த இவ்வங்கியின் சேவை பெரிதும் நன்மை பயக்கும்.

இவ் வங்கி பருத்தித்துறை யில் வந்தமைய ஒழுங்கு செய்த அதிகாரிகள், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்கள் நல் வாழ்த்துக்கள். வங்கியின் சேவைகள் சிறப்பாக அமையப் பிரார்த்திக்கின்றேன்.

சித்ரூபானந்தா சுவாமிகள்,
ஸ்ரீ ராமகிருஷ்ணா சேவாச்சிரமம், பருத்தித்துறை.

### அபிவிருத்தி கண்டிடுவோம்



சைவமும் தமிழும் ஒருங்கே அமைந்த பருத்தித்துறை மண்ணில் செல்வம் கொழிக்கும் ஹற்றன் நஷனல் வங்கியின் சேவைகள் ஆரம் பமாகின்ற இத்திருநாளில் பருத்தித்துறை மண்ணில் வாழும் மக்களின் வறுமைத் துன்பம் நீங்கி செல்வந்தர்களாக வாழ வானுயர்ந்த, எழில் மிகுந்த, ஒளிவீசுகின்ற கட்டடத்தில் தன்பணியை இன்று ஆரம்பிக்கும் பொன்னாள்.

இவ் விழாவும் இக் கிளையின் சேவைகளும் மேன்மேலும் ஓங்கி வளரவும் சிறப்புறவும் எல்லாம் வல்ல பர்வதவர்தனி சமேத பசுபதீஸ்வர சுவாமியின் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து வாழ்த்தி ஆசி வழங்குகிறேன்.

சிவஸ்ரீ க.சிவனேசக்குருக்கள், பிரதம குரு,
சிவன்கோயில், பருத்தித்துறை.

### இறை ஆசீர் வேண்டுகின்றேன்



ஹற்றன் நஷனல் வங்கியின் 180ஆவது கிளையை பருத்துறையில் ஆரம்பிப்பதையிட்டு ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

வாடிக்கையாளர்களின் நலன் கருதி இவ்வங்கிக் கிளையை இங்கு ஆரம்பிக்க முயற்சி எடுத்த வங்கியின் தலைமைப்பீடத்தினரையும், அதனைச் சார்ந்தவர்களையும் பாராட்டி மகிழ்கிறேன்.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக வங்கிகள் செயல்படுகின்றன.

ஹற்றன் நஷனல் வங்கியும் நாடெங்கும் தனது கிளைகளை நிறுவி அதன் மூலம் அபிவிருத்தியிலும் முக்கியமாக சிறார்கள் மத்தியில் சேமிப்பை ஊக்குவிப்பதிலும் தனது பங்களிப்பை அளித்து வருகிறது.

தற்போது வடக்கின் வசந்தத்திலும் முழுமையாகப் பங்கெடுத்து நாட்டினதும் மக்களின் அபிவிருத்தியிலும் தன்னை ஈடுபடுத்துவது கண்டு மகிழ்கிறேன்.

தொடர்ந்தும் இவ்வங்கியினர் தமது திறமையான செயற்பாடுகள், அபிவிருத்தி திட்டங்களாலும் மக்களின் வாழ்வை வளமாக்க இறை ஆசீர் வேண்டுகிறேன்.

இறைபணியில் பங்குத்தந்தை அருட்திரு. J.X. பேனாட்றெக்னோ,
சென்.தோமஸ் தேவாலயம்,பருத்தித்துறை.

### மனமுவந்த ஆசிகள்



இன்று மக்களது அன்றாட வாழ்வில் வங்கிச் சேவைகள் மிக முக்கியத்துவம் பெற்றுள்ளன. அந்த வகையில் இன்று எமது யாழ். மண்ணில் ஹற்றன் நஷனல் வங்கி தனது சேவைகளைத் திறம்பட ஆற்றி வருகிறது.

மக்களின் தேவை கருதி தனது கிளைகளை வியாபித்து வரும் நடவடிக்கையில் இன்று பருத்தித்துறையில் தனது 180ஆவது வாடிக்கையாளர் நிலையத்தை ஆரம்பிக்கின்றது.

மங்கலகரமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இக்கிளை தனது பயன் மிகு சேவையை வாடிக்கையாளர்களுக்கு நல்கிடவும், வங்கியின் வளர்ச்சி மேம்படவும் என் மனமுவந்த ஆசிகளை வழங்குகிறேன்.

க.கணேஷ்
அரச அதிபர்/ மாவட்ட செயலர்,
யாழ்.மாவட்டம்.

### எங்கள் முன்னேற்றத்தின் பங்காளி



ஹற்றன் நஷனல் வங்கி எமது பருத்தித்துறை மண்ணில் தனது 180ஆவது கிளையை இன்று தடம்பதித்து கொள்கிறது.

இந்த நிகழ்வையிட்டு பருத்தித்துறை வர்த்தக சமூகத்தினரது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

இவ்வங்கி தனது கிளைகளை நாடு முழுவதும் நிறுவி இன்று 180ஆவது கிளையை எம் நகருக்குப் பரிசளிக்கிறது.

இக்கிளை இப்பிரதேச வர்த்தகர்களினதும் வாடிக்கையாளர்களதும் முன்னேற்றத்திற்கு உறுதுணையாய் அமையும்.

குறிப்பாக இக்கிளையை இங்கு நிறுவ உதவிய வங்கியின் உயர. திகாரிகள், இக்கிளை முகாமையாளர், ஊழியர்கள் அனைவருக்கும் வர்த்தக சமூகத்தின் சார்பில் வாழ்த்துக்கள் கூறி வரவேற்கிறோம்.

செ.பத்மநாதன், தலைவர், பருத்தித்துறை வர்த்தகசங்கம்

### உன் பணி உயர்ந்திடும்



இன்றைய காலத்தின் தேவை என்ன என்பதை நன்றாகப் புரிந்து கொண்டு மக்களின் தேவையையுழ் சேவை செய்ய வேண்டிய இடத்தையும் நன்றாகத் தெரிவு செய்து ஹற்றன் நஷனல் வங்கி தனது 120 ஆண்டு நிறைவில் 180 ஆவது கிளையைத் திறந்து வைப்பதையிட்டு அதன் பருத்தித்துறை கிளை முகாமையாளர்களையும் ஊழியர்களையும் வங்கியின் தலைமைப் பீடத்தையும் மனமார வாழ்த்தும் அதேவேளையில் இச்சேவையானது மேலும் மேலும் பல்வேறு இடங்களிலும் தொடர எமது மேக்கன்றைல் பாதுகாப்புச் சேவையின் சார்பில் மனமார வாழ்த்துகின்றோம். மக்கள் சேவையே வங்கியின் முன்னேற்றம்.

வி.சுகுமாரன், பணிப்பாளர், மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை.


## விழாச் சிறப்புற வாழ்த்துவோர்

**சிவராஜ் ரேடிங்கோ**
163, பிரதான வீதி, பருத்தித்துறை.
CALTEX, S-LON வகைகளின்
விநியோகஸ்தர்கள்.

**பிரகாஷ் எலக்ரோனிக்ஸ்**
சந்தை சதுக்கம், பருத்தித்துறை
மொபைல் போன் விற்பனையாளர்,
இலத்திரனியல் உதிரிப்பாக விற்பனை
இணையத்தளச் சேவைகள்.

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி, பருத்தித்துறை.
உலக நாடுகளிலிருந்து
அதி வேகமாகப் பணத்தைப்
பெற்றுக் கொள்ள
Western Union சேவை, யாழ். கொழும்புக்கான
EXPO ரிக்கற் சேவை.

**ஜெயகணேசா ஸ்ரோர்ஸ்**
Shell gas, Elephant ice Cream மற்றும்
மளிகைப் பொருள்கள்
விநியோகஸ்தர்கள்
பஸ் நிலையம், பருத்தித்துறை.

**அம்பாள் ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி, பருத்தித்துறை
பல சரக்குப் பொருள்களின் மொத்த,
சில்லறை விற்பனையாளர்கள்.

**பிரான்ஸிஸ் ரேடேர்ஸ்**
பிரதான வீதி, பருத்தித்துறை
மீன்பிடி உபகரணங்கள்,
யமகா உதிரிப்பாகங்கள்
விற்பனையாளர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவில் கிழக்கு முத்துமாரி அம்மன் ஆலய

# மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் 26.08.2009



## பிரதம சிவாச்சாரியாரின் ஆசியுரை

ஆத்தளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை அங்குசம் பாசம் குசுமம் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே

யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்த கோண்டாவில் பதியில் வீற்றிருந்து அருளாட்சி புரிகின்ற அன்னை ஸ்ரீ முத்துமாரி அன்னையின் குடமுழுக்கு வைபவத்துக்கு என்னை பிரதம சிவாச்சாரியாராக அழைத்த நிர்வாகத்திற்கும் கோண்டாவில் வாழ் இந்து மக்கள் அனைவருக்கும் அன்னை நல்லருளை வழங்க வேண்டி எனது ஆசிகளையும் தெரிவிக்கிறேன்.

'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க''

பிரதம சிவாச்சாரியார்.

## மஹாகும்பாபிஷேகத்தை தரிசித்து இகபர சுகங்களை பெற்றுய்வோம்

பெருங் கருணையுள்ள இறைவன் உலகம் உய்யும் பொருட்டு ''நிலம், நீர், நெருப்புயிர், நீள் விசும்பு, நிலாப்பகலோன் புலனாய ஐந்தினொடு எண் வகையாய் புணர்ந்து நின்று'' அருள் செய்கிறான் எனத் திருவாசகம் ஓதுகின்றது.

சுடர் இரண்டும் பஞ்ச பூதங்களும் ஆன்மாவும் அட்ட மூர்த்தங்களாம். மண்ணுக்குக் குடமும், நீருக்கு தீர்த்தமும், நெருப்புக்கு ஹோமமும், வளிக்கு மந்திரமும், விண்ணுக்கு ஒலியும், சூரியனுக்கு ஒளியும் திங்களுக்கு மனோலயமும் ஆன்மாவுக்கு உயிருமாகச் சேர்த்து ஒட்டு மொத்தமாக ஓரிடத்தில் நிலைக்க வைத்து செய்யப்படுகின்ற புனித அபிஷேகம் தான் கும்பாபிஷேகம் எனப்படுகின்றது.

பெருஞ்சாந்தி அல்லது குடமுழுக்கு எனச் சொல்லப்படுகின்ற கும்பாபிஷேகம் எங்கும் எதிலும் நிறைந்து இருக்கும் இறைவனை திருக்கோயில் கருவறையுள் பிம்பமதாக எழுந்தருளச் செய்து உள்ளன்போடு பத்தி மேலோங்க அலையும் மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவன் பால் லயிக்கச் செய்து வழிபாடியற்ற உதவுகின்றது.

இகபர சுகங்களைச் சௌபாக்கியங்களைப் பெற்றுய்ய வேண்டுமானால் கும்பாபிஷேகத்தை தரிசிப்பது உகந்தது. அத்தகைய பெரும்பாக்கியம் கோண்டாவில் பதியில் மேஷம் அரு தரு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயிலில் விரோதி வருடம் ஆவணித்திங்கள் 10 ஆம் நாள் இன்று (26.08.2009) புதன்கிழமை நடைபெறுகின்ற மஹாகும்பாபிஷேகத்தை காண்பார்க்கு நிச்சயம் கிடைக்கும். இப்பெரும் கைங்கரியம் தெய்வ அருளால் அனைவருக்கும் கைகூடியுள்ளமை எமது புண்ணியபலனே.

தேவியானவள் சாஸ்திரங்கள் அனைத்தின் சாரத்தை உணரும் கலைமகளாகவும் கிடைத்தற்கரிய பிறவிக்கடலை கடந்து ஈடேறவைக்கும் துர்க்கையாகவும், திருமாலின் இதயத்தில் இடம் பிடித்துறையும் திருமகளாகவும், சந்திர மௌலியிடம் பிரியாதுறையும் கௌரியுமாக விளங்குபவள் எனத் தேவி மகாத்மிய சுலோகம் புகழ்கின்றது.

'இன்ப வடிவாகி நிற்பாள் துன்பமெல்லாம் இழைப்பாள் அஃதெல்லாம் அவள் புரியும் மாயை'' எனச் சக்தியைப் போற்றுவர்.

நாயகி நான்முகி நாராயணி, நளின பஞ்சாயகி என ஆயிரம் நாமங்கள் போற்றும் அன்னையானவள் ஸ்ரீமுத்து மாரியாக கோண்டாவில் திருப்பதியில் கோயில் கொண்டுறைகின்றாள்.

அம்பிகையைப் பணிந்தால் அதிக வரம் பெறலாம் என்பதற்கு அமைய எங்கள் தாயாம் முத்துமாரியைப் வணங்கி வளம் பெற்று வாழ்வோம்.

அ.கந்தசாமி (சமாதான நீதிவான்),
தலைவர், ஆலய பரிபாலன சபை.

## அன்னையின் அருளாட்சி

கோண்டாவில் கிழக்கு அருள்வளர் முத்துமாரி அம்மன் நீண்ட காலமாக எழுந்தருளியிருந்து அடியவர்களுக்கு அருளாட்சி புரிகிறாள். அன்னையின் அருளாட்சி அற்புதமானது.

முத்துமாரி அன்னைக்கு இன்று (26.08.2009) புதன்கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியையும் பேரானந்தத்தையும் அளிப்பதாகும்.

தமிழ்ப் பண்பாடும் சைவசமய பாரம்பரியமும் கொண்ட ஆசாரசீலர்கள் வாழுகின்ற கோண்டாவில் பதியிலே பழைமையும் பெருமையும் கொண்ட ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கு நிகழும் கும்பாபிஷேகம் இனிதே நிறைவேற எல்லாம் வல்ல சக்தித் தாயாம் முத்துமாரியை வேண்டுகின்றோம்.

சகல மக்களும் அஞ்ஞான இருள் நீங்கி மெஞ்ஞான ஒளிபெற்று மகிழ்ச்சியாக வாழ்வதற்கு அன்னையவள் அருளாசி கிடைப்பதாக.

எம்தமிழ் மக்கள் படும் இன்னல்களைக் களைந்து இன்பமாய் வாழ நல்லருள் பாலிக்கக் கருணைக் கடலாம் எங்கள் முத்துமாரித் தாயைப் பிரார்த்திப்போமாக.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
இரண்டாவது குரு மகா சந்நிதானம்,
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்.

## நல்வாழ்வு தருவாயே!

மதிமுகமாட விழியாட மாமகுடமாட
பிறைநுதலாட
காதிற் குழையாட கனகமணிச்சரமாட
பாதச்சிலம்பாட
சோதிச்சுடராட விரிசடை சொக்கனாட
திரிசூலமாட
கொதியுறு சிம்மமாட கொற்றக் குடையாட
பக்தர் குழாமாட
ஆதி சக்தியாய் அரணாய் எமை காப்பவளே எங்கள்
குல தேவியே முத்துமாரி
விதி முடிந்து வினையறுக்கும் தெள்ளமுதே தெய்வமே
நல் வாழ்வு தருவாயே!

கந்த- தியாகராசா.

சுத்தம், சுவை, தரம்,
நியாய விலையில் சகல புரியாணிகள்
சைவம், அசைவம், குளிர்பானங்கள்,
சிற்றுண்டிகள் என்பவற்றுக்கு நாடவேண்டி
ஒரே ஸ்தாபனம்
ஹொட்டல் றொலெக்ஸ்
ஓடர்கள் குறித்த நேரத்தில் கவனிக்கப்படும்.
340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T P: 021 7900018 360, GALLE Road,
Colombo - -06
T.P: 2360462

புலவர் வீடியோ
கோண்டாவில் கிழக்கு
அருள்வளர் முத்துமாரி அம்மன்
ஆலய கும்பாபிஷேகம் சிறப்புற
நடைபெற எல்லாம் வல்ல
முத்துமாரி அம்மன் அருளால்
எல்லோரும் இன்புற்று வாழ
வேண்டுகிறோம்.
அன்றும் இன்றும் என்றென்றும் உங்கள்
புலவர் வீடியோ
கோண்டாவில்

சுத்தம், சுவை, தரம் நியாயவிலை
OMEX HOTEL
ஒமெக்ஸ் ஹொட்டல்
இல. 372, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:021 2229926.

வேதா கொமினிக் கேசன்
வேதா களஞ்சியம்
பல் பொருள் வாணிபம், போட்டோ கொப்பி,
தொலைத் தொடர்பு சேவை
முகவரி: தில்லையம்பதி, கோண்டாவில்.
T.P: 060 221 9402

அன்னை நாகா பூட்சிற்றி
அன்ட் T.K ரேடர்ஸ்
சகல விதமான பலசரக்குப் பொருள்களையும்
நியாய விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.
175, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.

சோதி பல் பொருள் வாணிபம்
கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்.

ஐங்கரன் புடவை மாளிகை
புதிய ரக ஆடைகளை இறக்குமதி செய்து
நியாயவிலையிலும், தள்ளுபடி விலைகளிலும்
பெற்றுக்கொள்ளலாம்.
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி, கோண்டாவில்.

தபேசன் விவசாய மாளிகை.
(புதினப் பத்திரிகை முகவர்)
விவசாய ரசாயன உள்ளீடுகள், விதைவகைகள் நியாயவிலையில்
பெற்றுக்கொள்ளலாம். பலாலி வீதி, கோண்டாவில்.

ஒமெக்ஸ் எலக்ரிக்கல்
மின்னியல் திருத்த வேலைகள் குறித்த
காலத்தில் செய்து தரப்படும்.
கோண்டாவில் சந்தி, கோண்டாவில்.



1 ஆவது
பிறந்த தின வாழ்த்து
இன்று (26.08.2009)
புதன்கிழமை தனது முதலாவது
பிறந்த தினத்தைக் கொண்டாடும்
லோகேஸ்வரசர்மா மனோரஞ்சினி
தம்பதியரின் செல்வப் புதல்வன்
சங்கவன்
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துபவர்கள்:
ஆவரங்கால், புத்தூர். தாத்தா, பாட்டி, மாமா, சித்தி, அப்பா, அம்மா.
(88206)

### கல்வி மேம்பாட்டுத் திட்ட ஆரம்ப நிகழ்வு

தென்மராட்சிப் பிரதேசத்தில் வன் செயல் நடவடிக்கைகளால் பிரதானஉழைப்பாளர்களை இழந்தகுடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி மேம்பாட்டுத் திட்டம் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அறவழி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வி. ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், சாவகச்சேரி பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் பகுதியின் [illegible] திரு [illegible] பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (204)

காரைநகர் பிரதேசசபை, காரைநகர்
பகிரங்க அறிவித்தல்
காரைநகர் கசூர்னா கடற்கரை சுற்றுலா மையத்திற்கு செல்லும் புதிய வீதி (500M நீளம், 11M அகலம்) காரைநகர் பிரதேச சபை பரிபாலனத்திற்கு உட்படுத்தப்படவுள்ளதால், இவ்வீதிக்கு சொந்தம் பாராட்டக் கூடியவர்கள் அல்லது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் எவராவது இருப்பின் 26.08.2009 ஆம் திகதியில் இருந்து ஏழு (07) நாள்களுக்குள் காணி உறுதி, நில அளவை வரைபடம் என்பவற்றுடன் காரைநகர் பிரதேச சபை தலைமை அலுவலகத்திற்கு வேலை நாள்களில் சமுகம் தருமாறு இத்தால் பகிரங்கமாக அறியத்தருகின்றேன்.
காரைநகர் பிரதேச சபை,
காரைநகர்.
இரா.லோகநாதன்
செயலாளர்.
(சி/56045)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி முதியோர் இல்லப் புனரமைப்புக்கு மேலும் எட்டு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

## இல்ல அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.26

கைதடி அரச முதியோர் இல்லத்தின் புனரமைப்புக்கென மேலும் எட்டு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக இல்ல அத்தியட்சகர் என்.இராஜலிங்கம் தெரிவித்தார்.

இல்லத்தின் 4ஆம் இலக்கப் பெண்கள் விடுதியைப் புனரமைப்பதற்கு இரண்டு மில்லியன் ரூபாவும் இல்லத்தைச் சுற்றியுள்ள பாதுகாப்பு மதில்களைப் புனரமைக்க ஆறு மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

புனரமைப்புப் பணிகளை இவ்வாண்டுக்குள் நிறைவேற்றி முடிக்கவேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனைவிட இல்ல ஆண்கள் விடுதியைப் புனரமைப்பதற்கு ஏற்கனவே அறுபது லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தப் புனரமைப்புப் பணிகளை விரைவாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இல்ல அத்தியட்சகர் என்.இராஜலிங்கம் மேலும் கூறினார்.

இதேசமயம் இல்லத்தில் நிலவும் குறைபாடுகள் மற்றும் புனரமைப்புப் பணிகள் சம்பந்தமாக ஆராயும் பொருட்டு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கடந்த சனியன்று முதியோர் இல்லத்துக்குச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அங்கு இல்ல அத்தியட்சகர் மற்றும் அங்கு தங்கியிருக்கும் முதியோர்களையும் சந்தித்து அவர் கலந்துரையாடியுள்ளார். (203-224)

# அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு.

நல்லூர்,ஓக.26

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா அபிவிருத்திக்கென ஒரு லட்சத்து 85ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தின் சங்கிலியன் வீதியில் உள்ள முன்பள்ளியின் கற்றலுக்கான உபகரணங்கள், தளபாடங்கள் கொள்வனவுக்கு 35 ஆயிரம் ரூபாவும்-

நல்லூர், செட்டித்தெரு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் ஒலிபெருக்கிச் சாதனங்களுக்கு 50 ஆயிரம் ரூபாவும் -

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை போட்டோ பிரதி இயந்திரம் கொள்வனவுக்கு ஒரு லட்சம் ரூபாவும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் இந்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (203-111)

# பரதநாட்டிய பட்டப் படிப்புகளுக்கான எழுத்துப் பரீட்சைகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.26

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் 'இணைக்கப்பட்டுள்ள கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரியுடன் இணைந்து திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியினால் நடத்தப்பட்டு வருகின்ற வளாகம் கடந்த பரதநாட்டிய பட்டப் படிப்புக்களான பெருஞ்சான்றிதழ் கற்கைநெறி, இளநுண்கலைமாணி, முதுநுண்கலைமாணி ஆகியவற்றுக்கான எழுத்துப் பரீட்சைகள் இன்றுமுதல் எதிர்வரும் முதலாம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் கலைத்தூது அழகியல் கல்லூரியிலும் கொழும்பிலும் நடைபெறவுள்ளதாகக் கலைத்தூது அழகியல் கல்லூரியின் அதிபர் திருமதி பி.எவ்.சின்னத்துரை அறிவித்துள்ளார். கொழும்பில் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்கான ஒழுங்குகளை கொழும்பு திருமறைக் கலாமன்றம் மேற்கொண்டுள்ளது. (203)

# முன்பள்ளிச் சிறார்களிடையே கதை சொல்லும் ஆற்றலுள்ளோரைத் தெரிவுசெய்யப் போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.26

முன்பள்ளிச் சிறார்களுக்குக் கதை சொல்லும் ஆற்றல் உள்ளவர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிகள் விரைவில் தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் நடத்தப்படவுள்ளன.

பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் போட்டியில் பங்குபற்ற விண்ணப்பிக்கமுடியும்.

சாந்திக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் உரிய படிவத்தினைப் பெற்று நாளைமறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

நட்பு, உறவு, அன்பு, முயற்சி, அகிம்சை, இவற்றில் ஒன்றை வெளிப்படுத்தும் வகையில் இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு 7 நிமிடங்கள் கதை சொல்லுதல் போட்டி நடத்தப்படுமெனவும் அறிவித்துள்ளார். (203-207)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.26

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.26

சாவகச்சேரி, டச்சு வீதி செருக்கல் சித்தி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் மூன்றாம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204-207)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.26

கோண்டாவில் கிழக்கு முத்துமாரி அம்மன் ஆலயக் கும்பாபிஷேக நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறும் மண்டலாபிஷேகத்தில் தினமும் முற்பகல் 11 மணிக்குப் பூசைகள் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை 1008 சங்காபிஷேக நிகழ்வும் இடம்பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.26

யாழ்.கொய்யாத்தோட்டம், புதுவீதியில் அமைந்துள்ள ஸ்ரீ ஞான செல்வவிநாயகர் ஆலயத்தின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (204)

* * *

வண்ணை,ஓக.26

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாக வரத நாராயணர் ஆலயத்தில் ஏகாதசி விரத நிகழ்வு எதிர்வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசை ஆரம்பமாகும். 9 மணிக்குச் சிறப்புச் சமயச் சொற்பொழிவும் இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று, அதனைத் தொடர்ந்து சுவாமி திருவீதியுலா வருவார். (204-160)

* * *

நவாலி,ஓக.26

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204-100)

* * *

வண்ணை,ஓக.26

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாக வரத நாராயணர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

தினமும் காலை 8 மணிக்கு அபிஷேகப் பூசைகள், முற்பகல் 10 மணிக்குத் தம்பப் பூசை, 10.30 மணிக்கு பஜனை, 11 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும்.

மாலைத் திருவிழாவில் பிற்பகல் 3 மணிக்குப் பூசைகள் ஆரம்பமாகி 3.30 மணிக்குத் தம்பப் பூசை, 4 மணிக்குக் கலை நிகழ்ச்சிகள், மாலை 5 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் இடம்பெறும். (204-160)

* * *

வண்ணை,ஓக.26

யாழ்.அடைக்கல அன்னை தேவாலய வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பெருவிழா சிறப்பாக நடைபெறும். அதிகாலை 5.30 மணிக்கு முதல் திருப்பலியும் காலை 6.45 மணிக்குத் திருவிழா பாடல் கூட்டுத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

அன்றையதினம் மாலை 5 மணிக்குச் திருச்சொரூப பவனி ஆரம்பமாகி முடிவில் திருச்சொரூப ஆசீர் வழங்கலுடன் திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவடையும்.

முதல்நாள் 7ஆம் திகதி நற்கருணை விழா பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பிக்கும். 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.45 மணிக்கு முதல்நன்மைத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். தினமும் மாலை 5 மணிக்குத் திருநாள் ஆயத்த வழிபாடுகள் திருச்செபமாலையோடு ஆரம்பமாகுமென பங்குத்தந்தை அருட்பணி ம.றெஜி இராஜேஸ்வரன் அடிகளார் தெரிவித்தார். (204-160)

# உழவு இயந்திரத்திலிருந்து தவறிவிழுந்ததில் வயோதிபர் காயமடைந்தார்

யாழ்ப்பாணம்,ஓக.26

உழவு இயந்திரத்திலிருந்து தவறிவீழ்ந்து வயோதிபர் காயமடைந்தார். இச்சம்பவம் மீசாலை, டச்சு வீதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ்.அப்புலிங்கம் (வயது 62) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (203-207)

# கொழும்புத்துறை, ஈச்சமோட்டைப் பகுதியில் இரவில் திருடர்களின் நடமாட்டம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.26

கொழும்புத்துறை, ஈச்சமோட்டைப் பகுதியில் இரவு நேரங்களில் திருடர்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் இரவு நேரங்களில் அதாவது மக்கள் நித்திரையில் இருக்கும் சமயம் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது என்று கூறப்படுகிறது.

இதேசமயம் பகல் வேளைகளிலும் கொழும்புத்துறை மேற்குப் பகுதியில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

ஆள்கள் குடியிருப்புகளற்ற வெறும் காணிகளில் இருக்கும் பயன்தரும் மரங்களையும் இரவு நேரங்களில் வெட்டிச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-224)

# தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் புதிய திருமஞ்சம் வெள்ளோட்டம் இன்று

வலி.வடக்கு,ஓக.26

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்திற்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திருமஞ்சத்தின் வெள்ளோட்ட விழா இன்று புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருமஞ்ச சிற்பக் கலைஞர் விஸ்வபிரம்மஸ்ரீ ஸ்தபதி செ.பாலச்சந்திரன், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளார்.

ஆசியுரைகளை மாவை ஆதீனகர்த்தா மகாராஜாஸ்ரீ.சு.து. ஷண்முகநாதக் குருக்கள், கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தா இராஜஸ்ரீ.கு.நகுலேஸ்வரக் குருக்கள், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமகா சன்னிதானம் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக்குருக்கள் ஆகியோர் வழங்குவார்கள்.

வாழ்த்துரைகளை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், தெல்லிப்பழை பிரதேச செயலர் சி.முரளிதரன், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத் தலைவர் க.ரவீந்திரா ஆகியோர் வழங்கவுள்ளனர். (சிறப்புமலர் 13ஆம் பக்கத்தில்). (1-86)



அண்மையில் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருந்த கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவர்கள் உதயனுக்கும் வருகை தந்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வர்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்

தொகுப்பு: ஔண்யன்

## "பழைய பித்தளைப் பொருள்களிலும், மரச் செதுக்குகளிலும் நம் பண்பாட்டின் கூறுகள் எஞ்சியுள்ளன. இவற்றினை விற்பதும் அழிப்பதும் சரியா?"



சிறு தெய்வ வழிபாடுகள் இன்னமும் அற்றுப்போய் விடவில்லை என்பதை நீங்கள் பார்க்கும் படம் சுட்டி நிற்கின்றது. சித்தன்கேணி பெரியதம்பிரான் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் உற்சவம் அண்மையில் நடைபெற்றது. அதன்போது வித்தியாசமான முறையில் பொங்கல் படையல் இடப்பட்டது. பொங்கலின்போது பழவகைகள், பொங்கல், வடை, பால் ரொட்டி என்பவற்றுடன் வித்தியாசமான வடிவில் அமைந்த - இடியப்ப வடிவத்தையொத்த - பலகாரமும் அடுக்கப்பட்டு அழகுணர்வோடு செய்யப்பட்ட படையலை வைத்து இப் பகுதி மக்கள் காலம் காலமாக வழிபட்டு வருகின்றனர். நவீனத்துவத்தின் பரவுகையில் அகப்படாது இன்னமும் உயிர்வாழும் நமது பண்பாட்டம்சங்களில் ஒன்றாக இந்தப் படையலைக் கொள்ளலாம்.

(படமும், தகவலும்: நந்தன்)



தென்னை கிளைகளற்ற மரம் என்பது எல்லோருக்குமே தெரியும். ஆனாலும் அவ்வப்போது சில விதிவிலக்குகள் இருக்கவே செய்கின்றன. தென்மராட்சியின் மீசாலை கேணிப்பிட்டி பழைய பாடசாலைக்கு அண்மையில் உள்ள வளவொன்றில் ஆறு கிளைகளையுடைய அதிசயத் தென்னை ஒன்று ஓங்கி வளர்ந்துள்ளது. ஆரம்பத்தில் தனித் தென்னையாகவே வளர்ந்த இம் மரம் பின்னர் ஆறு கிளைகளாகப் பிரிந்தது. கிளைகள் ஒவ்வொன்றும் முழுவளர்ச்சியோடு காணப்படுகின்றன. ஆறு கிளைகளுக்கு இந்த அதிசயத் தென்னைக்கு வயதோ நூறு!

(படமும் தகவலும்- அருணன்)

படத்தில் காணப்படுவது நூறு வருடங்களுக்கு முற்பட்ட பித்தளையினால் செய்யப்பட்ட தட்டமாகும். இத் தட்டத்தில் உள்ள சிறப்பம்சம் என்னவெனில் விகாரைகளில் அமைக்கப்படும் சந்திர வட்டக் கல்லின் தோற்றத்தில் அமைக்கப்பட்டமையாகும். யானை, குதிரை என்பவற்றை முதல் வரிசையிலும் இலையிலான அலங்காரத்தை அடுத்த வரிசையிலும் பறவைகளை மூன்றாவது வரிசையிலும் கொடிகளால் ஆன அலங்காரத்தை நான்காவது வரிசையிலும் மையத்தில் சந்திரனின் உருவத்தையும் கொண்டதாக இத் தட்டம் காணப்படுகின்றது. இன்னமும் யாழ்ப்பாணத்தில் பேணப்படும் இத் தட்டம் முன்னைய காலங்களில் இலங்கை முழுவதும் நிலவிய பண்பாட்டு அம்சங்களையும், கலைநயத்தையும் ஒரே பார்வையில் வெளிப்படுத்தி நிற்கின்றது. (படமும், தகவலும்:நந்தன்)





படத்தில் கம்பீரமாக உள்ள காளையின் பெயர் லூர்ச் என்பதாகும். தென்னாபிரிக்காவில் 'மிசூரி' என்ற இடத்தில் உள்ள இந்தக் காளை உலகத்திலேயே அதிகூடிய சுற்றளவு கொண்ட கொம்பினை உடைய மிருகம் என்ற சாதனைக்கு சொந்தக்காரன். 11-10-1995 இல் வற்சுயி என்ற பண்ணையில்தான் லூர்ச் பிறந்தான். இதனை ஜனிஸ் வூல்ப் என்ற பெண்மணி பராமரித்தாள். சிறு வயதிலேயே லூர்ச்சின் கொம்புகள் அதீத வளர்ச்சி கொண்டவையான இருந்தன. இப்போது 38 அங்குலம் சுற்றளவும் 7 அடி 6 அங்குல நீளமும் கொண்ட கொம்புகள் லூர்ச்சுக்கு உண்டு. இதன் கொம்புகள் இன்னமும் வளரக்கூடும் என்று பலர் கணித்துள்ளனர்.


சிதைந்து போன நிலையில் சிறு குட்டைபோல படத்தில் காணப்படும் நீர்த்தேக்கம் சாதாரணமானதல்ல; சரித்திரப் பிரசித்தி பெற்றது. சாவகச்சேரியில் உள்ள புராதன வாரியப்பர்(வாரிவனேஸ்வரம்) சிவன் ஆலயத்தின் தீர்த்தக்கேணியே இது. 300 அடி நீளமும், 300 அடி அகலமும் கொண்ட இந்தக் கேணியினை பதுமத் தீர்த்தக்கேணி என்று அழைப்பர். பதுமத் தீர்த்தக்கேணியைக் கொண்ட வாரிவனேஸ்வரர் ஆலயம் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் போன்ற தொன்மையான ஆலயங்களின் சமகாலத்தைச் சேர்ந்தது என்று நம்பப்படுகின்றது.

(படமும் தகவலும்- அருணன்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'இன்புளுவன்சாவை' எதிர்கொள்ளத் தயாராவோம்




உலகம் முழுவதும் பேசப்படும் தற்போதைய இன்புளுவன்சா காய்ச்சல் ஆனது இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. இது பல நூற்றாண்டுகள் கடந்து பல மாற்றங்களுக்கு உட்பட்டு நோயினைப் பரப்புகின்ற இன்புளுவன்சா வைரசினால் ஏற்படுகின்றது. இன்புளுவன்சா வைரசானது மூன்று உப பிரிவுகளைக் [Subtypes] கொண்டுள்ளது. இதில் உப பிரிவு A வகையைச் சேர்ந்தது. இந்த உபபிரிவினைச் சேர்ந்த $H_1N_1$ வைரசானது தற்போதைய உலகளாவிய தொற்றுகைக்கான காரணமாகும்.

முதன் முதலாக 1918ஆம் ஆண்டு ஏற்பட்ட உலகளாவிய தொற்றுகையின் போது $H_1N_1$ வைரசானது கண்டு பிடிக்கப்பட்டது. தற்போதைய $H_1N_1$ வைரசானது அப்போதைய வைரசின் வளரும் குடும்பத் தொடர்பைக் கொண்டுள்ளது. இதனை ஆராய்வதானால் முதலில் இன்புளுவன்சா வைரஸ் எவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளது. அவை எவ்வாறு பெயரிடப்படுகின்றன. அவை எவ்வாறு பெருகுகின்றன. அவற்றில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றினால் எவ்வகையான நோய்த்தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன என்பது பற்றி அறிதல் முக்கியமானது.

இன்புளுவன்சா வைரசானது எட்டு உறுப்பினர்களைக் கொண்ட நிறப்பொருள் அணியைக் கொண்டுள்ளது. இவ் எட்டு பிறப்புரிமைப் பதார்த்தங்கள் ஒன்றுசேர்ந்து தொழிற்படுபவை. சிலவேளைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிறப்புரிமைப் பதார்த்தங்களைப் பரிமாறுவதன் மூலம் வேறுவகையான தாக்குத்திறனைப் பெறுகின்றது.

இயற்கையில் பறவையினத்தைச் சேர்ந்த இன்புளுவன்சா [Avian Influensa] ஆனது பிறப்புரிமைப் பதார்த்தங்களை எழுந்தமானமாக மாற்றியமைத்து பல் வேறுபட்ட பறவையினங்களின் உணவுக்கால்வாய்த் தொகுதியில் வாழ்கின்றன. இப் பறவையினங்கள்தான் இவ் வைரசின் உறைவிடமாகக் காணப்படுகின்றன. இவ்வாறான தொடர் பிறப்புரிமை மாறல் ஆனது முடிவற்ற பலவகையான வைரஸ் வகையினை உருவாக்குகின்றது. இதனால் பலவகைத் தன்மையுள்ள பறவை இன்புளுவன்சா ஆனது ஆராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் எவ்வாறு பறவை இன்புளுவன்சா [Avian Influensa A] மற்ற மிருகங்களையும் மனிதனையும் தொற்றுக்குள்ளாக்கி நோயை ஏற்படுத்துகின்றது என்பது பற்றிய அறிவு போதியளவில் இல்லை.

இதுமட்டுமன்றி இன்புளுவன்சா வைரசானது பொதுச் சுகாதார மற்றும் மருத்துவ சம்பந்தமான முக்கியத்துவமான நோய்த்தொற்றுகை, நோய்கடத்தல் மற்றும் நோயுருவாக்கல் என்பவற்றைச் சிக்கலான பொறிமுறைகளின் ஊடாக செயற்படுத்துவதுடன் இவை பற்றி பெரியளவில் அறியப்படவில்லை.

ஒவ்வொரு இன்புளுவன்சா வைரசுகளும் அவற்றின் பிறப்புரிமை பெயரிடல் மூலம் அடையாளப்படுத்தப்படுகின்றன. இதற்காகப் பொதுவாக H மற்றும் N எழுத்துகள் பயன்படுத்தப்படுகின்றன. Hemagglutinin [ஈமக்குளிரின்] என்பது H எனும் எழுத்து மூலமும் Neuraminidase ஆனது N எனவும் குறிக்கப்படுகின்றது. இவையிரண்டும் வைரஸ் மேற்பரப்பில் காணப்படும் புரதங்கள். இப்புரதங்கள் பிறபொருள்களாகக் காணப்பட்டு நோய்த்தாக்கத்திற்கு உட்படக்கூடிய வழங்கியின் கலங்களை Iurfacoantisen தாக்குவதற்கு உதவுவதுடன் கலங்களில் வைரஸ் பெருகாது தடுக்கும் நோய் எதிர்ப்பு பொறிமுறையின் செயற்பாட்டைத் தடுக்கின்றது. H ஆனது 16 வகையினையும் N ஆனது 9 வகையினைக் கொண்டு வைரசானது 144 வகையினை உருவாக்கக் கூடியதாகக் காணப்பட்ட போதும் இதுவரையில் $H_1N_1$ $H_2N_2$ மற்றும் $H_3N_2$ ஆகிய மூன்றுமே மனிதனில் வாழும் தன்மையுள்ள வைரஸ்களாகக் காணப்படுகின்றன. இதன் மூலம் புலப்படுவது என்னவெனில் இவ் வைரசானது மனிதனில் வாழ்வதற்கான சரியான மாறுதல் அடைவதில் வெற்றியடையவில்லை. இதற்கான ஒரு காரணம் என்னவெனில் புதிதாக உருவாக்கப்படும் வைரசுக்கள் விருந்தாளிகளில் வாழ்வதற்கு மட்டுமல்லாது தனது பிறப்புரிமை மாறல்களும் ஏற்பமாறுதல் அடையவேண்டி இருப்பதாகும்.

1918ஆம் ஆண்டில் நோயினை ஏற்படுத்திய வைரசின் எட்டு பிறப்புரிமைப் பொருளிலும் குறைந்தளவு பிறப்புரிமைப் பொருளினைக் கொண்ட புதிய வைரசுக்கள் 1918 வைரஸ் ஏற்படுத்திய நோயின் தாக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை. இதனை நாம் இன்புளுவன்சாவின் தாக்கத்தினைக் குறிக்கும் அட்டவீணையினை விரிவாக ஆராயும்போது உற்று நோக்கலாம்.

ஒருமுறை ஒரு இன்புளுவன்சா வைரஸ் தோன்றி ஒரு உலகளாவிய தொற்றுகையை ஏற்படுத்தியவுடன் சனத்தொகையில் $H_A$ மற்றும் $N_A$ புரதங்களுக்கான உடலில் நோய் எதிர்ப்பு சக்தி மிக வேகமாக ஏற்படுகின்றது. சனத்தொகையில் ஏற்படும் அதீதமான நோய் எதிர்ப்பு சக்தியானது வைரசிற்கு அதன் நிறமூர்த்தத்தில் மாறுதலினை ஏற்படுத்தவேண்டிய தேவையை ஏற்படுத்துகின்றது. இதனால் இன்புளுவன்சா வைரசானது தனது பிறப்புரிமை நிற மூர்த்தங்களைப் புதிதாக மாற்றி அமைத்தல் பொறிமுறைமூலம் drift அல்லது ஒரே உட்பிரிவைச் சேர்ந்த இன்புளுவன்சாவின் வேறுபட்ட HA யினைப் பெறுவதன் மூலம் Shift அல்லது வேறுபட்ட உட்பிரிவு இன்புளுவன்சாக்களின் வேறுபட்ட HA யினைப் பெறுவதன் மூலம் பரிநாம வளர்ச்சி அடைகின்றது.

அட்டவணை 1:1

| உலகளாவிய மற்றும் பருவகால இன்புளுவன்சாவினால் ஏற்பட்ட இறப்புகள் 1918 - 2009 | | |
|---|---|---|
| ஆண்டுகள் | வைரசின் பிறப்புரிமைப் பொருள் | மேலதிக இறப்புகளின் எண்ணிக்கை 100,000 பேரில்/ வருடங்கள் |
| 1918 - 1919 | $H_1N_1$ | 598.0 |
| 1928 - 1929 | $H_1N_1$ (drift) | 96.7 |
| 1934 - 1936 | $H_1N_1$ (drift) | 52.0 |
| 1947 - 1948 | $H_1N_1$ A | 8.9 |
| 1951 - 1953 | $H_1N_1$ | 34.1 |
| 1957 - 1958 | $H_2N_2$ | 40.6 |
| 1968 - 1969 | $H_3N_2$ | 16.8 |
| 1972 - 1973 | $H_3N_2$ | 11.8 |
| 1975 - 1976 | $H_3N_2$ + $H_1N_1$ | 21.0 |
| 1997 - 1999 | $H_3N_2$ A Sydney மற்றும் $H_1N_1$ | 49.5 |
| 2003 - 2004 | $H_3N_2$ A Fujian + $H_1N_1$ | 17.1 |
| 2009 | $H_3N_2$ +$H_1N_1$ drift + Swine - Orisin $H_1N_1$ | |

1918 இன்புளுவன்சா வைரசானது 1957 இல் $H_2N_2$ மற்றும் 1968 இல் ($H_3N_2$) உலகளாவிய இன்புளுவன்சா நோயினை நிறமூர்த்த பரிமாற்றத்தின் மூலம் ஏற்படுத்தியிருந்தது.

பொதுவாக உலகளாவிய பாரதூரமான இன்புளுவன்சா(Pandemic) பிறப்புரிமைப் பொருள்களின் பரிமாற்றத் தினாலும் Shift பிறப்புரிமை மாறுதல்கள் drift இனால் பருவகால இன்புளுவன்சாவின் நோயினால் ஏற்படும் இறப்பு வீதத்தினைக் கூட்டும் என்பது காலம் காலமாக மருத்துவ உலகில் நம்பப்படும் நம்பிக்கையாகும். ஆனால் அட்டவணையினை உற்று நோக்கினால் இவ்வகையான பலவித பிறப்புரிமைப் பொருள் மாறுதலினால் ஏற்படும் மாற்றங்களினால் ஏற்பட்ட நோய்த் தாக்கத்தில் அவ்வாறான சீரான மாற்றத்தினை அவதானிக்க முடியவில்லை.



இன்றைய நிலை என்னவெனில் 1918 இன்புளுவன்சா வைரசில் காணப்பட்ட எல்ல 8 பிறப்புரிமைப் பொருள்களினை வெவ்வேறு வடிவங்களில் கொண்ட வழித்தோன்றல் இன்புளுவன்சாக்கள் மனிதனிலும் பன்றியிலும் பரிமாறப்பட்டுக்கொண்டு இருக்கின்றன. பழைய வைரசானது இற்றவரையும் தொடர்ந்து தனது பிறப் புரிமைப் பதார்த்தங்களைப் புதிய வைரசிற்குக் கொடுப்பதன் மூலம் உலகளாவிய சடுதாயன அதிகளவிலான மற்றும் மிருகங்களில் இருந்து மனிதனுக்குமான தொற்றுகையினை ஏற் படுத்திக்கொண்டிருக்கின்றது.

2009ஆம் ஆண்டுக்கான உலகளாவிய தொற்றுகைக்கு காரணமான இன்புளுவன்சா வைரசானது 1918ஆம் ஆண்டு வைரசின் நான்காம் தலைமுறையைச் சார்ந்தது. இதன் பரிநாம வளர்ச்சியானது மிகவும் சிக்கலானது. இவ் வளர்ச்சியானது மனித இன்புளுவன்சா வைரசுக்களின் பிறப்புரிமைப் பரிமாறல்களினால் மட்டுமல்லாது பறவை இன்புளுவன்சா மற்றும் பன்றிகளில் காணப்படும் இன்புளுவன்சா என்பவற்றின் பிறப்புரிமை பொருள்களைக் கொண்ட கலவையாகும். இந்தக் கலவையானது பல் வேறு காலங்களில் மனித சமூகத்தில் காணப்பட்ட நோய் எதிர்ப்பு சக்திக்கு ஏற்றவாறு தனது பரிணாம வளர்ச்சியைக் காட்டியுள்ளது.




வைரசின் அதீதமான பரிணாம வளர்ச்சி மற்றும் சமூகத்தில் ஏற் படும் நோய் எதிர்ப்பு சக்தி என்பன கடந்த 91 வருடங்களாக உலகளாவிய இன்புளுவன்சா தாக்க காலத்தினை ஏற்படுத்தியுள்ளன. ஆனால் இவை பற்றி அறியவேண்டியுள்ளது. இது நின்று போவது பற்றி எமக்கு ஒரு சிறியளவிலான தடையம் மட்டுமே உள்ளது.

ஆனால் நல்லதொரு செய்தி என்னவெனில் உலகளாவிய இன்புளுவன்சா தாக்கமானது அதன் வீரியத்தன்மையினை இழந்து வருவதாகும். அதாவது நோயினால் தாக்கப்பட்டவர்களில் இறப்புவீதம் குறைந்து வருகின்றமை. இதனை அட்டவணை 1.1 இல் பார்க்கலாம் ஆனால் இதுபொதுச்சுகாதாரமற்றும் மருத்துவ சிகிச்சை முறைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தினாலும் ஏற்பட்டிருக்கக்கூடும்.

ஆனால் நோயின் வீரியத்தன்மை குறைந்து வருதல் ஆனது வைரசானது தனது நோய் தொற்றுகையினை அதி உச்சளவில் பேணி நோயின் வீரியத் தன்மையினை குறைந்திருப்பதனால் தனது வாழ்வாதாரத்தை பேணுவதற்கான ஓர் அணுகுமுறையாகவும் கருதலாம்.

இது இவ்வாறு இருக்கையில், ஆனால் நாம் எப்போதும் புதிய அதிக வீரியத்துடன் கூடிய இன்புளுவன்சா வைரசின் தாக்கத்தினைச் சமாளிக்கக்கூடிய தயார்நிலையில் இருத்தல் மட்டுமல்லாது இவ் உலகளாவிய இன்புளுவன்சா தாக்கத்தினைப் பற்றி மிக நுண்ணியமாகவும் ஆழமாகவும் அறியமுற்படுவது அவசியமாகும். [தொடரும்]

டாக்டர் இ.சுரேந்திர[illegible]
விரிவுரையாளர், சமுதாய மருத்துவத்துறை. யாழ்.பல்கலைக்கழகம்.

# நலம் தரும் மூலிகை உணவுகள்

உணவே மருந்து 4

**08. சிறு பயற்றுக்கஞ்சி**

போஷாக்குணவாகக் கஞ்சியைப் பயன்படுத்தும் போது அதில் அரிசியுடன் ஏதும் ஒரு பருப்புவகையையும் சேர்த்துக் காய்ச்சுதல் வேண்டும். நாம் முன்னர் குறிப்பிட்டது போல அரிசியில் இலைசீன் என்னும் முக்கிய அமினோஅமிலம் பற்றாக்குறையாக உள்ளது. ஆனால் அந்த அமினோஅமிலம் பருப்புவகைகளில் அதிகளவில் உள்ளது. எனவே இவை இரண்டும் சேரும் போது ஒன்றின் குறைபாட்டை மற்றது நீக்கிவிடுகிறது. எனவே, அரிசியுடன் சிறுபயறு, துவரம்பருப்பு, கொள்ளு, உளுந்து போன்றவற்றைச் சேர்த்துப் போஷாக்கான கஞ்சிகள் தயாரிக்க முடியும். அவ்விதம் தயாரிக்கும் போது அரிசியின் அளவுக்கு நாலில் ஒரு பங்கு பருப்புவகை சேர்த்தால் போதுமானது.

சிறு பயற்றுக் கஞ்சியில் சிறுபயறு அல்லது பயற்றம் பருப்பும், பச்சை யரிசியும் சேர்த்துக் கஞ்சி காய்ச்சப்படும். இது பசி, தாகம், நீரிழப்பு, பித்தமயக்கம் என்பவற்றை நீக்கவல்லது. உளுந்துக் கஞ்சியில் உளுத்தம் பருப்பும், அரிசியும் சேர்த்துக் கஞ்சி தயாரிக்கப் படும். இக்கஞ்சி மிகவும் பலவீனமானவர்களுக்கும், மெலிந்தவர்களுக்கும் கொடுக்க உகந்தது.

"சிறுபருப்புக் கஞ்சி பித்தந்தீர்க்கு முளுந்தினுரு பருப்புக் கஞ்சி வளிக் கூக்கம்...."

**09. கொள்ளுக்கஞ்சி**

கொள்ளு என்றவுடன் அது குதிரையின் உணவு என்றுதான் பலரும் நினைக்கிறார்கள். கொள்ளை உணவாகக் கொண்ட குதிரைகள் முற்காலத்தில் போக்குவரத்திலும் போர்க்களத்திலும் முக்கிய பிராணிகளாகவிளங்கியுள்ளன. கொள்ளைத் தின்றும் கொழுக்காமல் சக்தி மிக்கவையாகக் குதிரைகள் விளங்கியுள்ளன என்றால், அதற்குக் கொள்ளிலுள்ள போஷாக்குச் சக்திதான் காரணமாகும். கொள்ளில் அத்தியாவசியமான அமினோ அமிலங்கள் பல உள்ளன. அத்துடன் புரதச்சத்தும் இரும்புச் சத்தும் உள்ளது. கொள்ளுக்கு உடல் வலிமையைக் கொடுக்கும் சக்தியும் அதேவேளை உடலை மெலியச்செய்யும் தன்மையும் மருத்துவக் குணங்களாக உள்ளன. எனவே தான் "கொழுத்தவனுக்குக் கொள்ளு" என்றும், "யானை கொழுத்தால் கொள்ளுக் கொடு" என்றும் பழமொழிகள் உள்ளன.

எனவே அரிசியுடன் கொள்ளைச் சேர்த்துக் காய்ச்சப்படும் கொள்ளுக் கஞ்சி போஷாக்கு மிக்கதொரு பானமாக அமைகின்றது. கொள்ளுக் கஞ்சியானது அதிகபசி, பலம், வீரியம் என்பவற்றைக் கொடுக்கும். எள்ளைக் கையால் கசக்கி எண்ணெய் பிழியக்கூடிய வலிமையை கிழவர்களுக்கும் உண்டாக்கக் கூடியது என்றும் வியந்துரைப்பர்.

- ★சிறுவர்கள்
- ★வயோதியர்கள்
- ★உடல் பருத்தவர்கள்
- ★பலவீனமானவர்கள்
- ★சிறுநீரகத்தில் கல் உள்ளவர்கள்

போன்றோருக்கு இக்கஞ்சி உகந்த தாகும்.

கொள்ளுத் [illegible] கஞ்சியது

கொள்ளுங்காற் றியனத்தைக் கூறுவதே - வெள்ளை
நகக்கிப் பிழிபலமு நல்விந்து விந்துவுமே
வகக்குங் கிழவர்கட்கும் வை

★ தண்டுலம் -அரிசி

★ கொள்ளைக் கஞ்சியாக மட்டுமன்றி கண்டல் கடலை ஊற வைத்து அவித்துச் சாப்பிடுவது போலச் சாப்பிட்டாலும் மேற்படி பயன்களைப் பெறமுடியும்.

**10. புளிக்கஞ்சி**

தேவையான பொருள்கள்: புழுங்கல் அரிசி- 100 கிராம், மல்லி -1 மேசைக் கரண்டி, சீரகம்-1 தேக் கரண்டி, செத்தல் மிளகாய்-5, மஞ்சள் -சிறு துண்டு, உள்ளி- 1 பல்லு, மிளகு-10, புளி- கொட்டைப் பாக்களவு, உப்பு- தேவையான அளவு, தேங்காய்ப்பால்- பாதித் தேங்காயில் இருந்து பிழிந்தெடுத்தது, முருங்கையிலை/ கொவ்வையிலை- 1 பிடி

தயாரிக்கும் முறை:


அரிசியை ஒரு சட்டியில் இட்டுப் போதியளவு நீர்விட்டு நன்கு வேகவைத்துக் கொள்ளவும். செத்தல் மிளகாய், மல்லி, மிளகு, சீரகம், மஞ்சள், உள்ளி என்பவற்றை அம்மியில் நன்கு அரைத்து மேற்படிக் கஞ்சியில் போடவும். புளியை நீரில் கரைத்துச் சேர்க்கவும். அதேயளவு தேங்காய்ப் பாலும் சேர்க்கவும். தேவையான அளவு உப்பும் சேர்த்து முருங்கையிலை/ கொவ்வையிலையைக் குறுணலாக அரிந்துபோட்டு நன்கு கொதித்து வெந்ததும் இறக்கிக் கொள்ளவும். இந்தக் கஞ்சி தடிமன், காய்ச்சல் போன்ற நோய்களில் நாக்குச் சுவையுணர்ச்சியை இழந்தவர்களுக்கும் அசீரணம், சோர்வு, பலவீனம் உள்ளவர்களுக்கு கொடுக்க உகந்தது.



டாக்டர்.சே.சிவசண்முகராஜா [M.D(S)]
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உரும்பிராய் மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய மகேஸ்வர பூஜைக்காக திரட்டப்பட்ட நிதி யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்பிலிடப்பட்டு அதற்கான வைப்புச் சான்றிதழினை யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ந.யோகராஜன், தொழில்நுட்பக் கல்வி நிறுவன மாகாணப் பணிப்பாளர் திருமதி யோகராஜன் மாலதி தம்பதிகளிடம் தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளரிடம் அ.தெய்வேந்திரன் ஒப்படைப் பதையும் வங்கியில் நிலையான வைப்பிட்டமைக்கான சான்றிதழை செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் ஆலய பரிபாலன சபையிடம் ஒப்படைப்பதையும் படங்களில் காணலாம்.

# மாற்று வலுவுள்ளோருக்கும் வாய்ப்புக்களை வழங்குவது இன்றைய சமூகத்தின் தேவையும் சேவையும் ஆகும்

மாற்று வலுவுள்ளவர்கள் சாதனை படைக்கக் கூடியவர்கள் தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படக் கூடியவர்கள். இதற்கு கட்டியங் கூறு வதாக வடக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள பயிற்சி மையத்தில் வாய்பேச முடியாத, காது கேட்க முடியாத பயனாளிகளுக்கான வீட்டு மின்சார உபகரணங்கள் திருத்தும் மூன்று மாத பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

இவர்கள் தொழில் உபகரணங்கள் வழங் கப்பட்டு சிறந்த வழிகாட்டல் ஏற்படுத்தப் பட்டு தமது குடும்பச் சூழலில் வருமான மேலீடு ஏற்படுத்தப்பட்டு நிலைபேறாக வேண்டும் என்பதற்காக இத்திட்டம் வடி வமைக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின் றது. பொருளாதார மேம்பாடு ஏற்படும் போது சமூக மயமாக்கல் சிறந்த முறையில் வலு வாகி சமூக ஒன்றிணைப்பு ஏற்படுவதை உறு திப்படுத்துவது இத்திட்டத்தின் நீண்டகால இலக்காகும். செய்முறைப் பயிற்சிகளுடன் இத்திட்டம் சிறந்த முறையில் மேற்கொள்

த.கிருபாகரன்,
சமூக சேவைத் திணைக்களம்,
யாழ்.மாவட்டம்.

ளப்பட்டு வருகின்றது. மாணவர்களும், ஆசி ரியர்களும் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகின்றனர். மனச்சுமைகளை குறைக்கும் செயற்பாடாகவும் நம்பிக்கையை மேலோங் கச் செய்யும் வழிவகையாகவும் இத்திட்டம் பரிணமித்துள்ளது.

உடுவில் பிரதேச சமூகசேவை உத்தி யோகத்தர், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ஆகியோரின் வினைத்திறன் மிக்க செயற் பாடுகள் மெச்சுதற்குரியவையாக விளங்கு வது மற்றுமொரு சிறப்பம்சமாகும். சமு தாயம் விழிப்படைந்து செயற்பட்டு வாய்ப் புக்களை இப் பயிற்சியாளர்களுக்கு வழங்கி இத்திட்டத்தின் இலக்கை அடைவதற்கு பங்களிப்புச் செய்யலாம். இந்த நடவடிக்கை சமூக விழிப்புணர்வுக்கு வித்திடுவதோடு தரம்வாய்ந்த சமூகமாக எம்மை நிலைநிறுத் தவும் சான்றாக அமையும். இதற்கு யாழ். மாவட்டத்திலிருக்கும் ஒவ்வொரு மனித னும் தன்னை உணர்ந்து இத்தகையவர் களின் தொழில் திறன் விருத்திக்கு தமக்கு உருவாகும் வாய்ப்புக்களுக்கு உதவுவதற் காக முன்வரலாம்.

யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலிருந்து பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படுவ தால் தொழிற்போட்டியில் தேக்கநிலை தவிர்க்கப்பட்டுள்ளது. இங்கு பயிற்சியாளர் களின் திறமைகளை வெளிப்படுத்தும் முகமாக யாழ்.மாவட்டத்தில் பெருமெடுப் பிலான கண்காட்சி நடத்த திட்டமிடப்பட் டுள்ளது. மாற்று ஆற்றலுள்ளவர்களின் தொழில் திறமைகளை சமூகம் தெரிந்து கொள்வதற்காகவும் அவர்களை முறைப் படி பயன்படுத்த முடியும் என்ற எண்ணத்தை நிலைநிறுத்துவதற்காகவும் இத்தகைய ஏற்பாடு ஐப்பசி மாதத்தில் நடைமுறை யாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக் கண் காட்சியில் பிற தொழிற்துறைகளில் முத் திரை பதித்துள்ள பதிக்க நினைக்கும் மாற்று வலுவுள்ள தொழில் விற்பன்னர்கள் கண் காட்சியில் இணைந்து கொள்ள காட்டுக் கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளியிலுள்ள மாவட்ட சமூக சேவைத் திணைக்களத்து டன் தொடர்பு கொள்ள முடியும்.

மேலும் மாற்றுவலுவுள்ளவர்கள் யாழ். மாவட்டத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெற முடியாது உள்ளனர். ஆனால் இவர்கள் சொந் தமாக வாகனம் வைத்து பாதுகாப் பாக வாக னத்தைச் செலுத்தும் நிலையி லுள்ளனர். இத்தகைய 58பேர் யாழ். மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்கள் இந்த வாகனங்களை தொழில் விருத்திக்காகவும் தமது நடமாட்டத்திற் காகவும் பய[illegible]டுத்து கின்றனர். இவர்களது இத்தேவையை நிறை வேற்ற உதவுவதற்கு பொருத்தமான ஆலோ சனைகளையும் எமது மாவட்ட அலுவலகத் திற்கு தெரியப்படுத்துவதன் மூலம் தமது ஒத்துழைப்பை வழங்க முடியும்.

இன்றைய சமூகத்தின் தேவையாக மாற்று வலுவுள்ளவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதும் சமூக ஒன்றிணைப்பை ஏற் படுத்தி சமூகத்தில் வைத்தே புனர்வாழ் வளிப்பதும் புதிய சமூகக் கோட்பாடாக உருப்பெற்றுள்ளமையால் இதற்கு வலுச் சேர்ப்பது ஒவ்வொரு மனிதனதும் தார்மீகக் கடமையாகும். சென்ற வருடம் பார்வை யற்றவர்கள் 17 பேருக்கு கணனிப் பயிற்சி வழங்கி இவ்வருடம் மேலும் 10 பார்வை யற்றோர்களுக்கு கணனிப் பயிற்சி வழங்கி வருவதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது. மாற்று வலுவுள்ளோருக்கு ஒவ்வொரு மனிதனும் சந்தர்ப்பங்களை வழங்க வேண்டு மென்று எண்ணி இன்றிலிருந்து செயற்பட உறுதி மொழி எடுத்துக் கொள்வது எம் ஒவ் வொருவரின் மனிதாபிமான உணர்வுமிக்க கடமையாகும். ★

## நயினாதீவு மத்தி ப.நோ.கூ.ச.கிளையை மீண்டும் திறக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக.26

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நயினாதீவு மத் திக்கிளை நீண்ட நாள்களாக மூடப்பட் டுள்ளது.

இக்கிளையில் ஏற்பட்ட திருட்டு காரண மாக கிளை மூடப்பட்டதாகவும் தொடர்ந் தும் மூடப்பட்டுள்ளதால் மக்கள் பல் வேறு அசௌகரியங்களுக்குட்பட்டுள்ள னர் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது. எனவே மேற்படி கிளையை விரைவில் மீளத்திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (201-267)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

யாழ்.கொட்டடி இளங்கதிர் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி விரைவில் நடைபெறவுள்ளது.

6 பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்தச் சுற்றுப் போட்டி யாழ்.கொட்டடி, கற்குளம் ஸ்ரார் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகள் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் நடைபெறும் எனவும் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் யாழ்.மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள அபிராமி புடைவையகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

## எஸ்.எஸ்.ஸி.கிண்ணக் காலிறுதி ஆட்டத்தில் 117 ஓட்டங்களால் வென்றது யாழ்.சென்றல்

### துடுப்பாட்டத்திலும், பந்து வீச்சிலும் றஜீவ்குமார் கலக்கினார்



யாழ்ப்பாணம், ஓக.26

ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் நடத்தும் எஸ்.எஸ்.ஸி.வெற்றிக் கிண்ணத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட இருபது பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் நடை பெற்ற போது யங்ஸ்ரார் விளையாட்டு கழகத்தை யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 117 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 20 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 212 ஓட்டங்களை பெற்றது. வி.றஜீவ்குமார் 4 சிக்ஸர், 10 பவுண்டறிகள் உட்பட 72 ஓட்டங்களைப் பெற்றார். பி.வினோத்குமார் 28 ஓட்டங்களையும் எ.ஜெசிந்தன் 35 ஓட்டங்களையும் சுரேஸ்ராஜா 23 ஓட்டங்களையும் பெற்றனர். தஜீபன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

213 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 17 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 95 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. கிருஸ்ணச்சந்திரா 4 சிக்ஸர், 2 பவுண்டரி உட்பட 33 ஓட்டங்களைப் பெற்றார். வி.றஜீவ்குமார் 4 பந்துப் பரிமாற்றங்களில் 9 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். எஸ்.விமலகாந் 2 விக்கெட்டுக்களையும் யசிந்தன், சத்யன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம், ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியுடன் அரை இறுதிப் போட்டியில் மோதவுள்ளது. (50)

## 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கிரிக்கெட்; 2 விக்கெட்டுக்களால் வென்றது கொக்குவில் இந்து

வலி.வடக்கு, ஓக.26

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் கழகத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு அணிகளிடையே நடத்தப்பட்டு வரும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியின் ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி 02 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 45.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது.

ஜஸ்மினன் 40 ஓட்டங்களையும் சங்கீதன் 33 ஓட்டங்களையும் சுபகீதன் 19 ஓட்டங்களையும் தவகுகன் 17 ஓட்டங்களையும் சிவகஜன் 10 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 37 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த தனுஸ்டன் 08 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 12 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் தாருஜன் 7.3 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 12 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் பார்த்தீபன் 08 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 21 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் ஆதித்தன், சிலோஜன் முறையே 15, 28 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

168 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 48 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

ஆதித்தன் ஏழு நான்குகளுடன் 65 ஓட்டங்களையும் சிலோஜன் 20 ஓட்டங்களையும் தாருஜன் 19 ஓட்டங்களையும் கீர்த்திகன் 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 39 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மதுசன் 10 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 22 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் ருக்மன்ஸ், சங்கீத்தனன், சஜீவன் முறையே 15, 17, 21 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (50-86)

### குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## 'ருவென்ரி-20' ஆட்டமொன்றில் யூனியனை 15 ஓட்டங்களால் யாழ்.பல்கலைக் கழக அணி வெற்றி

வலி.வடக்கு, ஓக.26

அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் 'ருவென்ரி-20'கிரிக்கெட் போட்டியின் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி 15 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

அரியாலை கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியும், தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி 20 ஓவர்கள் நிறைவில் 07 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களை பெற்றது. திவாகரன் 40 ஓட்டங்களையும் லவகாந்தன் 30 ஓட்டங்களையும் சஞ்சீவன் ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

யூனியன் விளையாட்டுக் கழகம் சார்பில் பந்து வீசிய கபில்ராஜ் 04 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் தினேஸ் 04 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

156 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன் விளையாட்டுக் கழகம் 20 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. சுயந்தன் 52 ஓட்டங்களையும் டக்ஷயன் 25 ஓட்டங்களையும் டினேஸ்கரன் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த தவரூபன், லவகாந் முறையே 04 ஓவர்கள் பந்து வீசி 27, 21 ஓட்டங்களைக் கொடுத்து தலா 02 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள். (50-86)

## சுன்னாகம் ஸ்கந்தாவுடனான ஆட்டத்தில் இனிங்ஸ் வெற்றிபெற்றது யாழ்.இந்து

வலி.வடக்கு, ஓக.26

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணம் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் இனிங்ஸ் போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதல் இனிங்ஸ்சில் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 31.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது.

அஜந்தன் 09 ஓட்டங்களையும் ஐங்கரன் 07 ஓட்டங்களையும் பெற்றதுடன், உதிரிகளாக`19 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த வைகரன் 9.5 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 11 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் பார்த்தீபன் 06 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 08 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் பிரணவன் 09 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 06 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 39 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

பிரசாந் 23 ஓட்டங்களையும் கஜன் 22 ஓட்டங்களையும் பிரணவன் 14 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 41 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைச் சேர்ந்த கார்த்தியன் 15 ஓவர்கள் பந்து வீசி 06 ஓட்டமற்ற ஓவர்களுடன் 26 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களையும் சுவிதன் 09 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் சஜிந்தன், சாந்தன் முறையே 2,3 ஓவர்கள் பந்து வீசி 10 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 43.2 ஓவர்கள் நிறைவில் 07 விக்கெட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

பிரசாந் 20 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 37 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த வைகரன் 17 ஓட்டங்கள் பந்து வீசி 06 ஓட்டமற்ற ஓவர்களுடன் 27 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் பார்தீபன் 09 ஓவர்கள் பந்து வீசி 07 ஓட்டமற்ற ஓவர்களுடன் 03 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் குருவதனன் 05 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (50-86)

## தேசியப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள விளையாட்டு வீரர்களுக்கான பயிற்சி முகாம்

வலி.வடக்கு,ஓக.26

தேசிய மட்டத்தில் பாடசாலைகளுக்கு இடையே நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் வீர வீராங்கனைகளுக்கு இரண்டுநாள் பயிற்சி முகாமொன்று மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்றது.

வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் பா.விக்னேஸ்வரன், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசா மற்றும் உடற்கல்வி ஆசிரியர் ஆலோசகர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோரின் உதவியுடன் இப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

அடுத்த மாத முற்பகுதியில் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள் கொழும்பில் இடம்பெறவுள்ளன. முதல் கட்டமாக குழு நிலைப் போட்டிகளும் தொடர்ந்து தடகளப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. இதற்கு வீரர்களைத் தயார் செய்வதற்காகவே இப்பயிற்சி முகாம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நடைபெற்ற பயிற்சி முகாம் சம்பந்தமாகக் கருத்துக்கூறிய உடற்கல்வி ஆசிரியர் ஒருவர், இத்தகைய பயிற்சி முகாம் மூலம் வீரர்கள், வீராங்கனைகள், ஏனைய பாடசாலை ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோர் தமது திறமைகள், ஆற்றல்களை அனைவருடனும் பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்தது என்றார். (50-86)



தேசிய மட்டத்தில் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறவுள்ள பெருவிளையாட்டுப் போட்டிகள், தடகளப் போட்டிகள் ஆகியவற்றில் கலந்து கொள்ளவுள்ள வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த வீரர்கள், வீராங்கனைகளுக்கான பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது. இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொண்ட உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசா மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் வீரர்களுக்கு விளக்கமளிப்பதைப் படத்தில் காணலாம்.
(படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, சுவிஸ் அபிவிருத்தி அமைப்பின் உதவியுடன் சுமார் 47 மில்லியன் ரூபா செல வில் சகல வசதிகளுட னும் கூடிய கல்விக் கூடமாக நிர்மா ணிக் கப்பட்டுள்ளது. இப் பாடசாலையில் கட் டட வேலைகள் அனைத் தும் பூர்த்தி செய்யப்பட் டுள்ளன. இக்கட்டடத் திறப்புவிழா அடுத்த மாதம் நடைபெறவுள் ளது. புதிய கட்டடத்தின் தோற்றத்தின் ஒரு பகுதியைப் படத்தில் காணலாம்.

*(படங்கள்:அருணன்)*

# இக்கட்டான நிலையில் சீனா இலங்கைக்கு உதவி புரிந்தது

## பஸில் ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு,ஓக.26

விடுதலைப் புலிகளுடனான போரி னால் இலங்கை இக்கட்டான நிலையில் சிக்கித் தவித்தது. இதைப் புரிந்துகொண்ட சீனா இலங்கைக்கு நிதி உதவி உட்பட பல்வேறு உதவிகளைத் தானாகவே முன் வந்து செய்தது .- என்று ஜனாதிபதியின் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

வட மேல்மாகாணத்தில் உள்ள அனல் மின் நிலையத்தின் முதல் கட்டப் பணிகள் நிறைவடைந்ததை ஒட்டி அதன் பணிகளை ஆரம்பித்து வைக்கும் விழா வில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

இலங்கைக்கு உதவி செய்யக்கூடாது என்று சர்வதேச அளவில் கடும் நெருக் குதல் இருந்தாலும் அதையெல்லாம் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் இலங்கை யின் வளர்ச்சி மீது அக்கறை கொண்டு சீனா உதவி புரிந்தது.

அதற்கு எங்களது நன்றியை உரித்தாக் கிக் கொள்கிறோம். சீனாவின் நிதி உதவியுடன் கட்டிமுடிக்கப்பட்டுள்ள அனல் மின்நிலையம் 900 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. இந்த மின்நிலையத்தில் உற் பத்தியாகும் மின்சாரத்தின் மூலம் நாட்டின் 25 சதவீத மின்தேவையைப் பூர்த்தி செய்யலாம் - என்றார். (அ-சி)


## கூரியர் சேவை

அவசர தேவையின் நிமித்தம் பொதிகள் மற்றும் ஆவணங்களை 48 மணி நேரத்தில் அனுப்பும் வசதி

லண்டன், பிரான்ஸ், கனடா, சுவிஸ் நாடுகளுக்கான 1 Kg கட்டணம் 550/=

அவுஸ்திரேலியா, 1 Kg கட்டணம் 700/=

விசேட சேவை

லண்டன், சுவிஸ் நாடுகளிலிருந்து மிக விரைவாக இலத்திரனியல் பொருட்கள் பொதிகள் மற்றும் ஆவணங்களை மிக குறைந்த கட்டணத்தில் பெற்றுகொள்ளலாம்.

ARRUL GLOBAL EXPRESS

T:P : 021 222 6113

இல. 01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.


# மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி விழுந்ததில் காயம்

யாழ்ப்பாணம்,ஓக.26

மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் காயமடைந்தார். இச் சம்பவம் மட்டுவிலில் இடம்பெற்றது.

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்ததாகத் தெரிவிக் கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ்.சிவகு மார் (வயது 34) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(203-207)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.

PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:

ஸ்ரீ சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி பல்கலைக்கழக ஒழுங்கையில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 071 4468174 அல்லது 060 2219441

## மருத்துவ பட்டப்படிப்பினைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கு

ரஷ்ய நாட்டில் மருத்துவப்பட்டப் படிப்பினைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டல், ரஷ்யாவில் கல்வி பயில்கின்ற மருத்துவ பீட மாணவர்களினால் வழங்கப்படுகின்றன.

தொடர்பு : 077 1028756

E.mail :- Sentgolanka @ yahoo.com

K.Gobikirshnan (Medical Student in BSMU) (88109)

## விற்பனைக்கு

16'X10' கடைக்குரிய கலர் பிற்றிங் கண்ணாடி அலுமாரிகள், கவுண்டர் அலுமாரிகள், நல்ல நிலையில் உள் ளவை முழுவதுமாக உடன் விற்பனைக் குண்டு.

தொ.பே: 0774366704

## விற்பனைக்கு மோட்டார் சைக்கிள்

HONDA, C 90, 2001

LANZER, AIR COOLER

தொடர்பு: கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்

11, ஸ்ரான்லி றோட்,

யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 3857 (சி/560442)

## HOME VISITING MEDICAL SERVICE

Scan ,ECG, மருந்து வகைகள், இரத்த, சல பரி சோதனை வசதிகளுடன் வீடுகளிற்கு வந்து வைத்திய சேவை மேற்கொள்ளப்படும்.

[illegible] முதல் 8 மணி வரை.

[illegible]

காருண்யா வைத்திய நிலையம்

4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (87937)


# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 * 05 * 1939



உதிர்வு 18 * 09 * 2007

## அமரர் தர்மலிங்கம் கமலாம்பிகை

திதி: பூர்வபக்க ஷப்தமி (26.08.2009)

பாசமுடன் பரிவும் காட்டிய
பண்பின் சிகரமே!
நேசத்துடன் வாழ்ந்து மறைந்து விட்டீர்கள்
உங்கள் பிரிவைத் தாங்காமல் நாம்
துவண்டு கலங்கிப் போனோமே.

"அம்பிகை வாசா", சூராவத்தை, சுன்னாகம்.

என்றும் உங்கள் ஆன்ம சாந்திக்காகக் கடவுளைப் பிரார்த்திக்கும்:

குடும்பத்தினர். (88137)

# வடமராட்சி வலயப் பாடசாலைகளின் சமூக விஞ்ஞான பொருட்காட்சி முடிவுகள்

கரவெட்டி,ஓக.26

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற சமூக விஞ்ஞான பொருள்காட்சி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் விவரம் வரு மாறு:

**வணிகக் கல்வியும் கணக்கீடும்**

**தரம் 11**

*குழு 1:* யோ.காண்டீபன் , வி.பிரசாந், சி.கிருஸ்ணராஜா, வி.தமிழ்குமரன், ப.இந்திரஜித்- (தும்பளை சிவப்பிரகாச ம.வி) - பணப்பரி மாற்ற இயந்திரம்.

*குழு 2:* ப.ஜனனி, ம.கௌசிகா ,ச.சாருகா, சி.மிசியானா, சு.சுகன்யா, ஜெ.கீர்த்தனா- (வட.இந்து மகளிர் கல்லூரி) - கணனி மூலம் கற்பித்தல்.

*குழு 3:* ப.பானுகோபன், ச.சுலக்சன்,- (ஹாட் லிக் கல்லூரி) - காப்புறுதி.

*குழு 4:* ஆ.ஜிரோமி, ம.மிதுஷா, பி.கிருத்திகா, ப.மைதிலி, ச.கார்த்திகாயினி, பா.ஆரணி-(மெதடிஸ்த பெ.உ.பா) - வங்கிச் செயற்பாடு,அ.உதயராணி (வல்வை சிவகுரு வித்.) - தொழிற் பிரிப்பு,

**தரம் 10**

குழு- (தும்பளை சிவப்பிரகாச.ம.வி.)-கூட்டுறவு நகர், குழு- (வட.இந்து மகளிர் கல்லூரி) - துணைச்சேவைகள், குழு- (வட மத்திய மகளிர் கல்லூரி), வணிக வங்கியின் மாதிரி - அ.சுஜந்தன் (ஹாட்லிக் கல்லூரி) - பணம், க.ரஜீவன் (பொலி கண்டி இ.த. க.பா) - பணப்பரிமாற்றம் இயந்திரம்.

**மனைப்பொருளியல்**

ஜனார்த்தனி (பொலிகண்டி இ.த.க.பா.), குழு- (கட்டை வேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்), குழு- (மெதடிஸ்த பெ.உ.பா.), குழு- (கொற்றாவத்தை அ.மி.த.க.பா), சுதாஜினி சிவலிங்கம் (புற்றளை ம.வி.)

**தரம் 11**

குழு- (தொண்டைமானாறு வீ.ம.வி.), குழு- (கொற்றா வத்தை அ.மி.த.க.பா), குழு- (நெல்லியடி ம.ம.வி.), பொ.சுரேக்கா (கரணவாய் ம.வி.), குழு- (கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தி.).

**தரம் 12**

பொ.கயாந்தி (வட.இந்து மகளிர் கல்.), சி.ஜனனி (வட. இந்து மகளிர் கல்.), வி.சுஜித்தா (உடுப்பிட்டி மகளிர் கல்.).

**செயன்முறைத் தொழில் நுட்பம்**

**தரம் 06**

இ.ராகவன் (ஹாட்லிக் கல்லூரி), க.தயானி (விக்கினேஸ் வரக் கல்லூரி), ர.கரிசாயினி (இமையாணன் அ.த.க.பா.), பா.மலிஸ்ரா (உடுப்பிட்டி மகளில் கல்.), அ.தனுஷன் (உடுப் பிட்டி அ.மி.த.).

**தரம் 07**

சா.பிரதீபன் (புற்றளை ம.வி.), அ.பவித்தா (மெதடிஸ்த பெ.உ.பா.), ஆ.சங்கவி (கொற்றாவத்தை அ.மி.த.க.பா.), மே.அருள்ராஜ் (கலட்டி றோ.க.த.க.பா.), நி.இலக்கன் (புற்றளை ம.வி.).

*(தொடரும்)*

# மரண அறிவித்தல்

## திருமதி வேல்சந்திரன் கமலநாயகி



(ஏழாலை மேற்கு)

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேல்சந் திரன் கமலநாயகி (24.08.2009) திங்கட்கி ழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற வேல்சந்திரனின் (ஓய்வுபெற்ற மின்சாரசபை உத்தியோகத் தர்) அன்பு மனைவியும் சந்திரரூபன் (கொழும்பு), சந்திரகோபன் (இலங்கை மின்சாரசபை, யாழ்ப் பாணம்), சந்திரலதா(ஆசிரியை,யா/மல்லாகம் ம.வி.) ஆகி யோரின் அன்புத் தாயாரும் கனேந்திரன் (ஆசிரியர்), பன்னீர்ச் செல்வி(ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு மாமியும், திரன்மிகா வின் அன்புப் பேர்த்தியும், கந்தவனம் (கொழும்பு), தயாள நாயகி, சிவநாதன் (வட்டுக்கோட்டை) கருணகரநாதன் (ஜேர் மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது வீட்டில் இன்று (26.08.2009) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை, உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு

T.P 0777033385

0776630589

(88191)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

# திருமஞ்ச வெள்ளோட்ட விழா

## சிறப்புமலர் 26.08.2009



### தேவஸ்தான பிரதம குருவின் ஆசிச்செய்தி

அகில உலக நாயகியாக விளங்குகின்ற ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருளினால் அமையப் பெற்றதுதான் திருமஞ்சம் ஆகும்.

தேவஸ்தான தர்மகர்த்தா, நிர்வாக சபையினர், மதிப்புக்குரிய தேவஸ்தான தலைவர் ஆகியோரின் விடாமுயற்சியால் விஸ்வபிரம்மாவின் வழித்தோன்றலில் வந்த எமது சிற்பக்கலைஞர் செ.பாலச்சந்திரனால் உருவாக்கப்பட்ட திருமஞ்சம் இவ்வாண்டு மிகப் பொலிவோடு அம்பிகையின் மீள அடியவர்களின் பெரு விருப்பினால் வீதிவலம் வர இருக்கின்றது.

அம்பிகையின் இந்தப் பெரும் பணிக்கு உதவிய உபயகாரர்கள், அடியார்கள் அனைவருக்கும் ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருள் என்றும் கிடைக்கப் பிரார்த்தித்து நல்லாசிகள் வழங்கி வாழ்த்துவோமாக.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து

வா. அகிலேஸ்வரக் குருக்கள், பிரதம சிவாச்சாரியார்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், துர்க்காபுரம்.

### மஞ்ச ஊர்தி உற்சவம் நடைபெறுவது தவச் செயலே

நவரஸ சிருங்காரங்களில் மூலதனங்களையும் முறையாகவே கிரஹித்துக் கொண்ட 'ரிஷி' என்வர் பிரபஞ்ச ஹோமங்கட்காக அவை அவசியம் தேவைப்பட வேண்டும் என யசுர் வேத காலங்களில் இடம்பெற்ற மஹாயாகங்களின் போது வசிட்ட முனிவரது சிஷ்யனான ரிஷி வெளிப்படுத்தியதனால் வசிஷ்டர் ரிஷிக்கு ''ரிஷ்யசிருங்கர்'' என நாமகரணஞ் சூட்டி அவர் தம் வழியில் செயற்படுமாறும் அனுமதித்தார். இந்த ரிஷியசிருங்கர்தான் ரதங்களையும், மஞ்ச ஊர்திகளையும் துணிந்து உலகிற்குத் தந்த மகானாவார்.

வேதகாலங்களில் யாகசாலை மஹாயாகங்கள்தான் மிக மிக முக்கிய ஸ்தானமாக விளங்கியது. இக்காலங்களில் கூட உற்சவ காலங்களில் யாகசாலை, யாகங்கள் தான் மிக மிக முக்கிய ஸ்தானமாகும். சுற்றுப்பலியீறாகச் சகல நடவடிக்கைகளும் இத்தகைய உற்சவ யாகத்திற்கே சமர்ப்பிக்கப்படுகின்றது. ஆனால் பக்தர்கள் உற்சவகால யாகங்களைக் கவனிப்பது குறைவாகவே தெரிகின்றது.

படிப்படியாகப் பல்வேறு காலங்களில் தெய்வீக ஊர்திகள் வளம் பெற்று இப்போது ஆலய உற்சவச் செயற்பாட்டில் இணைந்து நிற்கின்றன. இப்போது காலத்திற்குக் காலம் மஞ்ச ஊர்தியின் கட்டுமானம் விரிவடைந்தும், புதுப்புது மெருகுடன் வளர்ச்சி பெறினும், அதன் ஆத்மார்த்த தனித்துவம் மறையாது பேணப்படுகின்றதை அவதானிக்கலாம். அளவும் பிரமாணங்களும் அவ்வாறே கணிக்கப்படுகின்றன. பொதுவாக ''விஜயரத'' சாயலிற்தான் மஞ்ச ஊர்திகள் இன்று காணப்படுகின்றன.

மஞ்சவூர் திருவிழாவில் இணைந்து இறைவனை அஷ்ட திக்குகளில் நின்று வழிபடுவோர்.

''தருமாத்தீ லபதே தர்மாநர்த்ர்த்தி சார்த்தமாப்நுயாத்
காமார்த்தீ லபதே காமாந் மோக்ஷாத்தீ மோக்ஷமாநுயார்த்''

என்றவாறு அறத்தை விரும்புவோர் நல்லறங்களையும், பொருளை விரும்புவோர் பொருள் சேரும் பேற்றையும், இன்பங்களை விரும்புவோர் அவை தானாகவே வந்தடையும் இயல்புகளையும் இலைமறைமுகமாகவே இறைவன் தந்துதவுவார் என ரிஷிகளின் பிரசித்தம், ஈற்றில் வீடு பேற்றை விரும்புவோருக்கு மோக்ஷமும் இலகுவாகக் கிடைக்குமென அறியப்படுகின்றது. மஞ்ச பவனியின் போது அஷ்டதிக்பாலகர்களது பார்வையும் மக்கள் மேல் இணையும். இணைந்து அவரவர்கள் விரும்பும் இஷ்டகாம்ய சித்திகளும் கிடைக்கும். எனவே மஞ்ச ஊர்தி திருவீதி வலம்வரும் போது அந்தந்த மூர்த்திகளிற்கான கீதங்கள், இராகங்கள் வாத்தியங்கள், பஜனைகள், பிரதக்ஷணங்கள் என்றெல்லாம் இருக்கும் தர்மசாதன சமர்ப்பணங்கள்தான் மாபெரும் பலன்களை ஞாலத்திற்கு தந்துநிற்குமென யசுர்வேதகால ரிஷிகள் அறியத் தந்துள்ளனர்.

ஆலயங்கள் மூலம் தான் அருமையான நற்தொண்டுகளாற்றும் திறனும், நல்லெண்ணங்களை ஊற்றெடுக்க வேண்டி சக்திகளையும் மனிதன் இதயத்தில் இணைக்க முடியும். அதனால் ஜீவ காருண்யம் வளர்ச்சி பெறும் இத்தகைய திருச்செல்வங்களையும் பெற தெல்லிப்பழை துர்க்காம்பிகா ஆலயம் பெரிதும் பாடுபடுகிறது. இவை படிப்படியாக வளர்ச்சியும் பெறுகிறதை அவதானிக்கலாம். இப்போது திருமஞ்ச ஊர்தி விழாவும் இணைந்து விட்டது. தக்கதோர் தருணத்தில், தகுந்த வேளையில் தகுதி பெற்ற சிற்பக் கலைஞர்களது ஆக்கத்தில் திருமஞ்சம் அம்பாளின் கருணையோடு தோற்றங் கொண்டுவிட்டது. மஞ்ச ஊர்தி உற்சவம் இடம்பெறுவதும் ஒரு தவச் செயலே. பக்தர்கள் பவனியின் போது பாமாலைகளாலும், வழிபாடுகளாலும் திருநெறித் தொண்டுகளாலும் சூழலைத் தெய்வீகமாக்கித் திருவருள் நிறைந்து அவை எங்கும் பரவி நிற்க உதவுவதே மாபெரும் தொண்டாகும். ஆலய நிர்வாக சபையினர் திருமஞ்ச ஊர்தி விழாவை நடத்தத் துர்க்கை அம்பாளின் ஊக்க சக்தியும் திருவருளுமே துணையானது.

மஞ்சவூர்திப் பவனி விழா நிறைவாகவும் அதிசக்தி வாய்ந்ததாகவும் தெய்வீக வல்லமைகளை மக்களுக்குத் தந்து ஞாலத்தை இரட்சித்தருளுமாறு யானும் சர்வசக்தி ரூபியான துர்க்காம்பிகையின் பாதங்களில் மனதால் அர்ச்சித்து சகலரையும் ஆசீர்வதிக்கின்றேன்.

மகாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள்,
பிரதமகுரு, மாவிட்டபுரம் கந்தசாமி கோயில்.

### பெருந்திருவிழாவாக அமைய ஆதீனம் ஆசி

ஈழமணித்திருநாட்டின் பெருமைக்குரிய திவ்விய திருத்தலங்களுள் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம் சிறப்புக்குரியது. சமூகத் தேவைகளைத் தேவியின் பெயரால் நிறைவு செய்கின்ற பெருமைக்குரிய ஆலயமாக இவ் ஆலயம் விளங்குகின்றது. இத் திருத்தலத்தில் காலம் தோறும் திருப்பணிகள் நடைபெற்றுச் சகல சிறப்புடனும் இவ் ஆலயம் விளங்குவதை யாவரும் அறிவர். இவ் ஆலய மகிமையை ஊர், உலகம் அறியவைத்த பெருமை சிவத் தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கமா அப்பாக்குட்டி அம்மையாரைச் சாரும். அவரது ஒப்பற்ற பணியைப் பேணிக்காக்கும் வகையில் ஆலயப் பணிகள் தொடர்ந்தும் சிறப்பாக நடைபெறுவது பாராட்டுக்குரிய விடயமாகும். குறிப்பாக அம்பாளுக்குப் புதிய திருமஞ்சம் உருவாக்கப்பட்டு, வெள்ளோட்ட விழா நடைபெறுவது மகிழ்ச்சி தரும் விடயமாகும். இளைய தலைமுறையின் உன்னதக் கலைஞனாக விளங்கும். திரு.செல்லையா பாலச்சந்திரன் அவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்படும் திருமஞ்சம் நிறைவானதாக அமையும் என்பது எமது நம்பிக்கை. இக் கலைஞனால் உருவாக்கப்பட்ட பல தேர், திருமஞ்ச வெள்ளோட்ட விழாவுக்குச் செல்லும் வாய்ப்பு அடியேனுக்குக் கிடைத்தது. பணிவும் பக்குவமும் நிறைந்த இக் கலைஞன் அம்பாளின் அருட்கடாட்சத்தால் மேலும் சிறப்படைய நல்லாசி கூறி அம்பாளின் திருமஞ்சத் திருப்பணிக்காக அயராது உழைத்த அன்பர்கள் அனைவருக்கும் நல்லாசியும், வாழ்த்தையும் கூறித் திருமஞ்ச வெள்ளோட்டவிழா பெருந்திருவிழாவாக அமையத் திருவருளை வேண்டி அமைகிறேன். **'என்றும் வேண்டும் இன்ப அன்பு'**

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.
இரண்டாவது குரு மகா சந்நிதானம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

### சிற்பக் கலைஞரின் செய்தி



தெல்லிமா நகரில் வீற்றிருந்து அருட்காட்சி புரியும் உலகமாதாவாகிய கொற்றவைக்கு கோடி நமஸ்காரம். அம்பாளின் பெருங்கருணையோடு சிற்பத் திருமஞ்சம் அமைத்து வெள்ளோட்டம் விடுகின்ற திருநாளிலே சிவத்தமிழ்ச்செல்வி அம்மா, எமது குரு ஸ்தபதி கலைஞானி சிற்பச் சக்ராபதி செ.கந்தசாமி மாதா பிதா பாதம் பணிகின்றேன்.

தேவஸ்தான சிற்பாச்சாரியாகப் பல திருப்பணிகளை நிறைவேற்றியதாய் எல்லாவற்றுக்கும் சிகரமாக அம்பாளுக்குச் சிற்ப திருமஞ்சம் அமைந்துள்ளது. அதன் வெள்ளோட்டமும் அம்பாளின் திருமஞ்சக் காட்சியும் சிறப்பாக அமையவும் சிற்பக் கலைஞர்கள், நிர்வாகத்தினர், உபயகாரர் அன்று தொடக்கம் எமக்கு ஒத்துழைப்புத் தந்து பல சேவை செய்யும் இந்து இளைஞர் பணி சிறக்கவும் உணவு, தேநீர் தந்து உபசரித்த இல்லத்து சகோதரர்கள் [illegible] மக்களின் இன்னல் போக்கவும் அம்பாளை வணங்கி நிற்கின்றேன்.

ஸ்தபதி செ.பாலச்சந்திரன், ஸ்ரீகாளிகா சிற்பாலயம், புத்தூர்.

### அடியவர்களின் பங்களிப்பில் நிறைவேறிய பணி

திருவருட் சிறப்புமிக்க தெல்லிநகர் துர்க்கை அம்பாளுக்கு அழகிய திருமஞ்சம் உருவாக்கி வெள்ளோட்ட விழா நடைபெறுவது அம்பாள் அடியார்களுக்குப் பேருவகைதரும் செய்தி என்பது ஐயமில்லை.

அம்பாளின் திருவருளும் எம்மை ஆற்றுப்படுத்திய சிவத்தமிழ்ச் செல்வி அன்னையின் வழிகாட்டலும் இப் புனித திருத்தொண்டில் யாம் ஈடுபட வழி கிடைத்தது.

சென்ற ஆண்டு ஆவணிச் சதுர்த்தி நன்நாளில் அம்பாளின் திருமஞ்சத்துக்கான அச்சு வைக்கப்பட்டது. அடுத்த ஆண்டு அம்பாளின் திருவீதியில் திருமஞ்சம் ஓட அடியார்களே உதவுங்கள் என்று அன்பு வேண்டுதல் விடுத்தோம்.

துர்க்கை அம்மனின் அடியவர்கள் பேருதவி புரிந்தார்கள். எங்கள் தேவஸ்தானத்தோடு நீண்ட காலத் தொடர்புடைய சிற்பக் கலைஞர் புத்தூர் செல்லையா பாலச்சந்திரன் அவர்கள் இப் பணியைப் பொறுப்பேற்று மிகச் சிறப்பாக நிறைவேற்றி உள்ளார்கள். திருமஞ்சம் தொடர்பான ஆசியையும், ஆலோசனையும் மூத்த சிவாச்சாரிய பெருந்தகைகளான மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ து.ஷண்முகநாதக் குருக்களிடமும், கீரிமலை நகுலேஸ்வரர் ஆதீன கர்த்தா ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்களிடமும் பல தடவை தொடர்பு கொண்டு இப்பணியை எமது தேவஸ்தானம் நிறைவேற்றியுள்ளது. இங்கிலாந்தில் இருந்து வர்ணப் பூச்சு வகையினை அன்பர் ஒருவர் அனுப்பி வைத்தார். அம்பாளின் திருமஞ்சம் புதுமையாகவும் தனித்துவமாகவும் காட்சி அளிக்கின்றது. இரவு பகலாக நெற்றி வியர்வை சிந்திச் சிற்பக் கலைஞர்கள் தம் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளனர்.

அற்புதக் கலைஞர்களைப் போற்றுதல் சொல்ல வேண்டியது எம் கடன். கலாகேசரி அமரர் ஆ.தம்பித்துரை, கலைஞான வித்தகர் திருநெல்வேலி கந்தசாமி போன்ற பெருங்கலைஞர்களிடம் சிற்ப நுணுக்கங்களைக் கற்ற சிற்பக் கலைஞர் செ.பாலச்சந்திரனின் கைவண்ணத்துக்கு இலக்கணமாகத் துர்க்கை அம்பாளின் திருமஞ்சம் அமைந்துள்ளது என்றால் மிகையாகாது. அம்பாளின் திருமஞ்சப் பவனியோடு எம் மக்கள் நிம்மதியும் ஆறுதலும் அடையவேண்டிஅமைகிறேன்.

இன்றைய வெள்ளோட்ட விழாவுக்கு அன்பர்கள் அனைவரும் வருகை தந்து சிற்பக் கலைஞர்களை வாழ்த்தி வடம் பிடித்து திருமஞ்சம் வீதி வர உதவுங்கள்.

''நல்லதோர் சிற்பனுக்கு நற்பொடு இடங்கோலுங்கால்
சொல்லு பூந்துகிலும் பொன்னும் சுமங்கலல் பொருளு மீந்து
வல்லவை வரைந்து கேட்டு வளம் பெற முடிவும் கொண்டால்
செல்லமாம் மாயன் சொன்ன சிற்ப நூல் பலிக்கும் தானே''
(காக்கையர் சிற்பம்) ''யாவருக்குமாம் இன்னுரை தானே''

ஆறு.திருமுருகன், தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

### பேரானந்தம் தரும் கைங்கரியம்

சீரும் திருவும் நிறைந்த எம் திருநாட்டில் உள்ள சக்தி தலங்களில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் முதன்மையானது. திருவருள் நிறைந்த தெய்வீகத் தலம். வேத, ஆகம நெறிக்கும் திருமுறைக்கும் பெருமதிப்புக் கொடுக்கின்ற க்ஷேத்திரம். இத்தலத்தில் அம்பாள் வீதியுலா வருவதற்காகப் புதிய திருமஞ்சம் உருவாக்கப்பட்டுள்ளமை பேரானந்தத்தைத் தருகின்றது. சிறந்த சிற்பக் கலைஞர் செல்லையா பாலச்சந்திரன் அவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்படும் திருமஞ்சம் சிறப்புப் பெறும் என்பதில் ஐயமில்லை. அம்பாளின் திருமஞ்ச உருவாக்கலில் அக்கறை கொண்ட ஆலய நிர்வாக சபையினருக்கும் விழா உபயகாரருக்கும் அடியார்களுக்கும் எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள், ஸ்ரீ நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வர
பிரதம குரு, சுவாமி கோயில் ஆதீன கர்த்தா.


Jana
Civil
Engineering
Construction
K.K.S.Road, Tellippalai.

ஜெய
கிருஸ்ணா
காட்வெயர்
கட்டடப் பொருள்கள்
ஏக விநியோகஸ்தர்
இல.20 கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

ஜனா பாம்
இல.7 மத்திய
சந்தை மல்லாகம்.
பால், பால் உற்பத்திப் பொருள்கள், பசு நெய், கேக் வகைகள் ஓடருக்கு குறித்த காலத்தில் தரப்படும். லான்ட் லேக் நிறுவனத்தின் அனுசரணையுடன் கொதிக்க வைத்த பால் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

ஈஸ்வரி
மர அரிவு ஆலை
கே.கே.எஸ். வீதி,
மல்லாகம்.

சிறீ
இரும்பு தொழிலகம்
சகல விதமான கேற், யன்னல் உட்பட குறித்த நேரகாலத்தில் செய்து தரப்படும்.
பிரதான வீதி, மல்லாகம்.

ஜெயா கிறேசர்
கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பளை.

ஆனந்த குமார்
தச்சுத் தொழிலகம்
Carpenter's work shop
சகல மர அரிவு குறித்த அளவுகளிலும் வீட்டுத் தளபாடங்கள் யாவும் செய்து கொடுக்கப்படும்.
முடமாவடி,
சுன்னாகம்.

அபிஷேக்
மல்ரி ஸ்பொட்
போட்டோக்கொப்பி, லெமினேற்றிங் உள்ளூர் வெளியூர் அழைப்புக்கள், கணனியில் வடிவமைப்பு மற்றும் அச்சுவேலைகள் அனைத்தையும் பெற்றிட அபிஷேக் மல்ரி ஸ்பொட்
இராமநாதன் கல்லூரி முன்பாக, மருதனார்மடம்
தொபே: தொ.பே. 021 7200882
T.P: 0217200882
M.Reload: 0718872333
D.Reload: 0772230535

ரேடர்ஸ்
பொருள் விற்பனையாளர்
130, 132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பாக்கியரத்தினம் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
கட்டடப்பொருள்கள் மின்சார இணைப்புப் பொருள்கள் ஏக விநியோகஸ்தர்
பிரதான வீதி, சங்கானை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வடமராட்சி, சக்கோட்டையில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 75 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவண பவ ஆகியோர் வீடுகளை நாடாவெட்டித் திறந்து வைக்கின்றனர்.

கரித்தாஸ்-கியூடெக் நிறுவன இயக்குநர் அருட் திரு. சி.ஜி.ஜெயக்குமார் அடிகளார் தலைமையுரையாற்றுகின்றார். யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் ஆகியோர் பயனாளிகளிடம் வீட்டுத் திறப்புகளைக் கையளிக்கின்றனர். நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்தில் காணலாம். *(படங்கள்: சுந்தா)*


## அராலி கரைப்பிட்டி கணபதீஸ்வரன் திருக்கோயில்
## மணவாளக்கோல விழா



நாளை (27.08.2009)
வியாழக்கிழமை காலை 8 மணி
முதல் 1008 சங்காபிஷேகம்.
மாலை 5 மணி முதல்
தண்டிகை உற்சவம்.
நாதாஞ்சலி:
நாதகலாமணி R.சிவகுமார்
குழுவினர்

தேவஸ்தானம்.

விளம்பர அனுசரணை: **பாலன் மில்ஸ்**
மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை. (88197)

## தவறிவிட்டது

687/6, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த சிவகுமார் சுஜிதா என்பவரது தேசிய அ.அட்டை (808585090V) விசேட அ.அட்டை அடங்கிய பேர்ஸ் நல்லூர் கந்தசாமி கோவில் தேர்த் திருவிழா அன்று (19.08.2009) கோவில் சுற்றாடலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்ப பெற்றோர், அரச ஆசிரியை வயது 28, உயரம் 5'3" திருவோண நட்சத்திரம், மொத்த பாவம் 34 உள்ள (செவ்வாய் தோசம் இல்லை) தமது மகளுக்கு பொருத்தமான மணமகனை எதிர்பார்க்கின்றார்கள். சாதகங்கள் மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :-விளம்பர இல: 3930
C/o உதயன் பணிமனை,யாழ்ப்பாணம்
(C/580480)

## அம்புலன்ஸ் சாரதிதேவை

சென்ஜோன் அம்புலன்ஸின் அம்புலன்ஸ் வாகனத்திற்குச் சாரதிதேவை. விண்ணப்பதாரி "A" தர சாரதி அனுமதிப்பத்திரமும் 5 வருட தொழில் அனுபவமும் உடையவராக இருத்தல் வேண்டும். தகுதியுடையோர் சகல ஆவணங்களுடனும் 30.08.2009 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள சென்ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்திற்கு நேரில் சமுகம் தரவும். மேலதிக விவரங்களுக்கு 021 222 3166 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்க.

**சென்ஜோன் அம்புலன்ஸ்**
யாழ்.போதனா வைத்தியசாலை.
அவசர அம்புலன்ஸ் சேவை இல. 060 221 4444
(882001)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

61,Kachcheri - Nallur Road, Jaffna
Phone: 021 2228093

Learn French the French Way
French Classes

இலங்கையிலுள்ள French Embassy மூலமும், France இல் உள்ள Alliance Francaise de Paris இன் ஊடாகவும் சர்வதேச மொழியான பிரெஞ்சு மொழி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

மாணவர்கள், உயர்கல்வி கற்போர், அலுவலர்கள், ஆசிரியர்கள், மொழி பயில ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.

புதிய பிரிவுகள்: சனி, ஞாயிறுகளில்

பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.

கட்டண, மேலதிக விவரங்கள்: நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம். (88201)

## உடன் தேவை

இல.300, யாழ். பிரதான வீதியில் இயங்கிவரும் JS Graphies நிலையத்திற்கு (கணனி வடிவமைப்பு, காகிதாதிகள் விற்பனை நிலையம்) பெண் பணியாளர் ஒருவர் தேவை.

* 30.08.2009 மு.ப 9.00- பி.ப 6.00 மணிக்குள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்
* Computer Typing (Tamil/ English) தெரிந்திருத்தல் வேண்டும்.

தொடர்பு:- 0777446973 (88205)

## தவறிவிட்டது

K.K.S வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் என்னும் முகவரியுடைய ஜெகதீஸ்வரன் சசிக்குமார் என்பவரது தே.அ.அட்டை (800921848V) கடந்த 20.08.2009 அன்று கோண்டாவிலுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 356A, கஸ்தூரியார் வீதி என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## தேவை

புடைவைக் கடையில் வேலை செய்யக் கூடிய ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள் , பழக விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்

**த.சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்**
21, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/580461)


## மரண அறிவித்தல்

### புஸ்பவதி செந்தில்நாதன்

தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், ஜெயந்தி மாவத்தை, அநுராதபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட புஸ்பவதி செந்தில்நாதன் 24.08.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தபிள்ளை- இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செந்தில்நாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாலசண்முகநாதன், சிவராஜசிங்கம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகன் கோயிலடி,
தும்பளை, பருத்தித்துறை. (சி/560459)

தகவல்:
**பா.கமலாம்பிகை**
(மைத்துனி).

## மரண அறிவித்தல்



### திருமதி தங்கரத்தினம் இராசசூரியர்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் இராசசூரியர் செவ்வாய்க்கிழமை 25.08.2009 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் வில்லியம் பாலசிங்கம் இராசசூரியரின் அன்பு மனைவியும் காலம்சென்ற பொன்னம்பலம் - முத்தம்மா தம்பதியரின் மகளும் காலம் சென்ற அருட் சகோதரி செல்வரட்ணம் (இலங்கை பெந்தே, கோஸ்தே சபை), இளைப்பாறிய ஆசிரியை திருமதி அழகரட்ணம் செல்லத்துரை (புனிதம்), திருமதி சுகிர்த மலர் செல்ல ப்பு, இளைப்பாறிய ஆசிரியர் திருமதி தங்கமலர் - கிருபைராஜா, இளைப்பாறிய ஆசிரியர் திருமதி அரியம லர் இராஜரட்ணம், பொன்னம்பலம் நவரத்தினம் (இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்) ஆகியோரின் சகோதரியும், கிறேஸ் சமாதானம்(பபா), சுசி, சாளற் ரஞ்சிதம், ஏ ஸ்ட், நீல் (முன்னாள் ஊழியர், மக்கள் வங்கி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சுமோன் பெரே ரா, காலஞ்சென்ற தர்மானந்தன், ரதி, யசோதா ஆகியோரின் அன்பு மாமியாரும். மாக்கஸ் (PC GLOBE SYSTEM PVT (LTD), கிறிஸ்டி, அஞ்சலோ, ஜோய், டானியல், ரேச்சல், எட்வின், எ ஸ்தர் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் CANADA VANCOUVER இல் 29.08.2009 சனிக்கிழமை அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், ந ண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**சாளற் (மகள்)**
**மாக்கஸ் (பேர ன்).**

தொலைபேசி: 2638601

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தம்பு சுவாமிநாதன் (T.S)**

திதி: பூர்வபக்க ஸப்தமி

மலர்வு
16★01★1924

உதிர்வு
19★08★2007

**அன்பின் உறைவிடமே அணையாத ஒளிவிளக்கே**
**ஆறாத் துயரமதில் தவிக்கிறது எம்முள்ளம்**
**இன்றைய நாள்களிலும் எம் கண்கள் நனைகிறது**
**எம்முடன் நீயிருந்த காலங்களை எண்ணி**
**ஈராண்டு ஆனதுவோ உனைப் பிரிந்து**
**நூறாண்டு கடந்தாலும் மறவோம் நாம் உன்னை.**

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தவம் ஸ்ரோர்ஸ்,
அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம். (88198)

## அலங்காரத் திருவிழா

கெருடாவில்,
ஓக.26

உடுப்பிட்டி வடக்கு கம்பர் மலை அருள்மிகு பெரியதம்பிரான் விநாயகர் ஆலய அலங்காரத் திருவிழா இன்று புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி பஞ்சமுக அர்ச்சனையும் மறுநாள் தீர்த்

(253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸி.-இலங்கை அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

இலங்கை-நியூஸிலாந்து அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகிறது.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள நியூஸிலாந்து அணி, இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இன்று ஆரம்பமாகும் இப்போட்டியானது கொழும்பு எஸ்.எஸ்.சி.மைதானத்தில் காலை 10 மணியளவில் ஆரம்பமாகிறது.

இரண்டு போட்டிகளைக் கொண்ட இப்போட்டித் தொடரில் ஏற்கனவே ஒரு போட்டி முடிவடைந்துவிட்டது. அதில் இலங்கை அணி சிறப்பான வெற்றியும் பெற்றுவிட்டது. அந்த வெற்றிமூலம் இலங்கை அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையும் வகிக்கிறது.

எனவே, இன்று ஆரம்பமாகவிருக்கும் இரண்டாவது டெஸ்ட் போட்டியானது ஒரு முக்கிய கட்டமாகவே இரு அணிகளுக்கும் அமையும்.

அதாவது, இந்த டெஸ்டில் வென்றால் அல்லது சமப்படுத்தினால் இலங்கை அணி கிண்ணத்தை வெல்லலாம். அதே வேளை மாறாக நியூஸிலாந்து அணி கிண்ணத்தை இழந்துவிடும்.

எனினும், இந்தப் போட்டியில் வென்றாலும் கிண்ணத்தைக் கைப்பற்றும் சந்தர்ப்பம் நியூஸிலாந்துக்குக் கிடைக்கப் போவதில்லை.

இந்த டெஸ்ட்டில் வென்றே ஆகவேண்டும் என்ற நிலையும் நியூஸிலாந்துக்கு உள்ளது. வென்றால்தான் இலங்கை அணி கிண்ணத்தைக் கைப்பற்றுவதைத் தடுக்கமுடியும். அதேநேரம் போட்டித் தொடரைச் சமனிலைப்படுத்தி வெற்றி தோல்வியின்றி முடிக்கவும் முடியும். அந்த வகையில், இக்கட்டான கட்டத்தில் இன்று நியூஸிலாந்து களமிறங்குகிறது.

எனவே, கிண்ணத்தை இலங்கை வெல்லுமா அல்லது இரு அணிகளும் பகிர்ந்து கொள்ளுமா என்ற இரண்டு கேள்விகளுக்குமான போட்டியாகவே இது அமையப் போகின்றது.

# பிளின்ரொப்புக்கு அறுவைச்சிகிச்சை



லண்டன், ஓக.26

டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்ற இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரரான பிளின்ரொப்புக்கு நேற்றுமுன்தினம் அறுவை சிகிச்சை நடந்தது.

நடந்து முடிந்த ஆஷஸ் போட்டியுடன் பிளின்ரொப் டெஸ்டில் இருந்து ஓய்வுபெற்றார். மொத்தம் 79 டெஸ்ட் போட்டி களில் விளையாடியுள்ள அவர் 3,845 ஓட்டங்கள் (அதிகம் 167, சராசரி 31.77, சதங்கள் 5, அரைச்சதங்கள் 26) மற்றும் 226 விக்கெட்டுகள் (சிறப்பு 5/58) எடுத்துள்ளார்.

வலது முழங்கால் மூட்டில் காயம் அடைந்துள்ள அவருக்கு, லண்டனில் நேற்றுமுன்தினம் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. இதனால், ஆஸி. ஒரு நாள் தொடர் (7 போட்டிகள்) மற்றும் 'சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்தும் பிளின்ரொப் விலகியுள்ளார்.

# நியூஸிலாந்து அணியின் தெரிவுக் குழுவில் அணித்தலைவர்-பயிற்றுவிப்பாளர் சேர்ப்பு

வெலிங்டன், ஓக. 26

நியூஸிலாந்து கிரிக்கெட் அணி தெரிவுக் குழுவில் அணித்தலைவர் விக்ரோரி மற்றும் பயிற்சியாளர் அன்டி மோல்ஸ் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கிரிக்கெட் அணி வீரர்களைத் தெரிவுக் குழுவினர் தெரிவு செய்வது வழக்கமாகும். தெரிவின்போது அணித்தலைவர் மற்றும் பயிற்சியாளரின் பரிந்துரைகள் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

ஆனால், முதல் முறையாக கிரிக்கெட் அணித் தெரிவுக் குழுவில் அணித்தலைவர் மற்றும் பயிற்சியாளர் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தப் புதிய முயற்சியை நியூஸிலாந்து கிரிக்கெட் சபை மேற்கொண்டுள்ளது.

நியூஸிலாந்து அணியின் தெரிவுக் குழு உறுப்பினர்களாக உள்ள கிளென் டர்னெர், கிரேட் பாட்ச் ஆகியோருடன் இணைந்து அணித்தலைவர் விக்ரோரி, பயிற்சியாளர் அன்டி மோல்ஸ் ஆகியோர் சம அதிகாரத்துடன் செயற்படுவார்கள் என்று நியூஸிலாந்து கிரிக்கெட் சபைத் தலைமை நிர்வாகி ஜஸ்டின் வோகன் அறிவித்துள்ளார்.

இந்தப் புதிய முறையால் அணித் தலைவர் மற்றும் பயிற்சியாளருக்கு அதிக பொறுப்பு வரும். அதே வேளையில் அவர்களுக்குச் சிறப்பாகச் செயற்பட வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுள்ளது.

# சின்சினாட்டி கிண்ண டென்னிஸ்: சம்பியனானார் ரோஜர் பெடரர்!

அமெரிக்காவில் உள்ள சின்சினாட்டியில் நடந்த டென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான ரோஜர் பெடரர் (சுவிட்ஸர்லாந்து) 6-1, 7-5 என்ற நேர் செற் கணக்கில் 4ஆம் நிலை வீரரான நோவாக் டோகோவிச்சை (செர்பியா) தோற்கடித்து சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். இந்த ஆட்டம் 91 நிமிடங்கள் வரை நடந்தது.

இந்த வெற்றியின் மூலம் 28 வயதான ரோஜர் பெடரர் (16 ஏ.டி.பி.மாஸ்டர்ஸ் பட்டம்), அகாஸிக்கு (17 ஏ.டி.பி.மாஸ்டர்ஸ் பட்டம்) அடுத்த படியாக அதிக ஏ.டி.பி. மாஸ்டர்ஸ் பட்டம் வென்ற வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

இதன் இரட்டையர் பிரிவில் அரையிறுதியில் மகேஷ் பூபதி-மார்க் நோலஸ் ஜோடியை வீழ்த்திய டேனியல் நெஸ்டர் (கனடா)-நெனட் ஜிமோன்ஜிச் (செர்பியா) ஜோடி இறுதிப் போட்டியில் பாப் சகோதரர்களை தோற்கடித்து சம்பியன் பட்டம் வென்றது.

# டெஸ்ட் தரவரிசையில் கம்பீர் மீண்டும் முதலிடம்

## சங்கக்காரா 2ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார்

துபாய், ஓக.25

டெஸ்ட் போட்டியின் துடுப்பாட்டத் தரவரிசையில் இந்திய வீரர் கௌதம் கம்பீர் மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார். அதே வேளை, முதலிடத்தில் இருந்த இலங்கை அணியின் தலைவர் சங்கக்காரா இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்

டெஸ்ட் போட்டிகளின் அடிப்படையில் அணிகள் மற்றும் வீரர்களின் தரவரிசைப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது.

இதன்படி இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கௌதம் கம்பீர் (847 புள்ளிகள்) மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார். கடந்த ஜூலை மாதத்தில் முதலிடம் பிடித்திருந்த கம்பீர் பின்னர் 3ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டு இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முதலிடத்தில் இருந்த இலங்கை வீரர் சங்கக்கரா(838 புள்ளிகள்) நியூஸிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் சோபிக்காததால் ஓர் இடம் பின்தங்கி 2ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

2ஆவது இடத்தில் இருந்த ஆஸ்திரேலிய வீரர் மைக்கல் கிளார்க் ஆஷஸ் போட்டித் தொடரின் கடைசி டெஸ்ட் போட்டியில் மோசமாக ஆடியதால் 2 இடங்கள் பின்தங்கி 5ஆவது இடம்பிடித்துள்ளார். இருவரும் பின்தங்கியதால் கௌதம் கம்பீர் முதலிடத்திற்கு முன்னேறி உள்ளார். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர் சந்தர்போல் 3ஆவது இடமும், பாகிஸ்தான் வீரர் முகமது யூசுப் 4ஆவது இடமும் வகிக்கின்றனர்.

பந்துவீச்சுத் தர வரிசையில் தென்னாபிரிக்க வீரரான டாலே ஸ்ரெயின் (844 புள்ளிகள்) முதலிடம் வகிக்கிறார். இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் (828 புள்ளிகள்) 2ஆவது இடமும், ஆஸ்திரேலிய வீரர் ஜோன்சன் (786 புள்ளிகள்) 3ஆவது இடமும் வகிக்கின்றனர்.

இந்திய வீரர்களான ஹர்பஜன்சிங் 5ஆவது இடமும், சஹீர்கான் 8ஆவது இடமும் பிடித்துள்ளனர்.

ஆஷஸ் தொடரில் அசத்திய இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான் 17 இடங்கள் முன்னேறி முதல் முறையாக 10ஆவது இடம் பிடித்துள்ளார்.

## ரோஜர் கிண்ண டென்னிஸ்

# மரியா ஷரபோவாவை வீழ்த்தி பட்டம் வென்றார் டெமன்டிவா

டொரன்ரோ, ஓக. 26

ரோஜர் கிண்ண டென்னிஸ் போட்டியில் ரஷ்ய வீராங்கனையான எலீனா டெமன்டிவா, சக நாட்டு வீராங்கனை மரியா ஷரபோவாவை வீழ்த்தி 'சம்பியன்' பட்டம் வென்றார்.

ரோஜர்ஸ் கிண்ணப் பெண்கள் டென்னிஸ் போட்டி கனடாவில் நடந்தது. இதன் ஒற்றையர் பிரிவில் இறுதிப் போட்டியில் உலகின் 4ஆம் நிலை வீராங்கனையான எலீனா டெமன்டிவா (ரஷ்யா), 3 முறை கிராண்ட்ஸ்லாம் சம்பியன் வென்றவரும், சக நாட்டவருமான மரியா ஷரபோவாவைச் சந்தித்தார்.

தோள்பட்டைக் காயத்திலிருந்து திரும்பிய மரியாஷரபோவா பழைய ஆட்ட நிலைக்கு வரவில்லை. முடிவில் எலீனா டெமன்டிவா 6-4, 6-3 என்ற நேர் செற்கணக் கில் ஷரபோவாவை வீழ்த்தி 'சம்பியன்' பட்டம் வென்றார். இந்த ஆண்டில் டெமன்டிவா பெற்ற 3ஆவது பட்டம் இதுவாகும்.



# தாய்லாந்தில் ட்ரக் குண்டுத் தாக்குதல்: உணவகத்திலிருந்த 26 பேர் படுகாயம்

தாய்லாந்தின் நராத்திவாட் நகரிலுள்ள திறந்தவெளி உணவகமொன்றில் இடம்பெற்ற ட்ரக் குண்டுத் தாக்குதலில் 26 பேர் படுகாயமடைந்தனர். இவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் 18 பேர் ஆபத்தான கட்டத்திலிருந்தனர் என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

''மதிய உணவுவேளை உணவகத்தில் பெருந்தொகையானோர் இருந்தனர். இவர்களில் சிவில் சேவகர்களும், சிவிலியன்களும் அடங்குவர். இத்தருணத்தில் வெளியே நிறுத்தப்பட்டிருந்த ட்ரக்கொன்றுக்குளிருந்து அதி பயங்கர சத்தத்துடன் குண்டொன்று வெடித்துள்ளது'' என இராணுவப் பேச்சாளர் கேர்ணல் பரினியா சைடிலொக் தெரிவித்தார்.

''உணவகத்துக்கருகில் நிறுத்தப்பட்டிருந்த ட்ரக்குக்குள் இக்குண்டு வைக்கப்பட்டு, மக்கள் நிறைந்திருந்த ஒரு சமயத்தில் தன்னியக்கக் கருவி மூலமாக வெடிக்க வைக்கப்பட்டுள்ளது. இந்த குண்டு 110 இறாத்தல் (50 கிலோ கிராம்) எடை கொண்டதாக இருந்திருக்கலாம்'' என்றும் அவர் கூறினார்.

''இக்குண்டு வெடிப்பால் அருகில் நிறுத் [illegible]

நாட்டுக் கோரிக்கையை முன்வைத்து அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இஸ்லாமிய தீவிரவாதிகளே இத் தாக்குதலை நடத்தியுள்ளார்கள்'' என்றும் அவர் அழுத்தமாகக் குறிப்பிட்டார்.

தாய்லாந்தின் தென் பகுதியில் அமைந்துள்ள நராத்திவாட், பட்டானி, யால ஆகிய மூன்று மாகாணங்களிலும் முஸ் லிம்கள் செறிந்து வாழ்கிறார்கள். இவற்றி லுள்ள இஸ்லாமிய தீவிரவாதிகள் 2004 ஆம் வருட ஜனவரி முதல் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து போராடி வருகிறார்கள்.

அரச படைகளுக்கும், தீவிரவாதிகளுக்குமிடையே மூண்டு வந்துள்ள மோதல்களில் 3 ஆயிரத்து 700 இற்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

# தலிபான்கள் மீதான தாக்குதல் தொடரும்; பாகிஸ்தான் உள்துறை அமைச்சு தகவல்

இஸ்லாமாபாத், ஓக. 26

''ரமழான் நோன்பையொட்டி தலிபான் தீவிரவாதிகள் மீதான தாக்குதலை நிறுத்த முடியாது. ஏனெனில், கடந்த ஆண்டுகளில் அறிவித்த சண்டை நிறுத்தங்களை அவர்கள் மதிக்கவில்லை'' என பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சி.என்.என். தொலைக்காட்சிக்கு தாம் அளித்த பேட்டியில், ''அமைதி மாதம் என்று அழைக்கப்படும் புனித ரமழான் மாதத்தில் கூட தலிபான்கள் மீதான தாக்குதலை பாது[illegible] வில்லை. அதனால் சண்டை நிறுத்தத்தில் எங்களுக்கும் விருப்பம் இல்லை. அவர்கள் மீதான படை நடவடிக்கை தொடரும்'' என்று மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு வசீரிஸ்தானிலுள்ள ஹாஃபிஸ் குல் பஹதூர் தலைமையிலான தலிபான்கள், ரமழான் நோன்பையொட்டி 40 நாள் சண்டை நிறுத்தம் செய்வதாக ஒரு தலைப்பட்சமாக அறிவித்தனர். மேலும் பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் எதையும் நடத்த வேண்டாம் என்றும் தமது இயக்கத்தினரை ஹாஃபிஸ் குல் பஹதூர் கேட்டுக்கொண்டார்.

[illegible] கேட்டபோது, இந்த [illegible]

# ஜப்பானில் அடுத்தடுத்து இரு உக்கிர பூகம்பங்கள்

ஜப்பானில் திங்கட்கிழமை 6.8 மற்றும் 6.5 ரிச்டர் அளவிலான இரண்டு உக்கிர பூகம்பங் அடுத்தடுத்து ஏற்பட்டுள்ளன. இதையடுத்து, ஆழிப்பேரலை எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

உலகில் நடக்கும் அதிபயங்கர பூகம்பங்களில் 20 சதவீதம் ஜப்பானில் தான் நடக்கிறது. இதற்கு இந்த நாடு பசுபிக் மற்றும் பிலிப்பைன் கடல் தட்டுக்கள் எனப்படும் இரண்டு நிலத் தட்டுகளுக்கு இடையில் அமைந்துள்ளதுதான் காரணம்.

இதனால் அங்கு அடிக்கடி பூகம்பம், எரிமலை சீற்றம் போன்ற இயற்கை சீற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்நிலையில், திங்கட்கிழமை அதிகாலை சுமார் 5.36 மணிக்கு ஜப்பானின் இஷிகாஹிஜிமா என்ற தீவில் சுமார் 6.8 ரிச்டர் அளவுக்கு பூகம்பம் ஏற்பட்டது. இது முடிந்த சில மணி நேரங்களில் அடுத்த பூகம்பம் அந்த தீவை தாக்கியது. இது 6.5 ரிச்டர் அளவாக பதிவானது.

இந்த இரண்டு பூகம்பங்களும் 10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்டன என ஜப்பானிய அரசு தெரிவித்துள்ளது. இதையடுத்து, அப்பகுதியில் ஆழிப்பேரலை எச்சரிக்கை விடப்பட்டது. பின்னர் அது உடனே திரும்ப பெறப்பட்டது. சேதம் குறித்து உடனடியாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

இந்த பூகம்ப அலைகள் தாய்வானிலும் உணரப்பட்டது. ஆனால், அங்கு எந்த சேதமும் ஏற்படவில்லை என்றும் தெரி[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்கினோம் புலிகளை அழிக்கவல்ல; தற்காப்புக்கே!

## இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் பல்லம் ராஜு ஒப்புதல்

சென்னை, ஓக. 26

இலங்கையின் தற்காப்புக்காக ஆயுதங்களை வழங்கினோமே தவிர, விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக அல்ல - என்று பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் பல்லம் ராஜு தெரிவித்தார்.

சென்னை ஆவடி கனரக தொழிற்சாலையில் உருவாக்கப்பட்ட அதிநவீன 'பீஷ்மா' ரக பீரங்கிகளை இராணுவத்திடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் அங்கு தெரிவித்தரைவ வருமாறு -

பீஷ்மா ரக பீரங்கிகளை உருவாக்கியுள்ளமை உள்நாட்டுத் தொழில்நுட்பத்துக்கு ஒரு மைல் கல்லாகும். இத்தகைய உள்நாட்டுத் தொழில்நுட்பங்கள் இன்னும் வேகமாக வளர்ச்சி அடைய வேண்டும்.

அதிநவீன பீரங்கிகள் நாட்டின் பாதுகாப்புக்கு மிகவும் பயனுள்ளவையாக இருக்கும்.

விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு இலங்கைக்கு ஆயுதங்களை இந்தியா வழங்கவில்லை. இலங்கை யின் தற்பாப்புக்காகவே ஆயுதங்களை வழங்கினோம்.

ஏற்கனவே போடப்பட்டிருந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் ஆயுதங்கள் வழங்கப்பட்டன - என்றார்.

மேலும் அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

இந்தியா மற்றும் ரஷ்யாவின் கூட்டு முயற்சியால் இந்தப் பீரங்கிகள் உருவாக்கப்பட்டுள்ளன. ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாகங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட முதல் பீஷ்மா கவச வாகனம் 2004 ஆம் ஆண்டு இராணுவத்திடம் வழங்கப்பட்டது.

பீஷ்மா என பெயரிடப்பட்டுள்ள இந்தப் பீரங்கிகள் 'டி - 90' வகையைச் சேர்ந்தவை. பாதுகாப்பு, வாகன ஓட்டம், போரிடும் திறன்கள் உள்ளிட்டவற்றில் நவீனம் புகுத்தப்பட்டுள்ளது. இந்த பீஷ்மா பீரங்கிகள் ஒரே குழலைப் பயன்படுத்தி வெடிபொருள்களைச் சுடுவதுடன், நிர்ணயிக்கப்பட்ட இலக்கை சரியாகத் தாக்கும் திறன் கொண்டதாகும்.

இரவு நேரத்தில் போரிடுவதற்கு வசதியாக புதிய கருவிகள் இதில் உருவாக்கப்பட்டுள்ளன. தகவல் பரிமாற்றத்துக்கான ரேடியோ கருவிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ரக பீரங்கிகள் 35 ஆண்டுகள்வரை திறமையாகச் செயற்படும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

இப்போது பத்து பீரங்கிகளை இராணுவத்திடம் வழங்கியுள்ளது. ஆண்டொன்றுக்கு 100 பீஷ்மா பீரங்கிகளை தயாரிக்க கனரக வாகன தொழிற்சாலை திட்டமிட்டுள்ளது.

இதற்கான மொத்தச் செலவு ரூ.15 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது - என்றார்.



ரஷ்ய தொழில்நுட்ப உதவியுடன் ஆவடி கனரக வாகனத் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட அதிநவீன பீஷ்மா டாங்கிகள், நாட்டுக்கு நேற்றுமுன்தினம் அர்ப்பணிக்கப்பட்டன. தொழிற்சாலையில் டாங்கிகள் அணி வகுத்து செல்கின்றபோது....

# இந்தியக் கடலோரப் பாதுகாப்புக்காக புதிய கப்பல்கள் விமானங்கள் சேவைக்கு

## கடலோரப் பாதுகாப்புப்படை அதிகாரி தகவல்



சென்னை, ஓக. 26

இந்தியக் கடலோர மாநிலங்களில் கூடுதல் பாதுகாப்புக்காக புதிய கப்பல்கள், விமானங்கள் பயன்படுத்தப்படும் - என்று இந்திய கடலோர பாதுகாப்புப் படை இயக்குநர் ஜெனரல் வைஸ் அட்மிரல் அனில் சோப்ரா கூறினார்.

அனில் சோப்ரா தற்போது சென்னைக்கு வந்துள்ளார். தமிழக ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலாவை மரியாதை நிமித்தமாக அவர் நேற்றுமுன் தினம் காலையில் ராஜ்பவனில் சந்தித்துப் பேசிய பின்னர் அங்கிருந்த செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

கிழக்குக் கடற்கரை பிராந்தியத்தில், பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பயிற்சி மற்றும் நடவடிக்கைகளை ஆய்வு செய்வதற்காக சென்னைக்கு வந்தேன்.

மிகவும் நல்ல முறையில் இந்தப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. இந்தப் பயிற்சியில் கடலோரக் காவல்படை, கப்பல் படை, தமிழக பொலிஸ், குடியுரிமை, சுங்கத்துறை, சென்னை துறைமுக அதிகாரிகள், ஊழியர்கள் உட்பட பல்வேறு பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

பாதுகாப்புப் பணியில் சிறப்பாக செயற்படுவதற்கு இந்தப் பயிற்சிகள் அனைவருக்கும் மிகுந்த உபயோகமாக அமைந்துள்ளன. இதன் மூலம் மேலும் பல விடயங்கள், பாடங்களை கற்றுக்கொண்டிருக்கிறோம். சில பிரச்சினைகள் பற்றிக் கூறப்பட்டன. எனவே, அதுபற்றி இங்கு ஆலோசனை செய்துள்ளேன்.

கடலோரக் காவல்படை மட்டுமல்ல, பாதுகாப்பு தொடர்புடைய அனைத்து பிரிவுகளுமே பலப்படுத்தப்பட உள்ளன. கடலோரக் காவல் படையை மேலும் பலப்படுத்துவதற்கான திட்டங்கள் ஏராளம் உள்ளன. அவற்றுக்கு அனுமதி கிடைத்து வருகிறது.

அந்த வகையில் இன்னும் சிறிது காலத்தில் எல்லைப் பாதுகாப்புக்கான புதிய கப்பல்கள், விமானங்கள் வாங்கப்பட்டு, பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளன. தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்து கடலோர மாநிலங்களிலும் புதிய கப்பல்கள், விமானங்கள் வழங்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்படும் - என்றார்.



மங்கை அரிராஜன் தயாரித்து இயக்கும் படம் 'மன்மத ராஜ்யம்'. இதன் தொடக்க விழா சென்னையில் நேற்றுமுன்தினம் நடந்தது. விழாவில் பட நாயகிகள் தேஜாஸ்ரீ, மேகா நாயர், அக்ஷயா, கீர்த்தி சாவ்லா பங்கேற்றபோது...

# பன்றிக்காய்ச்சலைத் தடுக்க நடவடிக்கை; பொது மக்கள் பீதி அடைய வேண்டாம்

## கருணாநிதி வேண்டுகோள்



சென்னை, ஓக. 26

தமிழகத்தில் பன்றிக் காய்ச்சல் பரவாமல் தடுக்க தமிழக அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எனவே, பொது மக்கள் பீதியடைய வேண்டாம் - என்று முதல்வர் கருணாநிதி கேட்டுக் கொண்டுள்ளார்.

உலகம் முழுவதும் பன்றிக்காய்ச்சல் பீதி அதிகரித்துள்ளது. இந்தியாவில் நேற்றுமுன்தினம் வரை 72 பேர் பன்றிக்காய்ச்சலுக்கு பலியாகியுள்ளனர்.

இந்நிலையில், தமிழகத்தில் பன்றிக்காய்ச்சல் பரவாமல் தடுக்க, அரசு எடுத்து வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதல்வர் கருணாநிதி நேற்றுமுன்தினம் ஆய்வு நடத்தினார்.

இதன்பின், தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

பன்றிக்காய்ச்சல் வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் மூலம் வெளிநாட்டு விமானங்கள் அதிகமாக வரும் மாநிலங்களில் பரவுகிறது.

எனவே, விமான நிலையங்களில், துறைமுகங்களில் இந்நோய் பாதித்தவர்கள் வருகிறார்களா என கண்காணிப்பதைத் தீவிரப்படுத்துமாறு முதல்வர் உத்தரவிட்டார்.

தமிழகத்தில் கடந்த 3 மாதங்களில் 8.5 லட்சம் விமான, கப்பல் பயணிகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. 7,516 தொண்டைக் குழி திசு, சுவாசக் குழாய் திசு மாதிரிகள் எடுத்து பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன. அதில் 205 பேருக்கு பன்றிக்காய்ச்சல் பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. இதில் 148 பேர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பினர். 54 பேர் வைத்திய சாலையில் சிறப்புக் குழுக்களின் கண்காணிப்பில் சிகிச்சை பெறுகின்றனர். நோய் பரிசோதனைக்கு கிங் பரிசோதனை நிலையத்தில் உபகரணங்கள், மருந்துகள் போதியளவு உள்ளன.

பொது மக்கள் அதிகம் கூடும் திருவண்ணாமலை, வேளாங்கண்ணி திருவிழாக்களில் போதிய தடுப்பு நடவடிக்கைகள், மருத்துவ வசதிகளை ஏற்படுத்த முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார். எனவே, பொதுமக்கள் எந்தவிதமான பயமும், பீதியும் அடையத் தேவையில்லை என்று முதல்வர் கூறியுள்ளார் - என்றுள்ளது.

# கிருஷ்ணகிரியில் கோர விபத்து; 9 பேர் உயிரிழப்பு; மூவர் படுகாயம்

ஒசூர், ஓக. 26

கிருஷ்ணகிரி, ஒசூர் அருகே லொறி மீது பின்னால் வந்த அரச பஸ் மோதி விபத்துக்குள்ளானதில் பஸ்ஸில் பயணித்த 9 பேர் உடல் நசுங்கிப் பலியாகினர். மேலும் 3 பேர் படுகாயம் அடைந்தனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து காற்றாலை மின்சார நிலையத்துக்குத் தேவையான பாகங்களை ஏற்றிக் கொண்டு கர்நாடக மாநிலம் கோரமண்டலத்துக்கு லொறி ஒன்று கடந்த திங்கட்கிழமை சென்று கொண்டிருந்தது.

இந்த லொறியை திண்டுக்கல் மாவட்டம் சிங்காரப்பேட்டையைச் சேர்ந்த சாரதி சக்திவேல் (வயது - 35) ஓட்டிச் சென்றார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரியை அடுத்த சுண்டகிரி அருகே இந்த லொறி சென்றது. அப்போது முன்னால் சென்ற லொறி மீது சேலத்தில் இருந்து ஒசூர் நோக்கி வந்த அரச பஸ் மோதியது.

இந்த விபத்தில் 9 பேர் இறந்தனர். படுகாயம் அடைந்த 3 பேர் பெங்களூர் தனியார் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்தில் இறந்த 9 பேரும் 22 வயது முதல் 38 வயதுக்குள்பட்டவர்களே.

இந்த விபத்து குறித்து சூளகிரி பொலிஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பவ இடத்தை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏ.ஜி. [illegible] பார்வையிட்டார்.

இறந்தவர்களின் சடலங்கள் பிரேதப் பரிசோதனைக்காக ஒசூர் அரச வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

# ஒரு கோடி வாங்குவதிலேயே குறி நடிகைகள் மீது பேரரசு பாய்ச்சல்



சென்னை, ஓக. 26

எந்த விழாவாக இருந்தாலும் கதாநாயகிகள் வராமல் புறக்கணிக்கிறார்கள். ரூபா ஒரு கோடி சம்பளம் யார் வாங்குவது என்பதில்தான் அவர்கள் குறியாக இருக்கிறார்கள் - என்று இயக்குநர் பேரரசு கூறினார்.

புதுமுகம் கஜன், மீரா ஜாஸ்மின், கருணாஸ், யோகிதா ஆகியோர் நடிக்கும் படம் 'ஆதி நாராயணா'. இப்படத்தின் பாடல் சி.டி. வெளியீட்டு விழா சென்னையில் நேற்றுமுன்தினம் நடந்தது.

இதில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

தமிழ்ப் பட விழாக்கள் எதற்கும் கதாநாயகிகள் வராமல் புறக்கணிக்கிறார்கள். ஒரு கோடி ரூபா சம்பளம் யார் வாங்குவது என்பதில்தான் போட்டி போடுகிறார்கள்.

தெலுங்கு பட விழாக்களில் கதாநாயகிகளை பார்க்கிறேன். தமிழ் பட விழாக்களுக்கு வரவேண்டும் என்ற அக்கறை அவர்களுக்கு இல்லை.

இந்த [illegible] அவருக்கு [illegible]

# பா.ஜ.கவின் உயர் பதவிகளில் மாற்றம் செய்யப்பட வேண்டும்

## அருண்ஷோரி போர்க்கொடி



புதுடில்லி, ஓக. 26

பாரதிய ஜனதாக் கட்சியின் உயர்நிலைப் பதவிகளில் மாற்றம் தேவை - என்று அக் கட்சியின் மூத்த தலைவர் அருண்செரி தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக் காட்சி ஒன்றுக்கு நேற்றுமுன் தினம் அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

பாரதிய ஜனதா கட்சியின் தலைமைப் பதவிகளில் உள்ளவர்கள் குறுகிய மனப்பான்மையோடு நடந்து கொள்கின்றனர். கட்சியின் வளர்ச்சிக்காக அரவணைத்து செல்லக்கூடிய போக்கு நாளுக்குநாள் குறைந்து வருகிறது.

கடந்து 5 ஆண்டுகளாக ஒருவர் மீது குறை சொல்லிக் கொண்டு காலம் கடத்தும் நிலைதான் அதிகரித்துள்ளது. கட்சியில் ஆரோக்கியமான சூழல் இல்லை.

[illegible] உயர்நிலைப் பதவிகளில் மாற்றம் கொண்டுவந்தால் மட்டுமே கட்சியில் ஆரோக்கியம் கிடைக்கும்.

மாநில அளவில் நிர்வாகிகளாக, முதல்வர்களாக, அமைச்சர்களாக, மக்கள் பிரதிநிதிகளாக உள்ள பா.ஜ.கவினரை, தலைமையின் முக்கிய பதவிகளுக்கு நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமித்தால்தான் கட்சி அனைத்து மாநிலங்களிலும் வளர்ச்சி பெறும்.

ராஜஸ்தான், உத்தரகண்ட் மாநிலங்களில் ஆட்சியை இழந்தது, மக்களவைத் தேர்தலில் கட்சிக்குப் பின்னடைவு என்பதற்காக வசுந்தரா ராஜே மற்றும் பி.சி. கந்தூரி மீது நடவடிக்கை மேற்கொள்ள காட்டும் அவசரத்தை அனைத்து நிலைகளில் எடுக்க மறுப்பது ஏன்?

மக்களவைத் தேர்தலில் நாடு முழுவதும் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவுக்காக இதுவரை எடுத்த நடவடிக்கை என்னவென்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ விரிவுரையாளர் சிவராஜா தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து ஒன்றியம் அறிக்கை; வருத்தம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 26

இதுவரைகாலமும் மருத்துவபீடத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவியபோதும் எமக்காக அயராது உழைக்கும் ஆசிரியருக்கு ஏற்பட்டிருக்கும் இவ்வாறான நிகழ்வு எமது ஆசிரியர், மாணவர்கள் மத்தியில் மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

எமக்காகச் சேவையாற்றும் ஆசிரியருக்கு இவ்வாறான சம்பவம் ஏற்பட்டிருப்பதை மாணவர்கள் சார்பில் கண்டிக்கிறோம்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக மருத்துவத்துறை வருகை விரிவுரையாளரான வைத்தியகலாநிதி ந.சிவராஜா நேற்று முன்தினம் அவரது அலுவலகத்தில் வைத்து கத்தியால் குத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக ஒன்றியம் இந்த அறிக்கையை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நேற்று முன்தினம் பி.ப. 3.15 மணியளவில் எமது பீடத்தின் சமுதாய மருத்துவத் துறைப் பிரிவில் நடைபெற்ற அசம்பாவித நிகழ்வுகளின் பின்னணியில் பல்வேறு கருத்துகள் வெளியாகியுள்ளன. இச் சம்பவம் தொடர்பான சில தவறான கருத்துக்களும் அபிப்பிராயங்களும் கல்வியுலகில் பாரிய அதிர்ச்சியையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளதுடன் மாணவர்கள்மீது களங்கத்தை உருவாக்கியுள்ளது.

அன்றையதினம் குறித்த மாணவன் தனது தனிப்பட்ட கல்விசார் பிரச்சினை சம்பந்தமாக சமுதாய மருத்துவத்துறையின் வருகைதரு பேராசியர் டாக்டர் என். சிவராஜாவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தபோது பேராசிரியரைத் தாக்கியுள்ளார். அச்சமயம் அங்கு கடமையில் இருந்த தொழில்நுட்ப உத்தியோகத்தரும் சில மருத்துவ மாணவர்களும் சேர்ந்து அவரை மேலதிக தாக்குதல்களிலிருந்து பாதுகாத்து வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் விசாரித்தபோது இம் மாணவன் தனது பரீட்சையில் சித்திபெறமுடியாமையினை கருத்திற் கொண்டே இவ்வாறு நடந்துகொண்டதாகத் தெரியவந்துள்ளது. மேலும் அம் மாணவன் இப் பிரச்சினை தொடர்பாக பலமுறை பேராசிரியருடன் உரையாடியிருந்துள்ளார் எனவே இச் சம்பவம் மேற்குறித்த பின்னணியிலே இடம்பெற்றிருக்கலாமென ஊகிக்கின்றோம்.

### வருந்தத்தக்க சம்பவம்

இச் சம்பவமானது மாணவ ஒழுக்க விழுமியங்களுக்கு அப்பாற்பட்டு நடைபெற்றிருப்பது மிகவும் வருந்தத் தக்கது இதுவரை காலமும் எமது பீடத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய போதும், எமக்காக அயராது உழைக்கும் ஆசிரியருக்கு ஏற்பட்டிருக்கும் இவ்வாறான நிகழ்வு எமது ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் மிகுந்த மன வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

டாக்டர் என்.சிவராஜா உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசகராகக் கடமையாற்றும் அதேவேளை, பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் தனது வேலைப்பழுவின் மத்தியிலும்கூட எமது மாணவர்களின் நலன்கருதி வருகைதரு பேராசிரியராக கடமையாற்றிவருகின்றார்.

இவ்வாறான சம்வம் எமக்காக சேவையாற்றும் ஆசிரியருக்கு ஏற்பட்டிருப்பதை எமது மாணவர்கள் சார்பில் மருத்துவ மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

மேலும் பேராசிரியரின் உணர்வுகளுக்கு நாம் மதிப்பளிப்பதுடன் ஆசிரியர், மாணவர் இடையான நல்லுறவைத் தொடர்ந்து பேணுவதற்கு அனைத்து மாணவர்களினதும் ஒத்துழைப்பை வேண்டுகின்றோம்- என்றுள்ளது. (அ-1)

## செயலகத்தில் வெள்ளியன்று உளவளக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக 26

யாழ் மாவட்டச் செயலக நலன்புரிச்சங்கம் நடத்தும் மாதாந்த கருத்தரங்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது

சங்கத்தின் தலைவர் மனுவல் வித்தியானந்தநேசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 'உளநலம்-பிரச்சனைகளும் எதிர் கொள்ளலும்' என்ற தலைப்பில் உளநல வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.சிவயோகன் கருத்துரை வழங்கவுள்ளார். (1-7)

## சுதேச மருத்துவப் பணியாளர் யாழ்ப்பாணம் வருகிறார்

வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் எதிர்வரும் 3ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகைதர உள்ளதாக வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் வடக்கின் வசந்த திட்டத்தின் கீழ் சுதேச மருத்துவத்துறை அமுலாக்கல் தொடர்பான வேலைத் திட்டங்களைப் பார்வையிட இவர் வருகைதரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-300)

## காரைநகர் கசூரினாவில் சுற்றுலாச் செல்வதற்கு புதிய நடைமுறைகள் பிரதேச சபைகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக 26

காரைநகர் கசூரினா கடற்கரை சுற்றுலா மையத்துக்கு பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் செல்வதற்கு புதிய நடைமுறை காரைநகர் பிரதேச சபையால் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய நடைமுறைகள் தொடர்பான விவரங்களை காரைநகர் பிரதேச சபையின் செயலாளர் இரா.லோகநாதன் அறிவித்துள்ளார்.

புதிய நடைமுறைகள் வருமாறு:-

* சுற்றுலாப் பயணிகள் சனி,ஞாயிறு தினங்களில் அனுமதிக்கப்படுவர்.
* பாடசாலை, தனியார் கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் கிழமை நாள்களில் அனுமதிக்கப்படுவர்.
* காரைநகர் பிரதேச சபை ஊடாக காரைநகர் கடற்படை பொதுசன தொடர்பு அனுமதியைப் பெற்றுச் செல்ல வேண்டும்.
* சுற்றுலாப் மையத்துக்கு வருகைதருவோர் தமது பெயர்கள், அடையாள அட்டை இலக்கம், வாகன இலக்கம் ஆகியவற்றை பட்டியல் படுத்தி அதன் மூன்று பிரதிகளுடன் அனுமதிக்கடிதத்தை பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வேலைநாள்களில் சமர்ப்பிக்க வேண்டும்.
* பிரதேச சபையின் சிபார்சுடன் அக் கடிதத்தை கடற்படை பொதுசனத் தொடர்பு அதிகாரிகளிடம் சமர்ப்பித்து அனுமதி பெற வேண்டு. (1)

# புலமைப் பரிசில் பரீட்சையைக் கூட நடத்தத் தெரியாத அரசாங்கம்

## பல்கலை. மாணவர் சம்மேளனம் சாடல்

கொழும்பு, ஒக.26

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு, தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையைக்கூட சரியாக நடத்த இயலாமல் உள்ளமை சந்தேகத்துக்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளது என்று பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தரம் - 05 இல் பயிலும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அப் பரீட்சையின்போது காலியிலுள்ள பாடசாலையொன்றின் மாணவர்களுக்குத் தேவையான அளவில் பரீட்சை வினாத் தாள்கள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் வேறு பாடசாலையிலிருந்து தேவையான அளவு வினாத்தாள்களைப் பெற வேண்டிய நிலைமை பரீட்சை ஏற்பாட்டாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இதனால் வேறு பாடசாலையிலிருந்து தேவையான அளவு பரீட்சை வினாத்தாள்கள் பெறப்படும் வரைக்கும் காலியிலுள்ள குறித்த பாடசாலையின் மாணவர்கள் பரீட்சை எழுத முடியாத நிலைமை காணப்பட்டது. இதன் காரணமாக காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட இருந்த பரீட்சை குறித்த பாடசாலையில் காலை 10.25 மணிக்கே ஆரம்பிக்கப்பட்டது. இச்சம்பவத்தைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையைக்கூட சரியாக நடத்த இயலாமல் உள்ளது என்று பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்களில் பரீட்சை வினாத்தாள்களின் இரகசியத் தன்மை கேள்விக்கு உட்படுகின்றது என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (அ-சி)

# சியாம்லால் ராஜபக்ஷ மரணம்; படுகொலை என்கின்றது ஐ.நா.

கொழும்பு, ஒக. 26

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய உறவினரும், ஐ.நா.சபை பேச்சாளருமான சியாம்லால் ராஜபக்ஷ தான்சானியாவில் படுகொலை செய்யப்பட்டார் என்பது தெரியவந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திங்கட்கிழமை இன்னர்சிட்டி பிரஸ் செய்தியாளரின் கேள்விக்குப்பதிலளிக்கையில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மிக்செலே மொன்டஸ், ஆரம்பக் கட்ட விசாரணைகள் மூலம் சியாம்லால் படுகொலை செய்யப்பட்டார் என்பது தெரியவந்துள்ளது எனத் தெரிவித்துள்ளார். சியாம்லால் ராஜபக்ஷவின் படுகொலையை மூடி மறைப்பதற்கு ஐ.நா. முயல்வதாக இலங்கையில் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் தான்சானியாவில் தமது வீட்டில் சியாம்லால் ராஜபக்ஷ மர்மமான முறையில் உயிரிழந்திருந்தமை தெரிந்ததே.

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஒக 26

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயப் பெருந்திருவிழா இன்று மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 30 ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும் 2 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 3 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவிருக்கின்றன. (1)

# மலையக யுவதிகள் இருவரின் சடலங்களை தோண்டி எடுத்து மீளப் பிரேத பரிசோதனை

## கண்டி சட்ட வைத்திய அதிகாரிக்கு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஒக. 26

கொழும்பில் வீட்டுவேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த சமயம் மர்மமான முறையில் உயிரிழந்த இரு மலையகத் தமிழ் யுவதிகளினதும் புதைக்கப்பட்ட சடலங்களை மீண்டும் தோண்டியெடுத்து பிரேத பரிசோதனைகளைச் செய்யுமாறு கண்டி தேசீய வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரிக்குக் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இச்சடலங்களை நாளை வியாழக்கிழமை தோண்டியெடுத்து பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த வாய்ப்புகள் உண்டா என்பதையும் தெரிவிக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

கொழும்பு - 7 பகுதியில் இரு வீடுகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த இந்த யுவதிகள் கடந்த 15 ஆம் திகதி கொழும்பு, பௌத்தாலோக மாவத்தைப் பகுதியில் உள்ள கழிவுநீர் கால்வாயை ஒட்டி மர்மமான வகையில் இறந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டனர். பொலிஸ் விசாரணையின் பின்னர் அந்த யுவதிகளின் சொந்த இடத்தில் - மலையகத்தின் ஹட்டனில் - அச்சடலங்கள் புதைக்கப்பட்டன.

இந்த மர்ம மரணம் தொடர்பான விடயம் கொழும்பு பிரதம நீதிவான் நிஷாந்த ஹப்பு ஆராய்ச்சி முன்னிலையில் எடுக்கப்பட்டபோது, இந்த மரணங்கள் தொடர்பாக யுவதிகளின் உறவினர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி பல சந்தேகங்களைக் கிளப்பினார். இந்த மரணங்கள் கொலைகள் எனக் குறிப்பிட்ட அவர், இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே இடம்பெற்ற விசாரணைகள் குறித்து யுவதிகளின் உறவினர்கள் அதிருப்தியும், சந்தேகமும் கொண்டுள்ளனர் என்றும், அதனால் புதைக்கப்பட்ட இரு சடலங்களையும் மீளத் தோண்டி எடுத்து, புதிதாகப் பிரேத பரிசோதனை நடத்தப்பட வேண்டும் என உறவினர்கள் வலியுறுத்துகின்றனர் என்றும் குறிப்பிட்டிருந்தார். இந்த விடயங்களைக் கவனத்தில் எடுத்த கொழும்பு பிரதம நீதிவான் சடலங்களை மீளத் தோண்டி எடுத்துப் புதிதாக மரண விசாரணை நடத்துவதற்கு நேற்று உத்தரவிட்டு, வழக்கை ஒத்திவைத்தார். (அ-சி)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் விஜயரட்ணம் (மெக்கானிக்-கீயா)



இராமநாதன் வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வதிவிடமாகவும் தற்போது கொக்குவில் நந்தாவிலை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் விஜய ரட்ணம் நேற்று (25.08.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவமணி (சோதி) யின் அன்புக் கணவரும் பத்மநாதன், லீலாவதி (அமரர்), யோகநாதன் (அமரர்), ஆனந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசமணி, மனோன்மணி, தயாளமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2009) புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நந்தாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
யோகன் (கொக்குவில்).


## யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்

775, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### புனரமைப்புப் பொதுக்கூட்டம்

தலைமை: கவிஞர் த.பரமலிங்கம்
இடம்: யாழ். ப.நோ.கூ.ச மண்டபம்
காலம்: 30.08.2009 ஞாயிறு
நேரம்: மு.ப. 10 மணி
பிரதமவிருந்தினர்: க.சிவராசா மோகன்
(பத்மநாபா ஈபி ஆர் எல் எவ் கட்சியின் யாழ்.பிராந்திய செயலாளர்)

அனைத்து சிகை ஒப்பனையாளர்களும் கடைகளைப் பூட்டி பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

ஒருங்கிணைப்பாளர்கள்,
(யா.மா.சி.ஒ.சங்கம்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி முகாம்களில் இட நெருக்கடி: அடைமழையை சமாளிப்பது கடினம்

## மனிதாபிமான அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன

கொழும்பு, ஓக. 26

வவுனியா செட்டிக்குளம் பகுதியிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் அளவுக்கதிகமான மக்கள் தங்கவைக்கப் பட்டுள்ளமையால் - மிகுந்த சன நெருக்கடி நிலவுவதால் - இனி வரப்போகின்ற அடைமழை காலத்தில் அங்கு நிலைமையை எப்படி எதிர்கொள்வதென்ற தயக்கம் மனிதாபிமான அமைப்புகளிடம் ஏற்பட்டிருக்கின்றது.

''நான்கு அல்லது ஐந்து பேர் தங்கக் கூடிய கூடாரத்தில் 14 பேர்வரை தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். 20 பேர் மட்டுமே பயன்படுத்தக்கூடிய மலசலகூடத்தை 80 பேர் பயன்படுத்துகிறார்கள். இந்த நிலைமை தொடர்ந்தால் இனிவரும் மழை காலத்தில் நிலைமை இப்போதிருப்பதை விட மிகவும் மோசமடையும்'' என்று மனிதாபிமான தொண்டு அமைப்புகள் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

முகாம்களில் அளவுக்கதிகமான மக்கள் உள்ளமையால், தம்மால் மனிதாபிமான சேவைகளை சிறந்த தராதரத்தில் வழங்க முடியாதுள்ளது எனவும் மனிதாபிமான அமைப்புகள் தெரிவித்துள்ளன.

மழையால் எதிர்வரும் நாள்களில் கடும் சவால்கள் காத்திருக்கின்றமையை தற்போதைய நிலைமைகள் புலப்படுத்தியுள்ளன எனத் தெரிவித்துள்ள ஐ.நாவின் கொழும்புப் பிரதிநிதி நீல் புஹுனே, சமீபத்தில் அமைக்கப்பட்ட சிறிய முகாம்களின் நிலைமை சிறிதளவு கூட தராதரமானதாக இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான அலுவலகத்தின் செய்திச் சேவைக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பருவப்பெயர்ச்சி மழை மனிதாபிமான அமைப்புகளினதும், அதிகாரிகளினதும் திறமையைச் சோதிக்கப்போகின்றது எனத் தெரிவித்துள்ள அந்தச் செய்திச் சேவை, இது குறித்து மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

வவுனியாவின் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் அளவுக்கதிகமான மக்கள் உள்ளதன் காரணமாக மனிதாபிமான சேவைகளை சிறந்த தராதரத்தில் வழங்கமுடியாமலுள்ளது என்கின்றனர் மனிதாபிமானப் பணியாளர்கள்.

''உணவு விநியோகம், சுகாதாரம், குடிதண்ணீர், போஷாக்கு போன்றவற்றை சிறந்த தரத்தில் வழங்க முடியாத நிலையிலுள்ளோம்'' - என ஒக்ஸ்பாம் அமைப்பின் இலங்கைக்கான இயக்குநர் டேவிட் வைட் தெரிவிக்கிறார். மக்கள் குளிப்பதற்குத் தண்ணீர் இல்லாமலுள்ளது என அவர் சுட்டிக்காட்டுகிறார்.

''நாங்கள் சிறந்த தராதரத்தில் மனிதாபிமான வசதிகளை வழங்கும் நிலையில் இல்லை. மழை வெள்ளத்தில் இது இன்னமும் மோசமாகலாம்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திட்டமிடப்பட்டதை விட அதிகமான மக்களைப் பல முகாம்கள் கொண்டுள்ளன. மக்களின் எண்ணிக்கை திட்டமிடப்பட்ட எல்லையைக் கடந்து விட்டது என்பதை மற்றுமொரு சர்வதேச மனிதாபிமானப் பணியாளர் உறுதிசெய்தார்.

இந்த முகாமில் உள்ள பெரும்பாலானவர்களுக்கு உறவினர்களுடன் சென்று தங்கக்கூடிய வசதிகள் உள்ள போதிலும் அதற்கு அனுமதிக்கப்படாமையால் இந்த நிலை காணப்படுகின்றது.

தற்போது முகாம்களின் நெரிசலைக் குறைக்கும் நடவடிக்கைகள் அவசர அவசரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

அரசு இந்தப் பிரச்சினை குறித்து உணர்ந்துள்ளது. இதன் காரணமாக மீள் குடியேற்றம் மற்றும் முதியோர்களை விடுவித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது என்றும் ஐ.நாவின் கொழும்புக்கான வதிவிடப் பிரதிநிதி நீல் புஹ்னே.

''பாதுகாப்பு குறித்த கரிசனையை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். எனினும், ஐ.நா. மற்றும் அரசசார்பற்ற அமைப்புகள் உட்பட அனைவருடனும் அரசு மேற்கொண்ட பேச்சுகளால் மக்கள் எவ்வளவு விரைவில் தமது பகுதிகளுக்கு செல்கிறார்களோ அவ்வளவுக்கு நல்லது என்ற கருத்து நிலவுவதைக் காண முடிந்தது'' என்கிறார் அவர். (அ-சி)

# நடேசனின் உதவியாளரை வெளிநாட்டுக்கு அனுப்ப முயன்றவர் தொடர்ந்தும் மறியலில்

## கொழும்பு பிரதான நீதிவான் உத்தரவு

கொழும்பு, ஓக. 26

விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் பா.நடேசனின் உதவியாளர் எனக் கூறப்படும் பெண் ஒருவரை வெளிநாட்டுக்கு அனுப்ப முயற்சி செய்த சந்தேக நபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா தடுப்புமுகாமில் தங்கியிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளரின் பெண் உதவியாளரை வெளிநாட்டுக்கு அனுப்ப முற்பட்டார் என இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பாக, பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து, சந்தேகத்துக்குரியவர் கைது செய்யப்பட்டார்.

நேற்று இவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே தொடர்ந்து தடுப்புக் காவலில் வைக்க நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# இலங்கை மீனவர் ஐவர் இந்தியாவால் விடுவிப்பு

இந்தியக் கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் ஐவர் விடுவிக்கப்பட்டு இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். இந்திய கடல் எல்லைக்குள் மீன்பிடிக்க வரும் இலங்கை மீனவர்கள் பலரை இந்தியக் கடற்படை கைது செய்துள்ளது.

இதன்படி கடந்த ஜூலை 14 ஆம் திகதி கோடிக்கரை கரையோர காவல் படையினரால் கைது செய்யப்பட்ட ஐந்து இலங்கை மீனவர்களை விடுவித்து இலங்கைக்கே திருப்பியனுப்பியது. இந்தியக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட மீன்பிடிப் படகுகளிலேயே, கரையோர காவல் படையினரின் பாதுகாப்புடன் அவர்கள் திருப்பியனுப்பப்பட்டனர்.

இந்நிகழ்வு திங்கட்கிழமை பாக்கு நீரிணையிலுள்ள சர்வதேச கடலெல்லையில் இடம்பெற்றது. (அ-சி)

# பாதாள உலகக் குழுக்களை ஒழிப்பதிலும் பாகுபாடு காட்டப்படுவதாக ஐ.தே.க. விசனம்

அரசுக்கு ஆதரவாக செயற்படும் 'குடுலால்' போன்ற பாதாள உலகக் குழுவினரைப் பாதுகாத்துக்கொண்டு அரசுக்கு எதிரான பாதாள உலகக் குழுவினரை மாத்திரம் அரசு கொன்றொழிக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சி எம்.பியும் பொதுச் செயலாளருமான திஸ்ஸஅத்தநாயக்க கூறியவை வருமாறு:-

பாதாள உலகக் குழுவினரைக் கொலை செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்புத் தெரிவிக்கின்றது என்று விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். நாம் அப்படி எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அரசுக்கு ஆதரவான பாதாள உலகக் குழுவினரைப் பாதுகாத்துக் கொண்டு அரசுக்கு எதிரான பாதாள உலகக் குழுவினரைக் கொலை செய்வது தொடர்பில்தான் நாம் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம்.

அரசுக்கு எதிராகக் கருத்துத் தெரிவிப்பவர்களை மிரட்டுவதற்காகவே அரசு இவ்வாறு செயற்படுகின்றது; சட்டம் பிழையாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதைத் தடுக்க மக்கள் எம்முடன் ஒன்றிணைய வேண்டும் - என்றார்.

### தமிழகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துள்ள இந்தியப் பொலிஸார் இவர்களை நாடு கடத்துவது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

### வெள்ளை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடத்தப்படுகின்றனர் என இடம்பெயர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

''இந்த வானைக் கண்டதும் அனைவரும் ஓடி ஒளித்துக்கொள்வதால் என்ன நடைபெறுகின்றது என்பது தெளிவாகத் தெரியவில்லை. என்றாலும், நாளாந்தம் இரண்டு, மூன்று பேர் காணாமற் போகின்றனர்'' என அவர்கள் தெரிவித்தனர்.

அதிகாரிகளுக்கு காசு கொடுத்துவிட்டு இரகசியமாக முகாம்களிலிருந்து வெளியேறுவதும் இடம்பெறுகின்றது.

சிலர் திடீரென காணமற் போயுள்ளனர். அவர்கள் கடத்தப்பட்டனரா அல்லது அதிகாரிகளின் உதவியுடன் வெளியேறி விட்டனரா என்பது தெரியவில்லை என்றும் ஒருவர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் என ஏற்கனவே இனங்காணப்பட்டவர்கள், ஏனையவர்களை இனம் காண அதிகாரிகளுக்கு உதவுகின்றனர் என்றும் அவர் பி.பி.ஸியின் 'சந்தேசிய'வுக்குக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

### மாத்தறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் பூர்த்தி செய்வர்.

மாத்தறைக்கும் பருத்தித்துறைக்கும் இடையிலான தூரம் 480 கிலோ மீற்றர் ஆகும். ஆனால் இவர்கள் 600 கிலோ மீற்றர் தூரத்தை 22 நாள்களில் நடந்து தமது பாதையாத்திரையை பூர்த்தி செய்வர்.

இரவு நேரங்களில் மத நிலையங்களிலும் பொலிஸ், இராணுவ முகாம்களிலும் இவர்கள் தங்குவர். (அ-1)

### யாழ். தளபதியாக..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்.டி.சில்வா இராணுவத் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவரின் இடத்துக்கு மேஜர் ஜெனரல் எல்.பி. ஆர்.மார்க் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஓரிரு தினங்களில் பதவியேற்கவிருக்கும் அவர். யாழ். சுபாஸ் ஹோட்டலில் இயங்கும் 51 ஆவது படையணியின் தளபதியாக இதுவரை பணியாற்றி வந்தார். (அ-1)

### ஈழத் தமிழருக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை இந்தியா வழங்கி வருகின்றது -என்றார்.

அதேவேளை, இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு தனது ஆழ்புல எல்லைக்குள் இடமளிப்பதில்லை என்ற உறுதிமொழியை பாகிஸ்தான் நிறைவேற்றாவிடின் அந்நாட்டுடன் பேச்சு நடத்தும் சாத்தியம் இல்லை என்றும் கிருஷ்ணா கூறியுள்ளார். (அ-சி)

### தென்மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையகம் எதிர்வரும் தென்மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை இம்மாதம் 21 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை தாக்கல் செய்யலாம் என்று அறிவித்திருந்தது. இதையடுத்து, வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது சூடு பிடித்துள்ளன.

இத்தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் வேட்பு மனுக்களைத் தயார் செய்யும் நடவடிக்கைகளின் இறுதிக்கட்ட வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

தமது வேட்பு மனுக்களைத் தயார் செய்யும் நடவடிக்கைகளின் இறுதிக் கட்டத்தை அடைந்து விட்டோம் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

**உடன் தேவை**
முச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள் விற்பனையில் அனுபவமுள்ளவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் தேவை. தொடர்பு: 0773222834

**மலிவு விற்பனை**
கடந்த கால கற்சுமி வெளியீடுகள் தரம் 1 - 5
அம்மா அன்னை தாய்
அறிவு தேடல்
தரம் 1 - 11 கணிதம் + நுண்ணறிவு
ரூபா 10/= ரூபா 20/=
கிடைக்குமிடம்: கற்சுமி கல்வி நிறுவனம்
பரணி தொழில்நுட்பசேவை,
166, நாவலர் வீதி, யாழ். T.P:021 222 7442
கற்சுமி யூலை - ஓகஸ்ட் மாத வெளியீடுகள்
உங்கள் வழமையான முகவரியிடம் பெறலாம்.

**SPECIALLY DESIGNED COURSE FOR KIDS**

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை
எழுதிய மாணவர்களுக்கான
விசேட
கணினிப்பயிற்சி நெறிகள்
Level 1 to 4
புதிய பிரிவுகள் ஆரம்பம்
1ம் பிரிவு 26/08/2009
2ம் பிரிவு 28/08/2009
3ம் பிரிவு 30/08/2009
Time at 10.00 a.m

மேலதிக விபரங்களுக்கு பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்
DMI COMPUTER EDUCATION
No. 113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Tel. 021-222 4403

A/L Maths இல் 3 pass உள்ளதா?
இந்த வருடம் 3pass வரும் என்ற 100% நம்பிக்கை உள்ளதா ?

2013ல் நீங்களும் ஒரு பொறியியலாளர்
இந்தியாவில் பட்டப்படிப்பு
2009 A/L எடுத்த மாணவர்களும் Pending Result உடன்
இந்த வருடமே Engineering கற்கை நெறியில் இணையலாம்
இவ் வருடமே இணைந்து 1 வருடத்தை மிதப்படுத்துங்கள்
அரிய வாய்ப்பு இறுதிச் சந்தர்ப்பம் எம்மூடாக மட்டுமே
உடனடியாக தொடர்பு கொண்டு உங்கள் அனுமதியை உறுதிப்படுத்துங்கள்
V4 Educational Consultancy (Pvt) Ltd
Head Office- #7-1/1, W.A.Silva mawatha, Wellawatte, Colombo-06. 0773867257
#274, Pointpedro Road, Aanaippanthi Junction, Jaffna. 0212228374, 0775936343.

**You are not late**
பிரத்தியேக வகுப்புக்கள்
கணக்கீடு
HNDA, AAT,
B.Com, CBF, DBF
உங்கள் இடங்களில் தனியாகவோ, குழுக்களாகவோ கற்பிக்கப்படும்
உங்கள் ஆசிரியர்:
திரு.பாலகஜன்
(H.N.Dip. in. Acc)
தொடர்புகளுக்கு: 0777529113
BEACON - யாழ்.நகர்
College of Commerce

**உடனடி வெளிநாட்டு வேலை வாய்ப்பு**
**SAUDI ARABIYA**
கீழ்க்காணும் வெற்றிடங்கள் உள்ளன.
1. சுத்திகரிப்பாளர் Cleaner 2. கூலியாள்கள்-Labourers
3. தச்சன் Carpenter 4. மேசன் Mason
தொடர்புகளுக்கு :- SATHEES TRAVEL AGENCY
Uduvil Road, Manipay, Jaffna.
Reg. No. VSW/FIN/BR/936/I-2004
Satheesagency@gmail.com
T.P - 060 221 1958
021 4591625
077 6138942
Join with Air King (pvt) Ltd. (LIC. # 1791).
(87796)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.08.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org